# மலைத்தென்றல்



வெளியீடு

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள்

பதுளை

Uva Wellassa University

மலைத்தென்றல்


வான்புகழ் கொண்ட தமிழ்
மலைத்தென்றல்
வெளியீடு
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
பதுளை.

# நூன் முகம்


| | | |
|---|---|---|
| நூல் | : | மலைத்தென்றல் |
| நூலின் தன்மை | : | சிறப்பு மலர் |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | : | கலாநிதி ஜெயரஞ்சனி சுதா (சிரேஷ்ட விரிவுரையாளர்) |
| மலராசிரியர் | : | பு.டிலக்க்ஷன் |
| வெளியீடு | : | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் |
| வெளியீடு | : | 2017 |
| நூலின் அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 250 |
| பக்கங்கள் | : | 93 + xx |
| வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு | : | தேவி Printers 140/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 300 3030 |

# பொருளடக்கம்


1. ஆசிச்செய்தி i
2. வாழ்த்துச்செய்தி ii
3. Message of the Vice Chancellor iii
4. முத்தமிழாய் மணம்வீசும் 'மலைத்தென்றல்' iv
5. வாழ்த்துச்செய்தி vi
6. வாழ்த்துச்செய்தி vii
7. வாழ்த்துச்செய்தி ix
8. "மாண்புற முயல்பவர் மாணவராவார்" 01
9. மனித வள மேம்பாடு 10
10. பல்கலைக்கழக அனுமதி முறைமை: சில அவதானிப்புக்கள் 16
11. இறந்து தசை வடியும் நெடுந்தீவின் ஆன்மா 24
12. Postmen in the mountains கடவுளின் சிற்பிகள் 32
13. சட்டத்தின் முன் யாவரும் சமம் ஆனால் தேசவழமைச் சட்டத்தில்? 35
14. அழகிய உறவு 38
15. இருள் சூழ்ந்த வாழ்வு 43
16. என் பார்வையில் மலையகம் 47
17. கலையாத விழிகளுடன் 49
18. மகிழ்ச்சியும் உடல்நலமும் 52
19. நீருக்குள் நாம் - "மறை நீர்" 54
20. தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியற் பண்புகள் 57

21. தமிழ் தாயே....!! 64

22. ஆசை நாயகனின்வருடலிலே... 65

23. பல்கலைக்கழக வாழ்வு 67

24. பெண்விழியின் காத்திருப்பு 68

25. ஊவாவும் நானும் 70

26. தமிழினை மறந்தால் என்னையே கொல்வேன் 72

27. மலைநாட்டு வனப்பு 74

28. தாயே உன் பெயர் சொல்லும் போது .... 75

29. விடியலுக்கோர் சிந்தனை 77

30. அவள் 82

31. உனக்கான என் தேடல் 84

32. குப்பைத் தொட்டிக் குழந்தை 85

33. விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட..... 86

34. நான் கண்ட மலையகம் 88

35. என் உயிர்த் தமிழே 89

36. மலையக வாழ்வு 90

37. தாயே! என்ன பிழை 91

38. செய்தோம்? 91

39. மலை அகமும் புறமும் 93

# ஆசிச்செய்தி

ஓம் சக்தி மயம்



உலகிலுள்ள மொழிகளிலே மிகவும் தொன்மையான மொழி எம் தமிழ் மொழியாகும். இவ்வாறான எம் மொழியை வரும் காலத் தலைமுறையினரிடம் இலகுவாகக் கொண்டு செல்ல உதவுவது இயல், இசை , நாடகம் என்னும் முத்தமிழ் ஆகும். இவ்வகையில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர் கள் ஒரு முன் உதாரணமாகத் திகழும் வகையில் "மலைத் தென்றல்" எனும் நிகழ்வை நடத்துவது மிகவும் பாராட்ட வேண்டிய விடயம். இவர்களது பணி இன்று போல் என்றும் தொடரவும், மலைத்தென்றல் இம் மலையகம் முழுவதும் தவழவும் எல்லாம் வல்ல ரொக்கில் காளி அம்மன் ஆசிபுரிவாராக.

**சிவஸ்ரீ. பால பிரதீபக்குருக்கள்**

ஆலய பிரதம குரு

ரொக்கில் காளி கோவில்

# வாழ்த்துச்செய்தி



வளர்ந்து வரும் இக்காலகட்டத்தில் தமிழ் கலாசாரம் எந்த அளவிற்கு சீரும் சிறப்பும் பெற்றுக் காணப்படுகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அந்த வகையில் எமது நாடானது பல்லின சமூகத்தைக் கொண்டது. இருப்பினும் தமிழர்களாகிய நாம் எமது கலாசாரத்தின் சிறப்பினை உணர்ந்து அதனை அழியவிடாது பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். எனவே ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்களால் "மலைத்தென்றல்" என்ற நூல் வெளிவருவது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ் கலாசாரம் அழியாது சிறப்புப் பெற வேண்டும். அதனை கட்டிக் காக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் செயற்படுகின்ற உங்களுக்கு என்றும் என் ஆசிகள் உரித்தாகட்டும்.

**வணக்கத்துக்குரிய அருட் தந்தை ஜீட்நிசாந்**

புனித மரியாள் பேராலய

பங்குத் தந்தை பதுளை

# Message of the Vice Chancellor



*It gives me great pleasure in sending greetings to the annual cultural event – Malaithenral, organized by the UWU students.*

*Malaithenral, a Tamil cultural event initiated in 2014, provides a golden opportunity for UWU students to showcase their talents and capabilities in performing arts. In addition, the publication of a magazine along with the event enhances the creative writing skills of students.*

*While, displaying the unity and diversity of UWU family, the Malaithenral programme promotes the social and ethnic harmony within the UWU. It is my considered opinion, that this type of cultural programmes should be an integral part of the university life. I highly appreciate the effort taken by the organizing committee of the Malaithenral – 2017 to add value to the UWU life.*

*I wish the Malaithenral – 2017 all the success.*

**Dr. J. L. Ratnasekera**
*Vice Chancellor*
*Uva Wellassa University*

# முத்தமிழாய் மணம்வீசும் 'மலைத்தென்றல்'



ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 'மலைத்தென்றல்' நான்காவது ஆண்டிலும் வீசுகிறது. மலைத்தென்றல் வீசத் தொடங்கிய ஆண்டிலிருந்து அப் பெயரில் முத்தமிழ் ஆற்று கைப் பெருவிழாவும் சிறப்பு ஆண்டிதழ் வெளியீடும் நடை பெறுவது, இலங்கையின் வேறெந்த உயர்கல்வி நிறுவனங் களிலும் இல்லாத சிறப்புக்குரியது.

இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ள கலை மற்றும் பொழுதுபோக்கு விடயங்களுக்குள் மக்கள் மூழ்கிக்கொண்டிருக்கும் இவ் எண் ணிம யுகத்தில் நேரடி நிகழ்கலைகளில் பங்கேற்பவர்களையோ பார்வையாளர்க ளையோ தக்கவைப்பதற்கும் தட்டிக்கொடுப்பதற்கும் அவ்வப்போது, ஆங்காங்கு ஆற்றுகைகள் அரங்கேறவேண்டியுள்ளன. அதைப் பிரக்ஞைபூர்வமாகச் செய்ய வேண்டியுமுள்ளது. அது அனைவரினதும் கடமை. அதற்குப் பங்களிக்கும் கைங் கரியத்தில், பல்வேறு இடையூறல்களுக்கும் பளுக்களுக்குமிடையில் ஊவா வெல் லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் முனைப்புடன் செயற்படுவதைப் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட உந்து சக்தியாகத் திகழும் துணை வேந்தர் உள்ளிட்ட பல்கலைக்கழகச் சமூகம், அனுசரணை வழங்கும் நாடளாவிய புரவலர்கள், பதுளை வாழ் மக்கள், அரசியல்வாதிகள், ஊடகத்துறையினர், தமிழ் ஆர்வலர்கள் எனப் பலரதும் பங்களிப்பும் போற்றுதற்குரியது.

மலைத்தென்றலின் மணம் அகிலமெங்கும் பரவ அது அரங்கேறிய வேளைகளில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தவர்களும் காரணராகியிருக்கிறார்கள். அவ்வகையில் முதலாவதில் கலந்து சிறப்பித்த யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், முத்தமிழ் கலைஞர், பேராசிரியர் என். சண்முகலிங்கன் இரண்டாவதில் கலந்து பெருமைப்படுத்திய பெருந்தகை, கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் கலை கலாசாரப் பீடாதிபதி, தமிழுலகு போற்றும் நாடகமேதை பேராசிரியர் சி. மௌனகுரு கடந்த வருடம் கலந்து பெருமைப்படுத்திய பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், ஈழத்திலக்கிய வரலாற்றாசிரியர், விமர்சகர் பேராசிரியர் துரை. மனோகரன் ஆகியோர் வருகையால் மலைத்தென்றல் மகிமைபெற்றிருக்கிறது.

இம்முறையும் இனிவருங்காலங்களிலும் அனைவரதும் ஆசியால் மலைத்தென்றல் மென்மேலும் சிறப்பம்சங்களுடன் வீசவேண்டும் என வாழ்த்திக்கொண்டு இவ்வாண்டு மலைத்தென்றலுக்காகப் பாடுபட்ட அனைத்து மாணவர்களுக்கும் அன்புகலந்த பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க! வான் புகழ் கொண்ட தமிழ்!
வீசுக! மலைத்தென்றல்!

**மார்க்கண்டன் ரூபவதனன்**
சிரேஸ்ட விரிவுரையாளர்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
பதுளை.
கலாநிதிப் பட்ட ஆய்வாளர்
வெளிநாட்டு மொழிகள் மற்றும் பண்பாட்டுப் புலம்
சியாமன் பல்கலைக்கழகம், சீனா.

# வாழ்த்துச்செய்தி



"இலங்கையின் உள்நாட்டு அடிப்படை வளங்களுக்குப் பெறுமதி சேர்த்தல்" என்னும் தொனிபொருளைக் கொண்ட ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழகத்தின் மாணவர்களின் வருடாந்த வெளியீடாக "வான் புகழ் கொண்ட தமிழின்" புகழூக்கும் புகழ் சேர்க்கும் வகையில் வெளியிடப்பட்டு வரும் "மலைத்தென்றல்" மலர் இவ்வருடமும் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் தன்பொலிவு குறையாமல் வெளியிடப்படுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குறிஞ்சி நிலத்தில் தமிழின் பெருமையை நிலைநிறுத்தும் இந்த மலர் இம்முறையும் இனிவருங்காலங்களிலும் தன் தனித்துவத்துடன் தொடர்ந்து வெளிவரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**புத்தகம் இல்லை என்றால் சரித்திரம் மௌனமாகிவிடும் இலக்கியம் ஊமை ஆகி விடும்**


நன்றி

**தயாளன் வினூஜன்**

ஒழுங்கமைப்புக் குழுத்தலைவர்

மலைத்தென்றல் – *2016*

# வாழ்த்துச்செய்தி



தனக்கென தனிமிடுக்கினைக் கொண்ட என் அன்னைத் தமிழிற்கு விழாவெடுக்கும் ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக் கழக மாணவர்களின் மலைத்தென்றல் கலை கலாசார நிகழ் வானது இந்த வருடமும் முத்தமிழை நாற்றிசையும் ஓங்கி ஒலிக்கச் செய்ய எம் தலைவனின் ஆசி வேண்டி நிற்கின்றேன்.

வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்பதற்கு கலாசார பண்பாட்டு விழுமியங்களின் செயல் உருவாக்க காட்சிப் படுத்தல் என்பது மிகப்பெரிய எடுத்துக்காட்டாக அமைவதோடு மேலும் இன்னொரு இனக்குழுவின் அடக்குமுறை மற்றும் கலாசார திணிப்பு எனும் குற்றச் சாட்டு அளவில் மாத்திரம் நின்று விடாது. என்தாய்தமிழ் பண்பாட்டை எப்படி கட்டிக்காத்து வளர்த்தெடுப்பேன். என்பதற்கு மிக முக்கிய பங்களிப்பாக எமது மலைத்தென்றல் நிகழ்வு காணப்படும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

நிலைத்திருப்பதில் நிச்சயம் என்னவென்றால் புதுமை எனும் புரட்சியை புரிதலுடன் கையாள்வதே அந்த வகையில் எனது மூத்த சகோதரர்களால் பல புதுமைகள் புகுத்தி இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கும் நிகழ்விற்கு மேலும்

பலம் சேர்க்கும் வகையில் கலைத்திரள் மற்றும் கண்விழியே போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை சமூக மட்டத்தில் மேற்கொண்டு அடுத்த நிலைக்கு நிகழ்வை கொண்டு சென்றதில் அயராது பாடுபட்ட என் உடன் பிறவா சகோதரர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு எதிர்காலத்தில் இந் நிகழ்வு இன்னொரு படி ஏறிச் செல்ல வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன் -

**ஆ. கஜேந்திரன்**
தலைவர் மலைத்தென்றல்
விழாக்குழு - 2017



# வாழ்த்துச்செய்தி



மலை பொலிந்திருக்கும் ஊவா மாகாணத்தின் பதுளை நகரில் அமைந்திருக்கும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பன்னிரண்டாம் ஆண்டைக் கடந்திருக்கும் இவ்வேளையில். இவ்வருடமும் தமிழர் கலை கலாசாரத்தை பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றதுமான "மலைத்தென்றல் 2017" விழா மிகச் சிறப்பாகநடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

**"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு"**

என்ற குறளின் வழி, ஒருவன் எவ்வளவு படித்தாலும் நல்லது தான் என்பது மட்டுமல்ல,எத்தனை மொழிகளைப் படித்தாலும் நல்லது தான், எந்த நாடும் சொந்த நாடாகும் படியும், எந்த ஊரும் சொந்த ஊராகும் படியும் பல நாட்டு மொழிகளிலும் உள்ள பற்பல நூல்களையும் சாகிறவரையிலும் ஒருவன் படித்துக் கொண்டே இருந்தால் தான் என்ன என்று குறிப்பிடுகிறார்..இக்குறளை இந்நூலானது முடிவிலி காலம் நிலை நிறுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை..

இதுவரை காலமும் எமது பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து மட்டுமே ஆக்கங்கள் பெற்றிருந்த போதிலும் இந்த வருடத்திலிருந்து சிறு புதிய முயற்சியாக இலங்கையின் அனைத்து பல்கலைக்கழக தமிழ் மாணவர்களிடமிருந்தும் அவர்

களது உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வண்ணமாக ஆக்கங்களைப் பெற்றிருந்தோம்.. அது மட்டுமல்லாது மலைத்தென்றலை முன்னிட்டு முதன்முறையாக அகில இலங்கை ரீதியான பாடசாலை மாணவர்களின் சமூக அக்கறையை அவர்களின் எழுத்துத் திறமையினூடு உலகறியச்செய்யும் நோக்குடன் "கலைத்திரள் 2017" எனும் கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகள் நடாத்தியிருந்தோம். அவற்றில் மிகச்சிறந்த ஆக்கங்களை மலைத்தென்றல் நூலுடன் இணைத்து வெளியிடுவதில் பெருமை கொள்கின்றேன்.

இந்நூலின் உருவாக்கத்திற்காக அயராது உழைத்த அனைத்துப்பிரிவு மாணவர் கள், ஆசிச்செய்திகள்,வாழ்த்துரைகள் வழங்கிய மதகுருமார் ,துணைவேந்தர் கலாநிதி *J.L.*ரட்னசேகர, சிரேஸ்ட விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன், இந்நூல் உருவாக வழிகாட்டல் ஆலோசனை வழங்கிய சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயரஞ்சனி சுதா, இந்நூல் உருவாக வித்திட்ட ஏழாம் தலைமுறை சிரேஸ்ட மாணவர்கள் மற்றும் ஆக்கங்கள் தந்துதவிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலக்கியச் சுவையும் கற்பனை திறனும் சமூக அக்கறையும் கொண்டமைந்த இந்த நூலானது மக்களின் வாழ்வைச் செம்மைப் படுத்தும் சீரிய தொண்டினை ஆற்றிச்செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்நூலை சிறப்பாக வெளியிட பல்வேறு விதத்திலும் உதவி புரிந்த "தேவி *Printers*", விளம்பரதாரர், அனுசரணையாளர் உள்ளிட்ட அனைவருக்கும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் பேரன்புடன் நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

**புவிராஜ் டிலக் ஷன்**

இதழாசிரியர் மலைத்தென்றல் - 2017

# மலர்க் குழு



இருப்போர் :- (இ-வ) : பு.டிலக்க்ஷன், கலாநிதி ஜெயரஞ்சனி சுதா(சிரேஷ்ட விரிவுரையாளர்), கலாநிதி ஜெ.எல்.ரட்னசேகர (உபவேந்தர்), கு.அபிராம்(விரிவுரையாளர்), ஆ.கஜேந்திரன்

நிற்போர் :- (இ-வ) : மோ.குர்ஷாந், க.அபர்னா, ப.துசாந்தினி, ஆன்.டிலக் ஷனா ஜோசப், க.சரவணன், க.அனோஜன்

# விழாக் குழு



இருப்போர் :- (இ-வ) : ஆன்.டிலக்ஷனா ஜோசவ், கலாநிதி ஜெயரஞ்சனி சுதா(சிரேஷ்ட விரிவுரையாளர்), கலாநிதி ஜெ.எல்.ரட்னசேகர (உபவேந்தர்), கு.அபிராம்(விரிவுரையாளர்), ஆ.கஜேந்திரன்

நிற்போர் :- (இ-வ) : பு.டிலக் ஷன்,வ.கிரிசாந்தன்,ச.திவியன், ரா.நிதீஸ்ராம்,நா.ரம்மியா, ஜோ.அனுலா, லோ.தனோஜிகா, சி. வின்சன், க.அனோஜன்,க.சரவணன்



# "மாண்புற முயல்பவர் மாணவராவார்"

ஒரு மனிதனின் வாழ்க்கையில் மாணவப்பருவம் என்பது மிகவும் முக்கியமான பருவமாகும். ஆற்றல்களையும் அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக்கொள்ளவும், திறமைகளையும் திறன்களையும் வளர்த்துக்கொள்ளவும் எமக்கு கிடைத்துள்ள அருமையான வாழ்வியல் தான் மாணவப்பருவம். அம்மாவின் கரம் பிடித்து "அ" எழுதத் தொடங்கியதும் சின்னச் சின்ன பாதம் வைத்து முன்பள்ளிப் படிகள் ஏறியதும், சிட்டுக்குருவிகள் என வெள்ளைச் சட்டையுடன் பட்டாம் பூச்சிகளாக சுற்றி வருகின்ற பாடசாலைப்பருவமும் வாழ்க்கையின் இலக்குகளை எட்டும் பட்டதாரிகளாக பயிற்றும் பல்கலைக்கழக பருவமும் ஒரு மனிதனின் மாணவப்பருவத்தில் முக்கியமானவையாக அமைகின்றன.

இருந்தும் இன்றைய கல்வியல் சிந்தனைகள் ஒரு மனிதன் வாழும் நாள் முழுவதும் புதிது புதிதாக விடயங்களைக் கற்றுக்கொள்ளும் மனப்பாங்கு கொண்ட மாணவனாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன. "மாண்புற முயல்பவர் மாணவராவார்" என்பது ஆன்றோர்களின் வாக்காகும். எவனொருவன் வாழ்வின் உன்னதங்களையும் உயர்வுகளையும் அடைய வேண்டும் எனும் இலக்கோடு தனது மாணவப்பருவத்திலே அர்ப்பணிப்போடு உழைக்கின்றானோ அவனே உண்மையான மாணவன் ஆகின்றான். அதிலும் நன்மாணாக்கன் எனும் பெயரைப் பெற வேண்டுமாகவிருந்தால் வெறுமனே விடாமுயற்சியும் கடின உழைப்பும் இருந்தால் போதாது.

அவற்றோடு தாய் தந்தையரைப் போற்றவும், ஆசிரியர்களை ஆராதிக்கவும் பெரியவர்களை பேணவும்; நண்பர்களையும் உறவுகளையும் மதிக்கவும் கற்றுக் கொள்ளும் ஒருவனே நன்மாணாக்கன் எனும் அடைமொழிக்கு சொந்தக்காரனாகிவிடமுடியும். இவ்வாறான மாணவர்களினாலேயே வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க முடியும். இத்தகைய பண்பு கொண்ட மாணவ சமூகமே நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லத்தக்க நாளைய தலைவர்களாக நிமிரும் வல்லமையுள்ளவர்கள்.

உலகை மாற்றிப்போட்ட மனிதர்களான புத்தரும், காந்தியும், விவேகானந்தரும், அப்துல்கலாமும் ஆபிரகாம் லிங்கனும் தங்கள் மாணவப் பருவத்தில் நடந்து கொண்ட விதம் தான் அவர்களை வாழ்வில் உயர்த்தியது. சந்தேகங்கள் எழும் போது தயக்கமின்றி குருவிடமும் ஆசிரியரிடமும் வினாக்களை எழுப்பி விளக்கங் களைப் பெற்றுக்கொள்ளும் மாணவன் வித்தையில் சிறந்த விற்பன்னன் ஆகின் றான்.

'இளமையில் கல்" என்பது தமிழ் மூதாட்டி ஔவைக் கிழவியின் அருமருந்தான வாக்காகும். நாம் எமது இளம் பருவமாகிய மாணவப்பருவத்தில் கற்றுக்கொள்ளும் விடயங்கள் தான் வாழ்க்கை முழுவதும் எம்மை வழிநடத் துகின்றன. பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களில் இருந்தும் பாடத்திட்டங் களின் பிரகாரம் அறிவையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் ஆற்றலையும் பெற்றுக்கொள்கின்றோம்.

அத்துடன் நல்லொழுக்கம், தூரநோக்குச் சிந்தனை விடாமுயற்சி வெற்றியைக் கண்டு மமதையும் தோல்வியைக் கண்டு துவண்டும் விடாத மனம் என்பவற்றையும் பெற்றுக்கொள்ளும் மாணவனே வாழ்க்கையை வெற்றிகொள்கின்றான்.. ஒரு நன்மாணாக்கன் தான் கற்கின்ற கல்விக்கு ஏற்ற விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அதனையே திருவள்ளுவர் தனது திருக்குறளில் "கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்கின்றார்;.

அதுபோன்றே மனித வாழ்க்கையில் ஒழுக்கம் என்பதும் மிகவும் முக்கியமானது. ஒழுக்கமற்ற மனிதர்கள் தமக்கும் உலகத்துக்கும் பயனற்றவர்கள். இதனையே வள்ளுவர் "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார்.

இதனை விட வாழ்க்கையின் முழுமையான வெற்றிக்கு இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொண்டாக வேண்டும். எல்லோரினதும் இலக்கும் கல்வியை நிறைவு செய்த பின்னர் கைநிறையச் சம்பாதிக்க வேண்டும் என்பதாகவேயிருக்கும். இது தவிர்த்து ஒரு இலக்கு இருக்குமெனில் தாங்கள் பெரும்பாலான மனிதர்களில் இருந்து வேறுபட்டவர்களாகவேயிருப்பீர்கள். ஆனால் கைநிறையச் சம்பாதித்தல் என்பதற்கு அப்பால் ஒரு ஆளுமைமிக்க சமூகப் பிரஜையாக நிமிர்வதே முதன்மை நோக்காக இருக்க வேண்டும்;. ஏனெனில் ஆளுமை மிக்க மனிதர்களைத் தான் இன்றைய உலகம் எந்தத் துறையிலும் வரவேற்கக் காத்துள்ளது.

குறிப்பாக இன்றைய வேலைவாய்ப்புக் களங்கள் அறிவுக்கு மேலாக திறன்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. பொருளாதாரத்தை மையப்படுத்திய வாழ்வியல் திருப்தியை பெற்றுக்கொள்வதற்கு திறனுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாகிவிட்டது. அதுமட்டுமன்றி பலரின் மத்தியில் நாம் தனித்துவமிக்கவர்களாக திகழவும் திறன்களே காரணமாகின்றன.

இன்றைய உலகத்தின் போக்கு நின்று நிதானித்து சரியாக அனுமானித்துச் செல்ல முடியாத நிலையில் நாளுக்கு நாள் புதிய ரூபங்களைக் கொள்ளும் மாற்றுருத் தன்மை கொண்டதாகவே காணப்படுகின்றது. இயந்திர மயமாக மாறி வரும் வாழ்க்கை புதிய நுட்பங்களின் புகுத்தலினால் புனிதத்தை தொலைத்து வரும் பண்பாட்டு கலாசார வாழ்வியல் மரபுகள் என எமது நாளாந்த பொழுதுகள் நாம் எண்ணித் தீர்மானிக்க முடியாத திசை நோக்கிய பயணமாகவே அமைகின்றது.

உலக மயமாக்கலின் விளைவுகள் இன்று எமது உலை வரை வந்து தொலைத்து விட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றம் உலகத்தை உள்ளங்கையில் கிராமமாகச் சுருக்கித் தந்திருக்கின்றது. இவை அனைத்தினதும் அடிப்படையில் வாழ்க்கை இலகுவாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் வாழுதல் என்பது கடினமாக்கப்பட்டிருக்கிறது. இதுவே உண்மை. இந்த யதார்த்தத்தைப் புரியாமலேயே எமது நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய இடர்மிகு வாழ்வை இன்பமயமானதாக்கவும் வாழுதலில் ஓர் அர்த்தத்தை உருவாக்கவும் நாம் தயா ராகிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

போட்டித் தன்மை மிக்க உலகில் எமது நிலைத்திருப்பை நிலையானதாகவும் நீடித்ததாகவும் மாற்றிக் கொள்வதிலேயே இன்று போட்டி நிலவுகின்றது. அதற்காக

தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள விளைவோரும் அதன் விளைவான சவால்களை எதிர்கொள்ளத் துணிவோரும் அதற்காக கையில் ஏந்தியிருக்கும் ஆயுதமே அறிவு.

ஏனெனில் காலத்திற்குக் காலம் உலகின் பொருளாதாரத்தைத் தாங்கும் நிலைகளாக கைத்தொழில் மயமாக்கல் விவசாயப் பொருளாதாரப் பசுமைப்புரட்சி என்று மாற்றம் பெற்று இன்று அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்பிலே நாம் வந்து நிற்கிறோம். தற்போதைய உலகின் பொருளாதார சமமின்மையையும் தளம்பலையும் நிவர்த்தி செய்ய வல்ல உத்தியாகவும் வழியாகவும் அறிவே *(knowledge)* திகழ்கின்றது.

இருந்தும் இத்தகைய அறிவு என்பது எப்படி பயனுறுதி மிக்கதாகவும் அறிவின் விளைவுகள் எவ்வாறு வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கதாகவும் உள்ளனவோ அதனடிப்படையிலே தான் அறிவும் ஆளும் காரணியாகத் திகழ முடியும். எனவே அறிவை வளமாக்க அதனை மேலும் பெறுமதித்தன்மை மிக்கதாக்க திறன்கள் *(Skills)* அதனோடு இணைய வேண்டியது மிக மிக அவசியமானது.

**திறன்களின் அவசியம்**

இவ்விடயத்தை இலகுவாக விளங்க வைப்பதாக இருந்தால் கீழ் வரும் உதாரணத்தைக் கூறுவது பொருத்தமானதாக இருக்கும். அதாவது

நீச்சல் போட்டி எழுத்துப் பரீட்சையிலே ஒருவர் முதலிடம் பெறும் போது தான் நீச்சல் துறையில் முழுமையான அறிவு பெற்று விட்டதாக கருதுவது

நீந்துவது எப்படி என்று புத்தகத்தை வாசித்து அறிந்து கொள்ளும் ஒருவரால் ஒருபோதும் ஒழுங்காக நீந்த முடியாது. புத்தகத்தை வாசித்து விட்டு தண்ணீரிலே குதித்தால் அவரது முழு வாழ்வுமே காலியாகி விடும். நீந்துவது தொடர்பாக முழுமையான அறிவு அவரிடம் இருந்தாலும் அது தொடர்பான திறன் அவரிடம் இல்லாத போது அது தொடர்பில் எந்தவிதமான பிரயோசனமும் கிடையாது. தண்ணீரிலே மெதுவாக இறங்கி கைகளையும் கால்களையும் அடித்து நீந்தக் கற்றுக் கொள்ளும் ஒருவரினாலேயே நீந்த முடிகிறது. அவர் தண்ணீருக்குள் இறங்கியதன் விளைவாகவே நீந்த முடிவதுடன் நீச்சல் தொடர்பான அறிவினையும் பெற முடிகிறது.

இந்த உதாரணத்தின் மூலமாக திறன்களின் அவசியம் குறித்து இலகுவாகப் புரிந்து கொள்ள முடிந்திருக்கும்.

### தேவைப்படும் அவசிய திறன்கள்

மனிதர்க்குத் தேவையான திறன்களைப் பட்டியலிட விளையும் போது அது பல பக்கங்களாக நீண்டு செல்லும். ஒவ்வொரு மனிதரிடமும் ஒவ்வொருவிதமான திறன்கள் பொதிந்து கிடக்கின்றன. பலரது திறன்கள் அவர்களுக்கே தெரியாமல் ஒழிந்திருக்கின்றன.

நாம் இவ்விடத்தில் இன்றைய போட்டித் தன்மையான உலகையும் வேலை வாய்ப்புச் சந்தையையும் எதிர் கொள்ள வேண்டப்படும் திறன்கள் சிலவற்றை கவ னிப்போம்.

1) தொடர்பாடல் திறன்
2) முகாமைத்துவத் திறன்
3) தலைமைத்துவத் திறன்
4) ஆளுமைத் திறன்
5) தகவல் தொழில்நுட்ப திறன்
6) சவாலை எதிர்கொள்ளும் திறன்
7) இடரினைத் தாங்கும் திறன்
8) சமயோசித தந்திரோபாய திட்டமிடல் திறன்
9) முரண்பாட்டு முகாமைத்துவத் திறன்
10) புதிது புனையும் திறன்
11) நகைச்சுவைத் திறன்
12) ஆராயும் திறன்
13) செவிமடுக்கும் திறன்
14) தீர்மானம் எடுக்கும் திறன்
15) அமுலாக்கும் திறன்
16) சமூகமயமாக்கும் திறன்

மேற்குறித்த திறன்கள் உள்ள ஒருவனாலேயே இன்றைய உலகை வெற்றிகரமாக எதிர் கொள்ள முடியும்.

### தொடர்பாடல் திறன்

தொடர்பாடல்திறன்எனும்போதுஅதனுள்பலவிடயங்கள்உள்ளடக்கப்படினும் பிரதானமாக மொழியினை லாவகமாக கையாளுதலே முதன்மை பெறும். தாய் மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளில் உள்ள தேர்ச்சி ஒரு மனிதனை இன்னொரு மனிதனுக்கு சமனாக்கின்றது. எத்தனை மொழிகளை நாம் பேசும் திறன் மிக்க

வர்களாக இருக்கின்றோமோ நாம் அத்தனை மனிதர்களுக்கு சமமானவர்கள். மொழிப் புலமை எனும் போது குறிப்பாக ஆங்கில மொழிப்புலமை முக்கியமானதாக கருதப்படுகின்ற போதும் இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்கள மொழியை யும் பொருத்தப்பாட்டுடன் கையாளக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி அண்மைக்காலமாக வன்முறையற்ற தொடர்பாடல் என்ற விடயம் பற்றி அதிகம் பேசப்படுகின்றது. மற்றவர்களின் மனங்களை காயப்ப டுத்தாமல் எங்கள் உணர்வுகளைப் பரிமாறத் தெரிந்து கொள்ளலே வன்முறையற்ற தொடர்பாடல் என்ற அடிப்படையாயினும் இவ் விடயம் அதிகம் ஆழமானதும் அறியப்படவேண்டியதுமாகும்.

## இடரினைத் தாங்கும் திறன்

எம்மில் பலர் எமது பொறுப்புக்களின் வழி வரும் சவால்களைச் சந்திக்க திராணியற்று பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டி வருகின்றோம். இந்தத் தயக்கம் வாழ்வில் நாம் அடைய வேண்டிய உன்னதங்களையும் உயர்ச் சிகளையும் வீணாக விழுங்கி விடுகின்றது. எவனொருவன் சவால்களை சந்திக்க துணிகின்றானோ அவனால் மட்டுமே சோதனைகளைத் தாண்டி சாதனைகளைப் படைக்க முடியும். உலகில் பெரும் சாதனைகளை நிகழ்த்திய மனிதர்களுள் பலர் தங்கள் முயற்சிகளின் போது பல்வேறு இடர்களைச் சந்தித்து நிமிர்ந்தவர்களே. வலி தாங்கும் கற்களினால் மட்டும் தான் வணக்கத்துக்குரிய சிலைகளாக முடிகின்றது. மாறாக வலியை தாங்க மறுத்த கற்கள் வாசல் படிக்கற்களாக இருந்து மற்றவர் கால்களில் மிதிபடுகின்றது.

அது போன்றே எந்தவொரு விடயத்தையும் தன்னம்பிக்கையோடு பொறுப் பேற்று நடாத்தும் தற்துணிவு ஒரு மனிதனுக்கு அவசியமானது. அந்தத் தற்துணி வுடன் இணைந்ததாக தலைமைத்துவ முகாமைத்துவ ஆளுமைத்திறன்கள் இருப் பதுடன் பொறுப்பேற்றலின் விளைவாக விளையும் சவால்களுக்கு முகம் கொடுத் தல் இடரினைத் தாங்குதல் என்பனவற்றுடன் நோக்கினை இலகுவாகச் சென்ற டைய தந்திரோபாய திட்டமிடல் திறனையும் ஒரு மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

## முரண்பாட்டு முகாமைத்துவத் திறன்

இன்று எங்கும் மலிந்து கிடக்கும் விடயமாக முரண்பாடுகளே உள்ளன. வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் முரண்பாடு, பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் முரண்பாடு, பாடசாலையில் ஆசிரியருக்கும் அதிபருக்கும் முரண்பாடு, ஆசிரியர்களிடையே முரண்பாடு, பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களிடையே முரண்பாடு, மேலதிகாரிக்கும் அவருக்கு கீழே வேலை செய்பவர்களுக்கும் முரண்பாடு என எங்கும் முரண்பாடு மலிந்து கிடக்கின்றது. இவ் முரண்பாடுகள் சரியான முறையில் முகாமை செய்யப்படாவிடில் அவற்றின் விளைவுகள் ஒரு நிறுவனத்தின் அது (குடும்பமாகவோ பாடசாலையாகவோ அலுவலகமாகவோ இருக்கலாம்) செயற்பாட்டுத்திறனையும் அமைதியையும் சீர்குலைத்து விடுகின்றன.

முரண்பாடுகளை முகாமை செய்வது என்பது தனித்துவமான திறன். முரண்பாடுகளை ஆரோக்கியமான விதத்தில் மாற்றிக்கொள்ளலும் தீமை பயக்கத்தக்க முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவரலும் அவசியமானது. அதற்கான திறன்களை வாழ்க்கையிலிருந்தே அனுபவங்கள் வாயிலாகப் பெற்று வளர்தலே எதிர்காலத்தில் தொழில் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும். முரண்பாடுகளை முகாமை செய்து கொள்வதற்கும் நாம் வாழும், பணிபுரியும் சூழலை மகிழ்ச்சிகரமாக்கிக் கொள்ளவும் நகைச்சுவைத்திறன் அவசியமானது. ஆனால் எமது நகைச்சுவைத்திறன் மற்றவர்களின் மனங்களைப் புண்படுத்தி விடாத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டும்.

அனைவருக்கும் குறிப்பாக தலைமைத்துவப் பொறுப்புக்களில் இருக்கின்றவர்களுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான திறன் செவிமடுக்கும் திறன். நம்மில் பலர் மற்றவர்களின் கருத்துக்களுக்கு காது கொடுக்கத் தயாராக இல்லை. மற்றவர்களின் கருத்துக்களும் பெறுமதியானது என உணர்கின்ற ஒரு மனிதனால் தான் தனது கருத்துக்களைத் தெளிவாக முன்வைக்க முடியும். தலைமைத்துவத்தில் இருக்கின்றவர்களுக்கு பெரிய காதுகளும், சிறிய வாயும் இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இது செவிமடுக்கும் திறனின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. செவிமடுக்கும் திறன் என்பதிலிருந்து கிரகித்தல் திறன் என்பது வேறானது என்பதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

திறன்களில் அதி முக்கியமானது அமுலாக்கும் திறன். இந்த திறன் இலகுவில் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. பலர் நல்ல சிந்தனைக் காவிகளாக இருக்கின் றார்கள். பலரை இருத்தி வைத்து கேட்டால் இந்த உலகத்தை மாற்றவல்ல பல கருத்துக்கள் குறித்து மணிக்கணக்கில் பேசவல்லவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்களது சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் ஆற்றல் அவர்களிடம் வறுமையாகவே உள்ளது. செயல்வடிவம் பெறாத எந்த நல்ல சிந்தனையும் சிறுதுளியும் பயனற்றது. எனவே எமது சிந்தனைகளை அமுலாக்கும் திறன்களை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு விடயத்தை அமுலாக்க விளையும் போது நாம் சவால்களை சந்திக்கவும் தீர்மானங்களை எடுக்கவும் மற்றவர்களை வழிநடத்தவும் முரண்பாடுகளை முகாமை செய்யவும் வல்லவர்களாக இருக்க வேண்டியது அவசியமானது.

## திறன்களை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?

திறன்கள் என்பன ஒரு மனிதனிடத்தில் இயல்பாகவே ஏற்படுகின்ற விடயங்கள் எனினும் நாம் எமது முயற்சியினால் அவற்றினை வளர்த்துக் கொள்ள முடியம். தனியே புத்தகப் படிப்பும் பரீட்சைப் பெறுபேறுகளின் விளைவுகளுமே எமது வாழ்வைத் தீர்மானிக்கும் என்ற மனப்பக்குவம் முதலிலே மாற வேண்டும். இதனை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோர்கள் ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என இயம்பியிருந்தார்கள்.

எனவே நாம் பாடத்திட்டங்களை பாடமாக்கிக் கொள்வதாலோ அதனை நன்றாக விளங்கி பரீட்சைகளிலே நல்ல மதிப்பெண்களைப் பெறுவது மட்டுமே எமது வெற்றியை தீர்மானித்து விடப் போவதில்லை. நாம் கற்றல் செயற் பாடுகளுடன்சமாந்தரமாககல்விசாரா இணைப்பாட விதானச்செயற்பாடுகளையும் முன்னிறுத்திச் செல்லும் போதே திறன்களையும் பொருத்தமான அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு வகுப்பறை கற்றுக் கொடுக்க முடியாத விடயங்களை விளையாட்டு மைதானங்களும் திறந்த வெளிகளும் நண்பர்கள் வட்டமும் சிறந்த சமூகத்தொடர் பும் எமக்கு கற்றுக் கொடுக்கின்றன.

நாம் வகுப்பறைகளை விட்டு வெளியே வரும் போது வானம் எமக்காக திறந்திருக்கும். இந்த இடத்தில் வகுப்பறைகளை விட்டு வெளியே வருதல் என் பதை சிலர் வகுப்பறைகளை புறக்கணித்தல் அல்லது கைவிடல் என தவறாக அர்த்தம் கொள்ளக்கூடாது.

வகுப்பறைகளைத் தாண்டி வெளியே உங்களுக்காக காத்திருக்கும் விளையாட்டு வாய்ப்புக்கள் கழகங்கள் சங்கங்களின் செயற்பாடுகளில் பங்கேற்று தலைமை தாங்க கிடைக்கும் சந்தர்ப்பங்கள் நாடகம், இசை, கவிதை, பேச்சு, கட்டுரை, சிறு கதை, பொதுஅறிவுப்போட்டி எனப் பங்கேற்கக் கிடைக்கும் வாய்ப்புக்கள் என் பனவற்றை தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாது நாம் இன்னொரு மிக முக்கியமான விடயத்தையும் கவனத் தில் கொள்ள வேண்டும். மனிதன் ஒரு சமூக விலங்கு அவன் சமூகத்தோடு இணைந்தே வாழ வேண்டியுள்ளது. சமூகத்தை சாராது எந்த மனிதனும் வாழுதல் என்பது கடினமானதே. இதனை உணர்ந்து நாம் எமது சமூக மயமாகும் திறனை நிச்சயமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உலக மயமாக்கலின் பல விளைவுகள் இன்று பலரது சமூக மயமாகும் திறன்களை மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் அவர்களைத் தனிமைப்படுத்தி விட்டன. இன்று பல பெறுமதி மிக்க தனியார் துறை வேலைவாய்ப்புக்களுக்காக (வங்கிகள்) முதலில் திறன்களை மதிப்பிடும் நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டு தெரிவுசெய்யப்படும் சிலருக்கு மட்டுமே அறிவை மதிப்பீடும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படுகின்றன.இவ்வாறு அறிவைத் திறன் மிஞ்சும் சந்தர்ப்பங்களை பல தடவைகள் சந்திக்கநேரிடுகின்றது.

**முடிவு**

ஆழமாக ஆராயப்படவேண்டிய இவ் விடயம் தொடர்பாக சிறியளவில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தத்தக்கவிதத்திலேயே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் திறன்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அறிவோடு சமாந்தரமாக திறன்களையும் வளர்க்க வேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும். உலகளாவிய ரீதியில் சிந்திப்போம். ஆனால் உள்ளூர் அளவிலே செயலாற்றுவோம்

*(Think Globally but Act Locally)*

**இ.சர்வேஸ்வரா.**
*B.Sc(Hons) Spl in Sci & Edu MPA (PIM-SJPura)*
சிரேஸ்ட உதவிப் பதிவாளர்
ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக் கழகம்



# மனித வள மேம்பாடு

**(1). அறிமுகம்**

மனித வள மேம்பாட்டுத்துறை அல்லது மனித வள மேம்பாடு ஆகியவை மனித வளங்களை இயக்குவதில் பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. இதற்கமைய முன்னைய மனித வள மேம்பாட்டுத்துறையானது பணியாளர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வடிவமைக்கப்பட்டுள்ள ஊதியம், பயிற்சி மற்றும் பிற செயற் பாடுகளை வலியுறுத்துவதாகக் காணப்பட்டது. ஆயினும் தற்போதைய மனித வள மேம்பாட்டுத்துறையானது நிர்வாகத்தின் நடப்பு வரிசை சிந்தனையை மேம்ப டுத்துவதோடு அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கும், மேலும் திறனை உண்மையானதாக்கும் திறன் படைத்தவர்களாகவும் மாற்ற உதவுகிறது. மனித வளங் களின் வழியில் இந்த மாற்றத்தின் காரணங்களாக மனித வளங்கள் போட்டியிடும் ஆதாயங்களின் ஆதாரங்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல் பணியாளர்களின் பணியிடங்களை நிறைவுற்றும் பணியாளர்களாக இருக்கும்; நிலைமை ஏற்பட் டுள்ளது. இங்கு முக்கிய குறிப்பாக மனித வள மேம்பாட்டுத்துறையில் தற்போதைய நிலைமையானது ஊழியர்களை மதிப்பு மிக்க படைப்பாளிகளாகவும் மூல வள அடிப்படையிலான மதிக்கத்தக்க சொத்தாகவும் தந்திரோபாய மனித வள முகா மைத்துவமாகவும் கருதுகிறது.

மனித வள மேம்பாட்டுத்துறையானது ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி, மதிப்பீடு, ஊதியம் ஆகியவற்றின் தொடக்கம் மற்றும் பணியாளர் மேம்பாட்

டிற்கான பொழுதுபோக்கு, ஊக்குவிப்பு அம்சங்களுக்கு விரிவுபடுத்தல் ஆகிய பல்வேறு செயற்பாடுகளை வழங்குகிறது. உண்மையில் மூல வள அடிப்ப டையிலான நோக்கு அல்லது தந்திரோபாய மனித வள முகாமைத்துவ முன்னு தாரணத்தின் வெளிப்பாட்டிற்கான ஒரு காரணம் சேவைத்துறையின் வருகையுடன், சேவைத்துறையில் அதிகமாக நிறுவனங்களின் வருமானம், மற்றும் ஊழியர்கள் வெறும் நிலம், தொழிலாளர்கள் மற்றும் மூலதனம் போன்ற உற்பத்தி காரணிகளாக இல்லை. உண்மையில் அவர்கள் போட்டி நன்மைகளின் ஆதாரங்களாக காணப்படுகின்றனர். இது பல நிறைவேற்று பணியாளர்களை அவர்களின் பிரதான சொத்துக்களை அழைப்பதோடு அதற்கேற்ப தங்கள் பங்களிப்பை மதிப்பி டுவதையும் வகைப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக பல தகவல் தொழிநுட்ப மற்றும் நிதி நிறுவனங்கள் வழமையாக பணியாளர்களை மதிப்புமிக்க படைப் பாளர்களை மதிப்புமிக்க படைப்பாளர்களாகவும், மதிப்பீடு செய்கின்றவர் களிடமிருந்தும் பணியமர்த்தியுள்ளன. ஆகவே மேற்குறிப்பிட்டவற்றைக் கொண்டு மனித வள மேம்பாட்டுத்துறையானது நிறுவனங்களுக்கு முக்கியமானதாகவும் மற்றும் முக்கியமானஓர்துறையாக மாறிவிட்டது. மற்றும் நிறுவனஅமைப்புக்களில் மற்ற ஆதரவளிப்பு செயற்பாடுகளை இடையில் எடுத்துச் செல்லும் ஒரு செயற்பாடாக மாறிவிட்டது. உண்மையில் இது போட்டியின் நலன்களின் முக்கிய இயக்கியாகும்.

அதற்கும் மேலாக மனித வள மேம்பாட்டுத்துறையானது இப்போது பணி யாளர்களின் திருப்திக்கு அப்பால் செல்லும் ஒரு பாத்திரத்தை எடுத்துள்ளது. அதற்குப் பதிலாக, பணியாளர்கள் வேலை நிலைமை மற்றும் சூழலைக் குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளதை உறுதிப்படுத்தி, தங்கள் வேலையை முன் கொண்டு செல்வதை உறுதிப்படுத்தியுள்ளது. இது மனித வள முகாமையாளர் மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறையின் ஊழியர்கள் தங்கள் நாளாந்த கடமையை நிறை வேற்றுவதில் மட்டும் நின்றுவிடாது, நிறுவனத்தில் முன்னேற்றத்திற்கான ஓர் பங்குதாரராக மாறியுள்ளனர். மனித வள முகாமையாளர்கள் தற்போது வழமையாக செயற்பாட்டு முகாமையாளர்களையும் தொடர்பு கொண்டு அதிக வேலை திருப்தி மற்றும் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்துகின்றனர்.

**(2). மனித வள மேம்பாட்டில் ஊக்குவித்தலுக்கான முக்கியத்துவம்**

மனித வள மேம்பாட்டிலுள்ள கோட்பாடுகளில் ஊக்கப்படுத்தல் முக்கிய மானதொன்றாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான நிறுவனங்களில் பொதுவாக

ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படாத காரணத்தால் அவர்களின் செயல்திறன்களில் பின்னடைவு ஏற்படுகின்றது. இதன் காரணமாக தற்போது நிறுவனங்கள் ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக பயிற்சி அமர்வுகளுக்கும், பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்வதில் அதிகளவு பணத்தைச் செலவிடுகின்றன. ஊக்கமானது ஒரு நபர் வேலை செய்து கொண்டிருக்கும் ஆசை அல்லது இயக்கம் என வரையறுக்கலாம். உதாரணமாக, ஒரு பணியை எதிர் கொள்ளும் போது, ஒரு குறிப்பிட்ட தனிநபர் தேவைகள் பூர்த்தி செய்யப்படுமா அல்லது இல்லையா என்பதை நிர்ணயிக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதாகக் காணப்படுகின்றது. மேலும், ஊக்கம் இல்லாமை காரணமாக, போட்டித்திறன் குறைதல் மற்றும் போட்டித்திறன் இழப்பு ஆகியவற்றிற்கு வழிவகுக்கின்றன. இதன் காரணமாகவே மனித வள முகாமையாளர்கள் ஊழியர்களிடம் இருந்து பணியைப் பெற்றுக்கொள்வதற்காக அதிக ஊக்கப்படுத்தலை அவர்களுக்கு வழங்குகின்றனர். ஊக்கப்படுத்தலோடு தொடர்புடைய பல கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவையாவன ஹெர்பெர்க் சுகாதார தத்துவக் கோட்பாடு, மாஸ்லோவின் தேவைப்பாடு, மற்றும் மெக்ரிகெர்யின் எக்ஸ் மற்றும் பை கோட்பாடு.

ஹெர்பெர்கின் சுகாதாரக் கோட்பாடானது, பணியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், சில நிலைமைகள் இருக்க வேண்டும் மற்றும் இந்த நிலைமைகள் அல்லது சுகாதார காரணிகள் இல்லாதிருந்தால் ஊழியர்கள் தானாகவே ஊக்கப்படுத்தப்படுகின்றனர் என்பதை வழிமொழிந்து நிற்கிறது. இக் கோட்பாட்டின் முக்கிய கருத்தாக சுகாதார காரணிகளின் முன்னோடி செயற்திறன் ஒரு முன்நிபந்தனையாகவும் மற்றும் இது ஒருவரின் செயற்திறனை நிர்ணயிப்பதாக காணப்படாது மறுபுறமாக இந்தக் காரணிகள் இல்லாவிடில், உண்மையில் பணியாளர்கள் ஊக்கப்படுத்தப்பட மாட்டார்கள் என்பதை வலியுறுத்துகின்றது. எனவே ஒரு நிறுவனத்தில் கீழ் நிலை ஊழியர்கள் வேலை செய்யும் அடிப்படை நிலைமைகள் காணப்பட்டால் அது அவர்களின் செயற்றிறனை அதிகரிக்கும்.

மாஸ்லோவின் தேவைப்படிநிலைக் கோட்பாடு தனிநபர்கள் அடிப்படைத் தேவைகளின் படிநிலையின் படி ஊக்கப்படுத்தல் மற்றும் பின்னர் அங்கீகாரம் தேவை இறுதியாக, ஒரு பார்வை மெய்யாக்கு தேவை மற்றும் ஆளுமை உயர்ந்த நிலைக்கு அடைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. இக் கோட்பாட்டின் முக்கிய கருத்தானது, ஒவ்வொரு கட்டத்திலும் தேவை எவ்வளவு நன்றாக அடையப்பட்டுக்காணப்படுகின்றது என்பதைப் பொறுத்து தனிநபர் ஒரு நிலையில்

இருந்து மற்றொரு நிலைக்கு முன்னேற்றம் அடைகின்றார்கள். எனவே நிறுவனங்கள் ஒவ்வொரு நிலையிலும் ஊழியர்களின் தேவையானவைகளைக் கவனித்துக் கொள்வதை உறுதிப்படுத்துவதன் ஊடாக அவர்களை ஏணியின் மேல் ஏறுவதற்கு மட்டுமல்லாது அவர்களை உச்சநிலை மெய்யாக்கல் தேவை மட்டத்தை அடைவதற்கும் உதவ வேண்டும். இறுதியாக மெகிரெகரின் ஊக்கத்தின் கோட்பாடு, பல முகாமையாளர்களால் விரும்பப்படும் கரட் மற்றும் தடி அணுகுமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் கோட்பாடு, பணியாளர்களுக்கு நன்மைபயக்கும் ஒரு கௌரவமான உத்தி மூலதனத்தால் ஊக்கமளிக்கும் மற்றும் மோசமான பணிக்காக அவர்களை தண்டிப்பதாக கூறுகின்றது. இந்த எதிர் விளைவுகளுக்கு எதிர்மறையாக ஊழியர்கள் மோசமாக செய்வதற்கு எதிராக ஒரு வலுவான உந்து தலைக் கொண்டுள்ளனர் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

ஆகவே ஊழியர்களின் ஊக்கம் நிறுவனங்களின் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. பணியாளர்களை அதிகளவு ஊக் கப்படுத்தல் மூலமே அவர்களின் அழைப்பை தொடர் தேர்ச்சியாக அதிகரிக்க முடியும். பொதுவாக நிறுவனங்கள் ஊழியர்களை ஊக்குவிக்க ஓர் மூலோபாயமாக இழப்பீடு மற்றும் நலன்களில் கவனம் செலுத்துகின்றது. இருப்பினும் இக் கட் டுரையில் நாம் பார்த்திருப்பதைப்போலவே ஊழியர்களும் ஊதியம் தவிர வேறு காரணிகளால் ஊக்கத்தைப்பெற்றுள்ளனர். எனவே மனித வள மேம்பாட்டு செயற் பாடு இந்த உண்மையை அறிந்து அதன்படி தமது செயற்பாடுகள் மற்றும் நடவ டிக்கைகளை எடுக்க வேண்டும். இதன் படி வேலைத்திருப்த்தி மற்றும் பூர்த்தி செய்யவேண்டிய தேவை, ஊழியர்களுக்கு தங்கள் திறனை அடைவதற்கும் ஊக் கப்படுத்தல் மூலம் உதவ வேண்டும்.

### (3). நிறுவனங்களில் காணப்படும் கற்றல் வசதிகளில் மனிதவள மேம்பாட்டுத்துறையின் பங்கு

கற்றல் பலவிதமான விதிமுறைகள் மற்றும் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இக்கட்டுரையானது ஓர் நிறுவன அமைப்புச் சூழலில் கற்றுக்கொள்ள வேண்டிய அர்த்தத்தை அறிந்து கொள்ள முனைகிறது. ஒரு நிறுவன சூழலைக் கற்றுக் கொள்வது பற்றி கவனிக்க வேண்டிய முக்கிய நோக்கம் என்னவென்றால் ஊழியர்கள் தொடர்ச்சியாக கற்றுக் கொள்வதும் திறன்களைத் தேர்ந்தெடுப்பதும் தவிர அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாது விட்டால் அவை

ஊழியர்களையும் நிறுவனத்தையும் அவற்றின் போட்டித்திறனைப் பின்நோக்கித் தள்ளி குறைவடையச் செய்யும். குறிப்பாக தொழிநுட்பம் மற்றும் நிதியியல் துறைகளின் வெளிப்புற சூழலானது தொடர்தேர்ச்சியாக மாற்றமடைந்து வருவதால் கற்றல் என்பது தொடர்தேர்ச்சியாக இடம் பெறுகின்ற ஓர் முன்னுரிமையான செயற்பாடாக காணப்படுகின்றது. ஆகவே ஊழியர்களின் கற்றலானது கற்றல் மனித வள செயற் பாட்டின் மூலமாக எதிர்ப்பாக்கப்படாது விட்டால் அது நிறுவனங்களின் போட் டித்தன்மையை பின்னோக்கி இட்டுச் செல்லும். ஆகவே மனித வள மேம்பாட்டுச் செயற்பாடானது, நிறுவன சூழலில் கற்றல் நடவடிக்கைகளை எளிதாக்குவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றது.

கற்றல் நடவடிக்கையானது பயிற்சியின் மூலமும் வேலையை முன்னெடுத்துச் செல்வதன் முலமும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக காணப்படுகின்றது. வேலையில் கற்றல் என்பது பெரும்பாலும் சக ஊழியர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களிடம் இருந்து அவர்களின் சிறப்புத் திறன்களையும் பண்புகளையும் பகிர்ந்து கொள்வதன் மூலம் கற்றுக்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலும் பல நிறுவனங்கள் கூட்டுறவு மற்றும் ஒத்துழைப்புடன், ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான ஓர் கூட்டுப்பணி கலாசாரத்தை தமது நிறுவனத்தில் ஊக்குவிக்கின்றது. ஆகவே மனிதவள மேம்பாட்டுச் செயற்பாடானது. நிறுவனங்களின் கற்றல் நடைபெறு வதற்கும் ஊழியர்கள் அந்த வேலையை கற்றுக்கொள்வதையும் உறுதி செய்ய வேண்டும்.

அறிவொளியின் அடுத்த அம்சமானது மனிதவள மேம்பாட்டுச் செயற்பாடானது, தொழில்நுட்ப திறமைகளிலும், மென் திறன்களையும் வளர்ப்பதற்காக கால அள வில் பயிற்சிகளை நடத்த வேண்டும் என்பதோடு அவற்றின் ஊழியர்களை மேலாண்மை அறிவியல்களில் சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் கருத்தாக் கங்களுடன் அறிமுகப்படுத்த வேண்டும். மேலும் மென் திறன்களைப் பயிற்று வித்தல் என்பது, தலைமைச் சவால்களின் முன்னனியில் பணியாற்றுவதை உறுதிப் படுத்துவதற்கும், நிறைவேற்றுவதன் மூலமாகவும் வெற்றியை அடைவதற்கும் ஒரு வழிவகையாகும். பிட்லிட்டி*(Fidelity)* மற்றும் ஐபிஎம்*(IBM)* போன்ற பல பன் னாட்டு நிறுவனங்களில் ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக் கையிலான பணிநேரப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எனவே அவை சிறந்த மற்றும் தொழிநுட்ப மற்றும் மென் திறன்களின் வெட்டு விளிப்பில் அவர்கள் இருந்து பணியாற்ற உதவுகிறது. மேலும், கற்றல் என்பது அனைத்து மட்டங்களிலும் தொடரும் ஒரு செயலாகும், எனவே மனித வள மேம்பாட்டுச் செயற்பாடு அனைத்து

மட்டங்களிலும் கிடைக்கச் செய்து அதை ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

ஆகவே இவ்வாறான சகல மட்ட கற்றல் நடவடிக்கைகளை, நடுத்தர முகாமைத் துவம் மற்றும் மூத்த முகாமைத்துவ முகாமையாளர்களுடன் அவர்களது அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு மூத்த நபர்கள் மற்றும் தனிநபர்களாக வளர்வதற்கும் மற்றும் நிறுவன ரீதியாக அவற்றை அதிகரிக்க உதவுதல் மூலமும் நடைமுறைப்படுத்தலாம். கற்றல் என்பது தனிநபருக்குள் உள்ள ஓர் இயக்கியாகவும் மற்றும் வெளிப்புற முகவர்கள் மூலம் ஊக்குவிக்கும் ஒரு செயல் முறையாகவும் காணப்படுகின்றது. ஆகவே நிறுவன ஊழியர்கள் நிறுவனம் மற்றும் நிறுவனங் களின் வெளிப்புற சூழல் மாற்றங்களை எதிர் கொள்வதற்கு கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுதல் என்பது இன்றைய சமகால சூழலில் ஓர் அவசியமானதொன்றாக காணப்படுவதோடு, இவ்வாறான கற்றல் நடவடிக்கையானது அவர்களின் மேற் பார்வையாளர்கள், சக ஊழியர்கள் மற்றும் நிதி முகாமையாளர்களினால் ஊக்கு விக்கப்பட வேண்டும். ஆகவே அறிவு மற்றும் நிபுணத்துவமானது கற்பிப்பாளர் களிடமோ அல்லது வரம்பிடப்பட்டவர்களிடமோ மட்டும் வைத்துக் கொள்ளாமல் அதை மற்றவர்களிடையே பகிர்வதன் மூலம் நிறுவனத்தில் காணப்படும் மனித வளத்தை மேம்படுத்துவதன் மூலம் அவற்றை அபிவிருத்தி செய்ய முடியும்.

இறுதியாக பணியாளர்கள் தங்களைப்பற்றிய நுண்ணறிவைக் கண்டறியும் போது அங்கு சிறந்த கற்றலானது நடைபெறுகின்றது. ஏனெனில் மனித வள மேம் பாட்டுட்டு செயற்பாடு அனைத்து முயற்சிகளும் ஊழியர்களின் படைப்பாற்றலை தூண்டுவதன் மூலம் அவர்களின் கற்றலுக்கான தாக்கத்தை ஊக்குவிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இறுதியாக, கற்றல் நிறுவனங்கள், கொந்தளிப்பு மற்றும் நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் வளருகின்றன. எனவே ஊழியர்கள் மற்றும் நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புச் செய்வதனூடாக வளர்ந்து வருவதற்கான அனைத்து முயற்சிகளும் மனித வள மேம்பாட்டுத்துறை யால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கலாநிதி. ஜெயரஞ்சனி சுதா**
சிரேஸ்ட விரிவுரையாளர்
முகாமைத்துவப்பீடம்
ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்



# பல்கலைக்கழக அனுமதி முறைமை: சில அவதானிப்புக்கள்

**முகவுரை**

கல்வி முறைமைகள், கலைத்திட்டங்கள், நவீன உலகப் போக்குகள் என்பன மாறி வருகின்ற வேகத்திற்கு, உலகின் தேவைக்கு ஏற்ப பல்கலைக்கழக அனுமதி முறைமை இயைந்து செல்லவேண்டியது அவசியம். பாடசாலை தொடக்கம் பல் கலைக்கழகம் வரை இலவசக் கல்விக் கொள்கையில் நீண்டகாலம் நின்றுபிடிக்கும், தேசிய பல்கலைக்கழகங்களுக்குப் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்து மாணவர்களை உள்வாங்கும் இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் பல்கலைக்கழக அனுமதி முறைமை தெளிவுடையதாக இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

**அனுமதி முறைமைகள்: சாதக பாதகங்கள்**

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதி முறைமை வரலாற்றை எடுத்துக் கொண்டால், காலத்துக்குக்காலம் அந்த முறைமையில் மாற்றங்கள் நிகழ்ந் துள்ளமையை அவதானிக்கலாம். சில மாற்றங்கள் நாட்டைப் போர்க்களமாக்கின என்பதையும் மறந்துவிடமுடியாது. உள்நாட்டு உடனடி அரசியல் அபிலாசைகள், உலக நிதி முகவர்கள்களின் ஆலோசனைகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றனவிற்கு ஏற்ப நாட்டின் கல்விக் கொள்கைகளில்

மாற்றங்களை ஏற்படுத்துகின்றபோது பாதகங்களே அதிகம் நிகழ்ந்துள்ளன என்பதற்கு இலங்கையில் உதாரணங்கள் குவிந்து கிடக்கின்றன.

கல்வி என்பது ஒரு படிநிலை - முன்னேறுதன்மை கொண்டது. துறைகள் (பாடங்கள்) பலவாயினும் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனி படிநிலை உண்டு. இந்தப் படிநிலை குடும்பம், பாடசாலைச் சமூகம், கலைத்திட்டம், கற்றல் கற்பித்தல் நடவடிக்கை, பரீட்சையும் பெறுபேறும், உயர்கல்வி வாய்ப்பு எனப் பல விடயங்களை உள்ளடக்கியது. இந்தப் படிநிலைப் போக்கிலே பல தரப்பினர், நிறுவனங்கள் ஈடுபடுகின்றனர். இத்தரப்பினர் மத்தியில் ஓர் இணைப்பு, ஊடாட்டம், தொடர்பு இருப்பதும் அவசியமாகின்றது. இவ் இணைப்பு இல்லாவிடின் கல்வி சீர்குலையத் தொடங்கும்.

போட்டிப் பரீட்சை மூலம் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்கும் க.பொ.த. உயர்தரக் கலைத்திட்டத்தை தயாரிப்பவர்கள் தேசிய கல்வி நிறுவகத்தினர் கற்கைச் சாதனங்களைத் தயாரிப்பவர்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினர் பரீட்சைகள் நடத்துபவர்கள் பரீட்சைத் திணைக்களத்தினர் பட்டக் கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துபவர்கள் பல்கலைக்கழகத்தினர் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்க விண்ணப்பத்தினைக் கோருபவர்கள், அனுமதி வழங்குபவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர் விண்ணப்பிப்பவர்கள் மாணவர்கள். இம் மாணவர்கள் அரச பாடசாலைகளில் கல்வி கற்பவர்கள் ஒருசிலர் தனியாகவும் கற்றுத் தேறுகிறார்கள்.

பல்கலைக்கழக அனுமதி முறைமை என்பது மேற்கூறிய பல துறையினருடன் தொடர்புடையதாக இருக்கின்றமையால். ஏற்கனவே உள்ள அனுமதி முறைமைகளுடன் திடீரென அமுல்ப்படுத்துகின்ற அனுமதி முறைமைகளும் முன்கூட்டியே மாணவர்களைச் சென்றடையவேண்டும். அதேவேளை அனுமதி முறைமையில் கையாளப்படும் விதிகள், நுட்பங்களை அனைவரும் அறியும்படி செய்தலும் வேண்டும்.

தற்போதைய அனுமதி முறைமையின் அடிப்படையான இஸற் புள்ளி முறை பற்றி எத்தனைபேர் தெளிவுடையவர்களாக இருக்கிறார்கள்?

இஸற் புள்ளி முறைக் கணிப்பீட்டின் அடிப்படைகள் புரிந்துகொள்ளப்படாமல்

க.பொ.த. உயர்தரப் பாடத்தெரிவில் - குறிப்பாக கலைப்பிரிவு – தவறான அல்லது அறியாமையால் பலர் குழப்பநிலையடைந்துள்ளமையை அனைத்திடங்களிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஒரு பாடத்துக்குரிய இஸற் புள்ளியானது, குறித்த ஆண்டுக்குரிய க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பின்னரும் (பெறுபேறு வெளியிடும்போது), ஒரு கற்கைநெறிக்குரிய இஸற் புள்ளி அடிப்படையிலான வெட்டுப்புள்ளி பல்கலைக் கழக அனுமதிக்கென பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்தபின்னரும்தான் நிர்ணயிக்கப்படுகின்றது அல்லது நிர்ணயிக்க முடியும் என்கிறதான அடிப்படையை பாடசாலைச் சமூகமும், பெற்றோரும் அறிந்துவைத்திருக்கவேண்டியது மிக அவசியமாகிறது.

இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கான அனுமதி இரண்டு வகையில் இடம் பெறுகிறது.

1) பீடங்களுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்தல்

2) கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்தல்

பீடங்களுக்கு மாணவர்களைத்தெரிவுசெய்கின்ற முறை பழமையானது.

தற்போது ஒரு பீடத்துள் புதிதாக அறிமுகப்படுத்தும் கற்கைநெறிக்கான மாணவர்களைத் தனியாக, மேலதிகமாக, வேறுபடுத்தி அனுமதிப்பதையும் காணலாம். இதில் சில விடயங்கள் முக்கியமாகின்றன. முக்கியமான நன்மை சில கற்கை நெறிகளுக்கு சகல பிரிவு மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் என்பதாகும்.

கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதில் பல முறைகள் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

1) க.பொ.த. உயர்தரத்தில் குறிப்பிட்ட பிரிவுகள்

2) க.பொ.த. உயர்தரத்தில் குறிப்பிட்ட பிரிவுக்குள் குறிப்பிட்ட பாடங்கள்

3) க.பொ.த. உயர்தரத்துடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் தேவையானதில் சித்தி அல்லது திறமைச்சித்தி

4) உளச்சார்புப் பரீட்சை

5) செய்முறை, நேர்முகத் தேர்வுகள்

இம்முறைகள் கற்கைநெறிகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. இவற்றால் நன்மைகள் இருக்கின்ற அதேவேளை சில பிரச்சினைகளும் சிக்கல்களும் தெளிவின்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

1.கற்கைநெறிக்கு க.பொ.த. உயர்தரத்தில் குறிப்பிட்ட பிரிவுக்குள் குறிப்பிட்ட பாடங்கள் குறைந்தபட்சமாகக் கோரப்படுகின்றபோது கற்கைநெறிக்கு மிகப் பொருத்தமான க.பொ.த. உயர்தரப் பாடங்கள் கோரப்படாமை அப்பாடத்தைப் பயின்ற மாணவர்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது அந்நிலை இம்முறையும் தொடர்ந்திருக்கிறது. உதாரணமாக: தொடர்பாடல்கற்கைகள் (திருகோணமலை வளாகம், ஸ்ரீபாளி வளாகம்)

இக் கற்கை நெறிகளுக்காக க.பொ.த. உயர்தரப் பாடமான தொடர்பாடல் ஊடகக் கற்கைகள் பாடத்தை ஒரு நிபந்தனையாக, கட்டாய நிபந்தனையாகக்கூடச் சேர்க்கின்றபோது இப்பாடத்தின் மீதான கேள்வி, விருப்பு மற்றும் திருப்தி என்பன ஆசிரியர், மாணவர்களுக்கு ஏற்படும் என்பது உண்மை. அத்துடன் பல்கலைக் கழகத்தாருக்கும் தமது கற்கைநெறியின் தரத்தைப் பேணவும் உயர்த்தவும் உதவும் என்பதை மறுதலிப்பது கடினமே.

2) கற்கைநெறிகளுக்குப் பொருத்தமற்ற சில பாடங்களை மாணவர்கள் எடுத்தி ருக்கலாம் எனக் கோருவது. உதாரணமாக தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் (வவுனியா வளாகம், ரஜரட்டை பல்கலைக்கழகம்) கற்கைநெறிக்கு "கீழ்வரும் பாடங்களில் ஒரு பாடத்திலாவது 'சீ' தரம் பெற்றிருக்கவேண்டும்" என்ற பாடங்களில் சமஸ்கிருதம், இலத்தீன், சங்கீதம் முதலிய பாடங்களைக் கோருவதன் அரசியல் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும்.

3) இடைநிலைக் கல்விக்கொள்கையில் கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் என்பவற்றின் முக்கியத்துவம் குறித்து இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றாது, கடந்தவருடம் கணிதம், தாய்மொழி. கட்டாயமில்லை என அரசியல் ரீதியிலான முடிவுகள் மூலம் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியமைபோல கல்விப் படிநிலையில் முன்னேற்றகரமான போக்கை முன்கூட்டியே உணர்த்தாது,

கடைசி நேரத்தில் அனுமதிக்கான குறிப்பிட்ட பாடங்களைக் கோருவது மாணவர் களுக்கு ஏமாற்றத்தையே கொடுக்கின்றது.

குறிப்பிட்ட ஓர் ஆண்டைக்குறிப்பிட்டு இன்ன *(2020)* ஆண்டிலிருந்து பல்கலைக் கழக அனுமதிக்கு ஆங்கிலம் ஒரு நிபந்தனையாகக் *(க.பொ.த. சா.த, உ.த)* கோரப் படும் *(ஆங்கிலத்தின் முக்கியத்துவம் கருதி)* என்பதைத் தெரிவித்துவிட்டால், மாணவர்கள் இப்போதிருந்து ஊக்கமாகக் கற்பார்கள் இது பல்கலைக்கழக அனுமதிக்கும் இலகுவாக இருக்கும் நாட்டுக்கும் நல்லது.

*4)* உளச்சார்புப் பரீட்சை: குறிப்பிட்ட கற்கைநெறி தொடர்பாக வினாக்களை உள்ளடக்கியதான உளச்சார்புப் பரீட்சை பயனுடையதும் வரவேற்கத்தக்கதுமாகும். ஆனால், குறிப்பிட்ட உளச்சார்புப் பரீட்சை 'ஆங்கில மொழியில் மட்டும்' நடத் தப்படும் என்பதானது,

*1.* திடீரென குறிப்பிட்ட பாடந்தொடர்பான கலைச்சொற்கள் மிகுந்த பரீட்சையை முதன்மொழியில் *(தாய்மொழியில்)* - ஆங்கிலத்தின் கட்டாயத்தன்மை உணர்த்தப் படாது - கற்றவர்கள் எவ்வாறு எதிர்கொள்ள முடியும்?

*2.* பரீட்சையை ஆங்கில மொழியில் மட்டும் நடத்துவதற்கான அடிப்படைக் காரணம் என்ன? ஆங்கிலம் நன்கு தெரிந்தவர்களை கற்கைநெறிக்கு உள்வாங்குவது. அவ்வாறாயின் சில சந்தர்ப்பங்களில் இஸற் புள்ளி குறைந்த ஆங்கிலந்தெரிந்த மாணவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கிறது. இஸற் புள்ளி அதிகமான மாண வர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இந்நிலை கற்கைநெறிக்குரிய வெட்டுப் புள்ளி *(இஸற் புள்ளி)* உயர்நிலைக்குச் செல்வதைத் தடுக்கிறது. அறிவுடைய மாணவர்களை விட ஆங்கிலந் தெரிந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே வாய்ப்புக்கள் கிடைக்கும்.

### புதிய கற்கைநெறிகளின் தேவையும் விருத்தியும்

நவீன உலகின், உள்நாட்டின் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்பப் புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற கற்கைநெறிகள் நாட்டின் நோக்கங்களை நிறைவு செய்யக்கூடியனவா என்பதும் கேள்விக்குரியதாகவே உள்ளது. உதாரணமாகச் சென்றவருடம் அறிமுகப்படுத்தப்பட்ட மொழிபெயர்ப்புக் கற்கை, ஆங்கிலம்-

தமிழ், ஆங்கிலம்-சிங்களம் எனும் இரு மொழிகளை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளதேயன்றி நாட்டின் தேவையைக் கருத்தில்கொண்டதான தமிழ்-சிங்களம், தமிழ்-சிங்களம்-ஆங்கிலம் ஆகிய இரு மற்றும் மும்மொழிகளை மையப் படுத்தியதாக இருக்கவில்லை.

இன்னும் பல விடயங்களைக் கோடிட்டுக் காட்டலாம். இருந்தும் பல்கலைக் கழக அனுமதி முறைமையில் உடனடியாகப் பல மாற்றங்கள், சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றனஎன்பதைச்சுட்டிக்காட்டுவதே இங்கு முதன்மைப்படுகின்றது.

மேலும், பல்கலைக்கழக கற்கைநெறிகளைக் கருத்தில்கொண்டு க.பொ.த. உயர்தரப் பிரிவுகளை அதிகரிக்கலாம். அல்லது பிரிவுகளுடன் துணைப் பிரிவுகளை உருவாக்கலாம். தமக்குத் தேவையான மாணவர்களைக.பொ.த. உயர்தரத்திலிருந்தே பல்கலைக்கழகம் ஆயத்தப்படுத்தலாம். இது இலங்கையின் அறிவுமட்டத்தை அதிகரிக்கும். புத்தாக்கங்களும், கண்டுபிடிப்புகளும் மிக்க விஞ்ஞானிகளை உரு வாக்க முடியும்.

கலைப்பிரிவில் இதில் ஒன்று, அதில் ஒன்று, இதில் மூன்று, அல்லது அதில் மூன்று எடுக்கமுடியாது எனக் கல்விப்புலத்தாரை குழப்பத்தில் ஆழ்த்தாமல், தமது பாடசாலைகளில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் வகையில் உப பிரிவுகளை உருவாக்கலாம். உதாரணமாக: மானுடவியல், சமூகவிஞ்ஞானம், மொழிகள், மேலைத்தேச மொழிகளும் பண்பாடு களும், கீழைத்தேச மொழிகளும் பண்பாடுகளும், ஒப்பீட்டுச் சமயக் கல்வி, ஆற்றுகைக் கலைகள், தொடர்பாடல் கற்கைகள் என அவை அமையலாம். கலைத் துறையில் உள்ள பாடங்களை இயலுமானவரை இணைத்துவிடலாம். உதாரணமாக: கிறிஸ்தவ சமயம், கிறிஸ்தவ நாகரீகம் ஆகியவற்றை இணைத்து கிறிஸ்தவ சமயமும் நாகரீகமும் என ஒரு பாடமாக்கலாம்.

மிக முக்கியமான மற்றுமொரு விடயம், 2015 ஆகஸ்டில் பரீட்சை எழுதுகிற க.பொ.த. உயர்தர தொழினுட்பப் பிரிவு மாணவர்கள் தாம் என்ன கற்கைநெறிக்கு உள்வாங்கப்படுவோம் என்பதை அறியாதவர்களாகவே இருந்தனர். அவர்கள் எழுதுவதற்கு முன்னராவது அவற்றை அறிவிக்க முயற்சி எடுத்திருக்கவேண்டும். க.பொ.த. உயர்தர தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துகின்றபோது பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்

படும் என்பதையும் கவனத்திற்கொண்டிருக்கவேண்டும். தொழினுட்பப் பிரிவு மாணவருக்கான ஆசிரியர்களின் பற்றாக்குறைகள் நிவர்த்திசெய்யப்படவேண்டும்.

## பல்கலைக்கழக அனுமதிக்கான கால விரயமும் மாணவர்களின் வயதும்

இவ்வருட ஆரம்பத்தில் கல்வி அமைச்சு, பாடசாலைக் கல்விக் காலத்தைக் குறைப்பது தொடர்பாக ஆலோசித்து வருகிறது எனத் தெரிவித்தது. இது பெரிதும் வரவேற்கத்தக்கது. அதற்கான நடவடிக்கைகளை எவ்வளவு துரிதமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு துரிதமாகச் செய்வது நாட்டுக்கும் அதன் தூண்களான இளை ஞருக்கும் நல்லது. ஆறு வயதில் பாடசாலைக்குள் நுழைந்து 18 வயதில் பல்கலைக் கழகம் புகக்கூடியதாக அது அமையவேண்டும். இதற்காக முன்னர் குறிப்பட்டதான அரச நிறுவனங்கள் - தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பரீட்சைகள் திணைக்களம், பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - இணைந்து செயற்படவேண்டும்.

பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை மாணவர்கள் இளமாணிப் பட்டத்தைப் பெறுகிற வாய்ப்பு -முறையாகக் கற்றும் - இருபத்தைந்து (25) வயதளவிலேயே கிடைக்கிறது. ஏனைய நாடுகளில் 21 வயதில் அது சாத்தியமாகிறது.

க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ..த) பரீட்சைப் பெறுபேறுகளை வெளி யிடுதல், உயர்தரக் கல்வியை ஆரம்பித்தல், பல்கலைக்கழகத்திற்கு உள்ளீர்த்தல் ஆகியவற்றில் காணப்படும் தாமதங்களை குறைக்க வழிவகைகள் மேற்கொள் ளப்படவேண்டும். அதற்குப் பின்வரும் முன்வைப்புகளைக் கருத்தில் எடுக்கலாம்.

1. க.பொ.த (சா.த) பரீட்சையை ஆகஸ்ட் மாதத்தில் 10ஆம் தரத்தில் அதாவது மாணவரின் 15 வயதில் நடத்துதல்

2. க.பொ.த (சா.த) - ஆகஸ்ட் - பரீட்சை முடிவு தாக்கஞ் செலுத்தாத நிலையில் அடுத்த ஜனவரி மாதமே க.பொ.த (உ.த) கல்வியை ஆரம்பித்தல்

3. க.பொ.த (உ.த) பரீட்சையை டிசம்பர் மாதத்தில் 12ஆம் தரத்தில் அதாவது மாணவரின் 17 வயதில் நடத்துதல்


4. அடுத்து வரும் மே மாதம் அனைத்து உயர்கல்வி நிலையங்களிலும் மாணவர்கள் சேரக்கூடிய வகையில் பரீட்சைகள் திணைக்களம், பல்கலைக் கழகங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணைந்து ஒரு முறைமைக் குள் செயற்பட வேண்டும். அப்போது எமது நாட்டிலும் 21 வயதில் பட்டதாரிகள் உருவாகுவர்.

பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங் களைக் கோராது பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணைந்து மாணவர்கள் சேரக்கூடிய அல்லது தகுதியுடைய கற்கை நெறி(கள்) குறித்து வலைத்தளத்தில் வெளியிடலாம். அதற்கமைய மாணவர் தமக்குரிய அதி உயர் அல்லது தமக்குக் கிடைத்தவற்றுள் விரும்பிய ஒன்றைத் தெரிவுசெய்யலாம். இதனை அமுல்படுத்திக் காலவிரயங்களைத் தவிர்த்துக்கொள் ளலாம். நாட்டையும் முன்னேற்றப்பாதையிலிட்டுச் செல்லலாம்.

**மார்க்கண்டன் ரூபவதனன்**
சிரேஸ்ட விரிவுரையாளர்
ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்
பதுளை
கலாநிதிப் பட்ட ஆய்வாளர்
வெளிநாட்டு மொழிகள் மற்றும் பண்பாட்டுப் புலம்
சியாமன் பல்கலைக்கழகம், சீனா.

# இறந்து தசை வடியும் நெடுந்தீவின் ஆன்மா

தென் அமெரிக்க கண்டத்தின் உச்ச நாகரிகத்தை அடைந்திருந்த பழங்குடிகள் இன்காக்கள். இன்று பேரு முதலான தென் அமெரிக்க நிலங்களின் ஆதிச்சொந்தக் காரர்கள் அவர்கள் தான். இன்காக்களின் வாழ்வின் வரலாற்று எச்சமாகவும் உலகின் புகழ் பூத்த இடமாகவும் சொல்லப்படுவது இன்காக்களின் அழகு மிக்க பழையை நகரமான மச்சு பிச்சு. பப்பலோ நெடூடா போன்ற இலக்கியக்காரர்கள் தொடங்கி போராளி தோழர் சே குவேரா வரை இன்காக்களின் மச்சு பிச்சு நகரங்களைப்பற்றி கவிதைகள், கட்டுரைகள், குறிப்புக்கள் என்று எழுதியிருக்கின்றனர். சர்வதேச அளவில் தொல்லியல் மற்றும் மரபுரிமை செல்வாக்குக்கு கொண்ட ஒரு தளமாக



மச்சு பிச்சு இருக்கின்றது. சர்வதேச பாதுகாக்கப்பட்ட மரபுரிமைத்தல மாக யுனஸ்கோ அதனை கண்காணிக் கின்றது. ஆண்டு தோறும் பல லட் சம் பேர் மச்சு பிச்சுவைக்காண வரு கின்றனர்.

மச்சு பிச்சு வெறும் நகரம் மட்டு மல்ல அதனுடைய வரலாற்று மற்

றும் தொல்லியல் பெறுமதியும் அதனுடைய இயற்கைச்சூழமைவும் மரபுரிமை சார்ந்த பெறுமதியைப்பெற்றவை. மலைகள், இயற்கை வழிபாட்டு அமைப்புக்கள் ,தாவரங்கள் , லாமா போன்ற விலங்குகள் என்று மச்சு பிச்சு ஒரு இயற்கைக்கூட்டு மரபுமைத்தளமாகவும் உள்ளது. இன்காக்களின் மச்சு பிச்சு மலை நகரத்தை கூகுலில் தேடினால் முக்கால் பங்கு புகைப்படங்களில் லாமா *(Llama)* எனப்படும் ஒரு வகை ஒட்டகம் கண்களில் தட்டுப்படும். அந்த ஒட்டக இனத்துக்கு அந்த நிலத்தில் ஒரு பெரும் வரலாற்று நிகழ்த்துகை இருக்கிறது. இன்காக்களின் ஆன்மாவோடு இணைந்த வரலாறு அது. இன்காக்கள் அழிந்த பிறகும் அந்த நிலத்தின் ஆன்மாவை இன்று வரை தாங்கி நிற்பவை லாமாக்கள் தான். பேரு அரசு லாமாக்களை தேசிய பாதுகாக்கப்பட்ட இனமாகக்கருதுகின்றது. ஏன் ஒட்டு மொத்த உலகுமே மச்சு பிச்சுவையும் லாமாக்களையும் பிரித்துப்பார்ப்பதில்லை. அது ஒரு மரபு உயிரியாக *(Heritage breed)* மாறியிருக்கின்றது.

ஒரு நிலத்தின் உயிரினங்கள் மனிதர்களுக்குரிய அதே உரித்தை அந்த நிலத்தின் மீது கொண்டிருக்கின்றன. அதே போல சிறப்பாக மனித வாழ்க்கையில் பங்கெடுக்கும் உயிரினங்கள் அவர்களின் மரபு என்ற கூட்டு மன உணர்வுக்குள் சென்று தங்கி விடுகின்றன. அவை அடையாளமாகவும் நிலத்தின் தொடர்ச்சியான பங்காளராகவும்மாறிவிடுகின்றன. பொதுவாக, மரபுஉயிரிகளைபின்வரும்வகைப்படுத்தலின் ஊடாக இனங்காணலாம்,

இயற்கை நிலையில் அருந்தல் பெறுமானம்.(அழிந்து வரும் ஆபத்து, இயற்கை கூர்ப்பு தேய்வு என்பவற்றினைகருத்தில் கொண்டு)

மக்களின் வரலாற்று கதைகளில் பங்கெடுக்கும் தன்மை.


மரபு,அடையாளம் போன்ற கூட்டு நனவிலி மனத்தின் நம்பிக்கை.

சடங்குகள் , நம்பிக்கைகள் , சமய நிலைகளின் ஊடாக வரும் கலாசார நம்பிக்கைப்பெறுமதி.

பொதுவாக இயற்கை அருந்தல் பெறுமானம் உள்ள விலங்குகள் எல்லாம் மரபுரிமைகளுக்குள் சேராதவை, அவை தேசிய பாதுக்காக்கப்படும் இனங்களாக இருக்கும். ஆனால் மரபுரிமைக்குள் வந்து சேரும் உயிரினங்கள் பெரும்பாலும்

மனிதனின் கால்நடை வளர்ப்பு அல்லது தொடர்புச்சமுதாயத்தின் தொடர்ச்சியாக மனித வாழ்வோடு பின்னிக்கொண்ட பண்பினைக்கொண்டவை. அபூர்வமாக சில மனிதர்களுடன் நேரடியாகத்தொடர்பு படா விட்டாலும், மனித நம்பிக்கைகளின், நிலச்சடங்குகளின் வழியாக அவை மரபுரிமை உயிரினங்களாக மாறும் தன்மையடைகின்றன.

உதாரணமாக மங்கோலிய மேச்சல் நிலங்களின் வேட்டைக்காரர்களான ஓநாய்கள் தெய்வ நம்பிக்கையுடன் தொடர்பு கொண்டவையாகவும் குறித்த நிலத்தின் ஆன்மாவையும் சமநிலையையும் பாதுகாக்கும் காவலர்களாக கருதப்பட்டு வந்துள்ளன. மங்கோலிய மேச்சல் நிலங்களின் பழங்குடிகளும், இடையர்களும், நாடோடிகளும் ஓநாய்களை நிலத்தின் தேவதைககாளவே பார்த்தனர். ஜியாங் ரோங் எழுதிய ஓநாய் குலச்சின்னம் *(Wolf Totem)* நாவல் இலக்கிய அழகியலோடு அதை விபரிக்கின்றது. மங்கோலிய மேச்சல் நிலத்தின் ஓநாய்கள் அழியும் போது மக்களின் வாழ்வும் நிலத்தின் ஆன்மாவும் எப்படி சிதைந்து போனது என்பதை ஜியாங்ரோங் துன்பத்தோடு விபரிக்கின்றார்.




இவ்வாறு இயற்கையின் நிலத்தின் வாழ்நிலைப்பெறுமதி கொண்ட மரபுயிரினங்கள் குறித்த நிலத்தில் வாழும் மக்களின் அடையாளத்தையும் சரி வாழ்வுரிமையையும் சரி பாதுகாக்கும் வேலை யினைச்செய்கின்றன. இன்காக்கள் அழிந்த பிறகும் கூட அவர்களின் ஆன்ம நினைவுகளைத் தாங்கிக் கொண்டு லாமாக்கள் மச்சு பிச்சுவில் உலாத்தித் திரிகின்றன. அவை மச்சு பிச்சுவின் ஆன்மாவாக இருக்கின்றன.

## நெடுந்தீவும் குதிரைகளும்

மச்சுபிச்சுவில் உலாத்தித் திரியும் லாமாக்களைப்போல, மங்கோலிய மேச்சல் நிலங்களில் உலாத்தும் ஓநாய்களைப்போல இலங்கையின் வடக்கே நெடுந்தீவில் குதிரைகள் இருக்கின்றன. நெடுந்தீவில் இருக்கும் குதிரைகளைப்பொறுத்தவரை அவை ஆயிரம் வருஷத்து வரலாற்றைக் கொண்டவையா என்பதை உறுதிப்படுத்த

இங்கே போதுமான தொல்லியல், வரலாற்று, விஞ்ஞானருசுக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் இங்கே இருக்கும் பெறுமதி என்பது இப்போதும் குதிரைகள் கண்முன்னே உலாவித்திரிகின்றன என்பதுதான். நெடுந்தீவின் அடை யாளமாகவும் வரலாற்று நிகழ்தலின் மிச்சக்கதையாகவும், மக்கள் வாழ்வுக்கதை களின் பங்காளர்களாகவும் இருப்பவை இந்தக் குதிரைகள்.

இங்கிருக்கும் குதிரைகள் மேலே சொன்ன அருந்தல் பெறுமானம், வர லாற்றுப் பெறுமதி, அடையாள மனநிலை, முதலானவற்றோடு நன்கு பொருந்தியவை. இவை எல்லாவற்றையும் விட சிறப்பானது அவை இன்னும் அங்கே தமது பிழைத்தலை மேற்கொள்கின்றன என்பதுதான்.

இக்குதிரைகள் எப்போதிருந்து இத்தீவில் வாழ்வு முறையை அமைத்தன என்பது பற்றிய வரலாற்றுக்கதைகள், பெரும்பாலும் ஐரோப்பிய காலனிய காலங் களில் இருந்தே கிடைக்கின்றன. ஆனால் தென்னிந்திய சேர, சோழ , பாண்டிய, பல்லவ நாடுகளுக்கு அண்மையில் இருக்கும் ஒரு தீவில் , அதாவது வரலாற்று அடிப்படையில் அரசியல் புவியியல் கேந்திர முக்கியம் வாய்ந்த இடமாக இருந்த தீவில் ஐரோப்பியர்தான் குதிரைகளைக்கொண்டுவந்திருந்தனர் என்று பொதுவாக முடிவு செய்ய முடியாதென்று வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இன்றுவரை நெடுந்தீவு முழுவதும் குதிரைகளின் வாழ்வியலோடு இணைந்த வரலாற்று எச்சங்கள் அங்கே குதிரைகள் உலாத்தி திரியும் இடங்களில் நிறையவே தென்படுகின்றன. மேலும் தொல்லியல் அகழ்வுகள் அங்கே செய்யப்பட்டால் இன்னும் பல செய்திகள் மேலெழுந்து வரும். அரசு தொடர்ச்சியாக அந்த அனும தியைவழங்காதுஇன்னும்தீவைஇராணுவபிரசன்னத்திலேயேவைத்திருக்கின்றது.

குதிரை முதலான விலங்குகளை மனித வலுவுக்கு மாற்றீடாக பாவிக்கும் பல ஆயிரம் வருடத்தின் மனிதப்பண்பாடு இயந்திர வருகையோடு குறைந்து போனா லும் அதன் தொடர்ச்சியாகவும் சான்றாகவும் இத்தகைய மரபுவிலங்குகள் இருக் கின்றன. அவை கைவிடப்பட்டு ஆபத்துக்கு உள்ளாக இதுவும் ஒரு காரணம் என லாம்.

நெடுந்தீவின் குதிரைகள் இத்தனை நூறாண்டுகள் கடந்த பின்னரும் கூட மிகக்கடினமான வறட்சி , பராமரிப்பு இன்மை என்பவற்றிற்கு மத்தியில் இங்கே தங்களுடைய பிழைத்தலை மேற்கொள்கின்றன.

இன்று குதிரைகளின் தன்மையில் இருந்து விகாரப்பட்டு இருக்கும் இவற்றை மட்டக்குதிரைகள், கோவேறு கழுதைகள் என்றும் பொனிகள் இவற்றை அழைக்கின்றனர். இவை இனக்கலப்பு செய்தவையாக இருக்கின்றன. இவற்றின் இயற்கை கூர்புத்தேய்வையோ, உயிர் நிலைமாற்றத்தையோ தாண்டி அவை நிலத்தில் நடந்து திரியும் அந்த நிலத்தின் மிகநெருக்கமான சொந்தக்காரர்கள் என்றே பார்க்க வேண்டியிருக்கின்றது.

நெடுந்தீவு நிலத்தின் கடந்த காலம் மீதான வாசிப்பிற்கும், அடையாளத்திற்கும் இக்குதிரைகள் பிரதிநிதிகளாக இருக்கின்றன. இங்கே இருக்கும் மூத்த பிரஜைகள் தங்களுடைய தீவு பற்றிய ஞாபகங்களில் குதிரைகள் பற்றிய ஏராளம் கதைகளைப் பகிர்கின்றனர்.

தீவில் குதிரைகளை அடைத்து வைப்பதற்கான லாயங்களும், குதிரைகளைப் பராமரிக்கும் மூலிகை தொட்டிகளும் இன்னும்காணப்படுகின்றன. நெடுந்தீவில் இருக்கும் மூலிகைத்தொட்டிகளும் சரி, லாயங்கள், கல்வேலியடைப்புக்களும் சரி தனித்தனியான தன்மையுள்ள குதிரைகளோடு தொடர்புடைய தொல்லியல் மரபுரிமைகளாக இனங்காண வேண்டியன. இங்கிருக்கும் பெருக்கமரங்கள் குதிரைகளின் உணவு, மூலிகைத் தேவைகளுக்காக கொண்டு வரப்பட்டதாக ஊர்வாசிகள் தெரிவிக்கின்றனர். சிலர் "வெடியரசன்" எனப்படும் தீவின் வரலாற்று கதைகளில், நம்பிக்கைகளில் கூறப்படும் மன்னன் காலத்தில் இருந்தே குதிரைப் பயன்பாடு இருந்து வந்ததாக குறிப்பிடுகின்றனர். குதிரைகள் வர்த்தகம், பொதிசுமத்தல் , போர் என்பவற்றுக்குபயன்படுத்தபட்டதாகவும் வரலாற்றாய்வாளர்கள் தெரி விக்கின்றனர்.



ஐரோப்பியருக்கு பிறகு நிலச்சுவாந்தர்கள், சில குடும்பங்கள் தங்கள் தேவைகளுக்காக குதிரைகளை பராமரித்து பயன்படுத்தி வந்ததாக அறிகின்றோம். அத்தோடு அரசாங்கம் இக்குதிரைகள் திரியும் தரவைகள், காடுகள், மேய்ச்சல் நிலங்களை அடையாளப்படுத்தி அவற்றை "விலங்குகள் சர ணாலயமாக " அறிவித்துள்ளது.

அத்தோடு பிரதேசசபை , கடற்படை , மற்றும் மக்கள் இணைந்து தொட்டிகள் நீர்நிலைகளை அமைத்து இக்குதிரைகள் பசிதாகத்தால் இறப்பதைக் கட்டுப்படுத்த முயற்சிகள்செய்கின்றனர். மீண்டும் இந்தக்கோடையில் குதிரைகள் தொடர்ச்சியாக இறக்கத்தொடங்கியதை அறியமுடிகின்றது. தொட்டிகளில் முறையாக தண்ணீர் நிரப்பப்படுவதில்லை. தீவில் ஏற்கனவே நீர்ப்பிரச்சினை இருக்கின்றது. ஆயினும் குதிரைகளைப்பராமரிக்க அரசும், மக்களும் முன்வரவேண்டும். மச்சு பிச்சுவில் பசுமை மிக்க இடத்தில் லாமாக்கள் சுதந்திரமாக மேய்ந்து நீரருந்திக்கொண்டு அரச பராமரிப்பில் உலவுகின்றன, இவை இன்னும் ஆயிரம் வருடங்கள் அங்கே இன்காக் களின் கதைகளைக் காவிக்கொண்டு திரியத்தான் போகின்றன.

ஆனால் நெடுந்தீவின் குதிரைகள் செத்து மடியத்தொடங்கிவிட்டன, வறட்சியும் நீரின்மையும் மத்திய கோட்டுக்கு கீழே வாழும் மக்களையும் குதிரைகளையும் வாட்டியெடுக்கின்றது. நிலத்தையும் மக்களையும் அவர்களின் நம்பிக்கையையும் வாழ்வு அடையாளத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசினது கடமையேயாகும். அது மட்டுமன்றி மக்களும் தங்களுடைய அடையாளமாக, தங்களுக்கு மிக நெருக் கமான உறவாக அவர்களின் நிலத்தின் உயிரினங்களைப்பார்க்க வேண்டியிருக் கின்றது.

மக்கள் உயிரினங்களை தமது வாழ்க்கை தேவைக்கு பயன்படுத்தத் தொடங்கி பல ஆயிரம் வருடங்கள் ஆகிவிட்டன. முன்பிருந்தே மக்களுக்கும் விலங்கு களுக்கும் இயற்கையின் சாட்சியான ஒரு ஒப்பந்தம் இருந்தது, பரஸ்பர வாழ் வினைத்தாங் கிக்கொள்ளும் ஒப்பந்தம் அது. இயற்கை நிலையில் மனித வாழ்வு இருக்கும் போது செய்யப் பட்ட ஒப்பந்தம் அது. அதன் தொடர்ச்சி நவீன உலகில் வேகமாக அறுந்தது. அதுவே மனித குலத்துக்கு சாபமாக எதிர்த்திரும்பியது.

தமக்கு நெருக்கமான , தமது வாழ்வின் அடையாளமாக இருப்பதை குறித்த நிலத்தின் மக்கள் பாதுகாக்கத் தவறும் போது மக்கள் தங்களையே இழக்க நேரிடும். எப்படி மங்கோலிய மேச்சல் நில ஒநாய்களை நவீன இயந்திரப்புரட்சியும், காடழிப்பும், நில ஆக்கிரமிப்பும், போரும் இல்லாது அழித்த போது மேச்சல் நிலமே மெல்ல மெல்ல அழிந்து போனதோ அதைப்போல நிலத்தின் சக பங்காளரான மரபுயிரினங்களை நாம் இழக்கும் போதும் நம்முடைய இருப்பையும் இழந்து போவது உறுதி.

நெடுந்தீவைப்பொறுத்தவரை தொடர்ச்சியாக அங்குள்ள யாழ்ப்பாணத்தின் மிக முக்கிய தொல்லியல் வரலாற்றையும் மரபுரிமை தளத்தையும் கொண்ட கூறுகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக அங்குள்ள குதிரைகள் மிக வேகமாக அழிந்துகொண்டிருக்கின்றன. அங்குள்ள மேச்சல் வெளிகளில் அரசு போட்டிருக்கும் குதிரைகள் பாதுக்காக்கப்பட்ட உயிரினங்கள் என்ற உரிமை கோரும் பலகைகள் துருப்பிடிக்கத்தொடங்கி விட்டன. பலகை மட்டுமல்ல அதில் உள்ள அரத்தமும் அழியத்தொடங்கிவிட்டது. செத்துக்கிடக்கும் குதிரைகளின் என்புகளில்வழியும்தசையில்மக்களின்இருப்பும்வழிந்துஅழிந்தபடியிருக்கின்றது.



நம்மிடம் காலநிலை பற்றிய கரிசனையோ அல்லது காலநிலையை கையாள்வது தொடர்பான முகாமை நிலைகளோ மிக மோசமான நிலையிலேயே இருக்கின்றது, நிலவும்வெப்பத்தையும் சரி மழைவீழ்ச்சி நிலப்பயன்பாடு காடழிப்பு காட்டு உற்பத்தி என்பவை தொடர்பில் அரசும் சரி மக்களும் சரி விழிப்புணர்வற்றே இருக்கின்றோம் இன்று குதிரைகளும் நாளை மனிதர்களும் இதற்கு பலியாகப் போகின் றோம், காலநிலை முகாமைத்துவமும் இயற்கை சமநிலையும் பேணப்பட்டால் எத்தகைய வறட்சியையும் சமாளிக்க கூடிய நிலமும் தேசமும் நம்மிடம் இருக்கின்றன. ஆனால் அக்கறையீனமும் விழிப்புணர்வற்ற மனிதர்களாகவும் இருக்கும் போது தொடர்ச்சியாக குதிரைகளுடன் சேர்ந்து நம்மையும் பலிகொடுக்க வேண் டித்தான் இருக்கப்போகின்றோம். மரபுரிமைகளில் இயற்கை மரபுரிமைகளையும் சரி ஏனைய மரபுரிமைகளையும் சரி காலநிலையில் இருந்து பாதுகாக்க மேலைத்தேச நாடுகளில் பொருத்தமான அமைப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் நம்முடைய தேசங்கள் காலநிலை, பற்றிய உறுத்துணர்வற்றே இருக்கின்றோம்

நெடுந்தீவு என்னும் கடல் நடுவே இருக்கும் தீவில் மக்களுக்கு ஒரு தனித் துவமான வாழ்வு இருக்கின்றது என்றால், அவர்கள் அதனை வாழ்வதற்குரிய உரித்தை உடையவர்கள் என்றால் அதே உரித்தும் வாழ்வுத்தேவையும் அங்குள்ள குதிரைமுதலான உயிரினங்களுக்கு இயற்கை நிலையிலேயே கிடைக்கின்றது. ஆனால் அவற்றை அழிந்து போக விடுதல் என்பது மக்களின் வாழ்வையும் சேர்த்து காவுகொள்ளும் என்ற போது அவற்றை பாதுக்காக வேண்டிய கடமை சகல மக் களுக்கும் இருக்கின்றது. நெடுந்தீவுக் கும் அதன் மக்களுக்கும் ஒரு பெருத்த வாழ்வுத்தொடர்ச்சியின் ஆன்மா இருக்கின் றது என்றால் அது குதிரைகளிடம் தான் இருக்கும்.

**பிரதீப் குணரட்ணம் (யதார்த்தன்)**
யாழ் பல்கலைக்கழகம்
மொழியியல் கற்கைநெறி
இறுதி வருடம்

## Postmen in the mountains
# கடவுளின் சிற்பிகள்



இந்தக்கடல்கள் கூட தன் தற் பெருமையை விட்டு வைத்து விட்டு அடிக்கடி மலைகளைப் பார்க்க வருவதுண்டு மழையாக. காதல் ததும்பும் இந்த மலைகள் படைத்ததில் இறைவன் எவ்வளவு பெருமிதம் கொண்டிருக்க வேண்டும்.இவ்வாறான ஒரு அழகிய மலைப் பிரதேசத்தில் வாழ்க்கையை கழித்துக்கொண்டிருக்கும் ஒரு தந்தை மகன் பாசப் பிணைப்பே *'Postmen in the mountains'* எனும் சீனத் திரைப்படம்.

ஹூனன் மலைப்பகுதி கிராமங்களின் வயதான தபால்காரர், தனக்குப் பின் னாலான தபால் விநியோகிக்கும் தொழிலை தன் மகனுக்கே பெற்றுக் கொடுக்கின்றார்.தொண்ணூறுகளில் என்னதான் போக்குவரத்தில் நவீன வசதிகள் வந்திருந்தாலும் இவ்வாறான மலைப்பகுதிகளில் தபால்களை விநியோகிப்பது கால் வழியாகவே இலகுவானதாக இருக்கின்றது. வாகனங்களை விட தன் சொந் தக்காலையே அதிகம் நம்பி கால் நடையாகவே தபால்களை விநியோகிப்பவராக

விளங்குகிறார் தந்தை. மொத்த ஊரிற்கும் கடிதங்களை விநியோகிக்க குறைந்தது இரண்டு நாட்களாவது தேவைப்படும்.மகன் தனது முதல் நாள் தபால் விநி யோகத்திற்கு புறப்படுகின்றான். வழக்கமாக தந்தை புறப்படும் போதெல்லாம் அவருடைய செல்ல நாயும் சேர்ந்தே செல்வது வழக்கம்.மகனுடன் பழக்கப்படாத நாய் அவருடன் செல்ல மறுக்கின்றது..நெடுந்தூரப்பயணம் என்பதாலும் சரியான பாதைகளைக் காண்பிக்கவும், கடைசியாக ஒரு முறை தந்தை அவர் செல்ல நாயையும் அழைத்துக்கொண்டு மகனுடன் புறப்படுகின்றார். இங்கிருந்து அவர்களின் பய ணம் நம் எண்ணவோட்டங்களின் மேடு பள்ளங்களினூடு செல்ல ஆரம்பிக்கின்றது..

ஒவ்வொரு இடமுமாக அவர்கள் தபால்களை விநியோகித்து வரும் போதெல்லாம் அவர் தந்தை மீது ஊரார் வைத்திருக்கும் பாசம் அளப்பெரியது. அதனை உற்று அவதானித்தவனாய் நகர்கின்றான் மகன்..''இன்றுமுதல் அவன்தான் தபால் தருவான்'' என கிராம மக்கள் எல்லோரிடமும் அறிமுகப்படுத்துகிறார் தந்தை.'' மலையின் கரடுமுரடான பாதைகளில் தன் தந்தையோடு சென்று பயணம் செய்து மலைக்கிராம வீடுகள், மலைச்சரிவுகளில் தனித்தனியே விவசாயம் செய்து அங்கேயே வீடுகட்டி வாழ்ந்துவரும் மனிதர்கள் என்று தேடித்தேடிச் சென்று தபால் களை வழங்குகின்றனர்.

இவ்வாறு வீட்டை விட்டுச் சென்ற தன் பேரனுக்காக தன்னந் தனியே ஒரு ஒதுக்குப்புற வீட் டில் காத்திருக்கும் கண் தெரியாப் பாட்டியிடம் சென்று கடிதத்தை வழங்குகின்றனர்.பல வருடங்க ளாக பாட்டியிடம் கடிதம் விநியோகித்த தந்தை மிகவும் பழக்கப்பட்டிருந்தார். இன்றிலிருந்து தன் மகன் தான் இனி வரும் காலங்களில் தபால் விநியோகிப்பதாக கூறுகின்றார். கடிதத்தைப் பிரித்த பாட்டி அதிலிருந்த சிறிதளவு பணத்தை எடுத்துக்கொண்டு அவரிடம் அக்கடிதத்தை படித்துக் காட்டுமாறு கூறுகின்றார். அப்போது தான் புரிகின்றது வீட்டை விட்டு சென்ற பேரன் அதன் பின் பாட்டியை கவனித்துக்கொள்ளவே இல்லை என்று. அந்தக்கடித்தை ஒவ்வொரு முறையும் தன் தந்தையே எழுதி பணத்தையும் வைத்து பேரனைப்போன்று பாட்டியிடம்



கையளிக்கின்றார் என்பதைப் புரிந்து கொண்ட மகனுக்கு தந்தையின் மேல் அதீத மரியாதை உருவாக ஆரம்பிக்கின்றது.அவன் தொழிலின் மகத்துவம் புரிகின்றது.. வாழ்க்கை நமக்கானது மட்டுமல்ல பிறருக்கானதும் கூட என்பதை புரிந்து கொள்கின்றான்..பார்ப்போர் நம் கண்கள் மலையாய் மாற கண்ணீர் ஊற்றெடுக்க ஆரம்பித்துவிடுகின்றது.

இன்னொரு காட்சியில் இருவரும் ஒரு ஆற்றைக் கடந்து செல்ல நேரிடுகின்றது. தன் தந்தையை முதுகில் சுமந்தவண்ணம் மகன் அந்த ஆற்றைக்கடக்கின்றான். தந்தையின் மனவோட்டங்களில் சிறு வயதில் தன் மகனைத் தோளில் சுமந்து சென்ற ஞாபகங்கள் வந்து போக அவர் கண்களால் ஆனந்தக்கண்ணீர் ஆறாகப்பாய் கின்றது.. தன் மகன் இந்தத் தொழிலுக்கு தகுதியானவன் என்பதை உணர ஆரம்பிக்கின்றார்.



ஒரு சந்தர்ப்பத்தில் கடிதத்தாள்கள் தவறுதலாக காற்றில் அடித்துச் செல் லப் படுகின்றன. அதனைப் பார்த்த தந்தை காற்றைக் கிழித்து ஓடிச்சென்று அந்தகடிதங்களைஎடுத்து வருகின்றார். அவர் நாயும் அவரைவிட வேகமாக சென்று தன் வாயால் அக்கடிதங்களை எடுத்து வருகின்றது. தன் உயிரைவிட கடிதங்களைமேலாகநினைக்கும்தந்தையைப்பெருமையோடுமகன்பார்க்கிறான்.. இந்த வேலையின் சிரமங்களைக் கருதி இந்த வேலையில் சேரத் தயங்கிய மகன் மறுநாள் காலையில் தனியாகவே புறப்படுகிறான்.அவனுடன் செல்லத் தயங்கிய நாயை அப்பா அவனுடன் செல்லுமாறு பணிக்கிறார். இப்போது அந்த நாயும் அவனுடன் மலைப்பாதைப் பயணத்தில் இணைகின்றது... அதே பச்சை புல்வெளிகள் சூழ்ந்த அம்மலைகளினூடு அவன் வாழ்க்கைப்பயணம் இனிதே ஆரம்பிக்கின்றது.. மலையின் அத்தனை அழகுகளையும் சொக்கவைக்கும்படி காட்டியிருக்கும் இயக்குநர் *Huo Jianqi* மனித மாண்புகளையும் காட்டிநின்றதில் இப்படம் மலையளவு உயரந்து நிற்கின்றது..

**பு.டிலக் ஷன்**
கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்.
3ம் வருடம்



# சட்டத்தின் முன் யாவரும் சமம் ஆனால் தேசவழமைச் சட்டத்தில்?

சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது இதனாலேயே இறைவனைக் கூட "சட்டநாதர்" என இந்துக்கள் வணங்குகின்றனர். சட்டம் ஏழை களுக்கு ஒரு வடிவிலும் அதிகாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இன்னொரு வடிவிலும் செயற்படுகின்றது என்றார் அறிஞர் பேர்னாட்ஷா. மேலும் சட்டத்தின் வரையறைகள் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் தலைவனிற்கும் தொண்டனிற்கும் சமனாக அமைதல் வேண்டுமென நவீன சட்டவாட்சியின் தந்தை *A.V* டைசி அவர்கள் வலியுறுத்துகின்றார். மரபுகளையும் சமூக வழக்காறுகளையும் மைய மாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருக்கும் சட்டமானது யாவர்க்கும் சமமான அங்கீகாரத்தையும் சுய கௌரவத்தையும் வழங்க வேண்டிய பாரிய பொறுப் புடைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் சட்டம் பற்றிய பல அதிருப்திகள் , தவறான புரிதல்கள் சாதாரண சாமான்ய மக்களிடையே மட்டுமன்றி பல பழுத்த சட்ட நியாயாதிக்கவாதிகளிடையேயும் நிலவி வருகின்றது. "நாய் என்றால் குட்டை இருக்கும். சட்டம் என்றால் ஓட்டை இருக்கும்" என்றெல்லாம் பொதுமக்களால் விமர்சிக்கப்படும் தருணத்தில் அண்மையில் பொதுநல வழக்கொன்றினை மிக அதிகமான மக்களின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுத்து அதன் பின்னர் கருத்து வெளியிட்ட சட்டத்தரணியால் "அதிகாரத்திற்கு எதிரான வழக்குகளில் கறுப்பு அங்கி அணிந்து பாதிக்கப்பட்ட

ஏழைகளுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கலாம் என்பது இலங்கையில் இன்னும் பகற்கனவே" எனக் குறிப்பிட்டார். இத்தகைய நிலையில் இலங்கையில் முறைமை தொடர்பில் சட்ட ஆராட்சியாளர்களிடமும் நிபுணத்துவம் சார்ந்த சமூக, சட்ட புலமைத்துவ வாதிகளிடமும் இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பு தொடர்பில் பாரிய அதிருப்திகள் நிலவி வருகின்றமை பல இடங்களில் அர்த்த புஷ்டியுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்புத் தெடர்பிலும், நீதித்துறைக் கட்டமைப்பு தெடர்பிலும் பல விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் போருக்குப் பின்னரான நிலைமாறு கால நீதி பருவ காலகட்டத்தில் *(Transiticnal Justice)* தற்போது பேசப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய அரசியலமைப்பின் உருவாக்கம் தொடர்பில் பல விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன. அவ் விதத்தில் இலங்கைத் தீவில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்குப் பதிலாக மாற்று ஆட்சி முறைமை ஒற்றை ஆட்சியா? சமஷ்டி ஆட்சியா? தேர்தல் முறைகளில் விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறையில் இருந்து மாற்றங்களைக் கொண்டு வருதல் என்பன எரியும் பேசு பொருளாக இருந்தாலும் இவை அனைத்தையும் தாண்டி சட்டத்துறை புலமையாளர்களாலும் சட்டத்துறை மாணவர்களாலும் மிகவும் நுண்மையாக ஆராயப்படும் விடயமாக தற்போதைய அரசியல் யாப்பில் 16வது சரத்தின் 1ம் பிரிவு காணப்படுகின்றது.

சட்ட ரீதியான புலமைத்துவ சொல்லாடல்களைத் தவிர்த்து சாதாரணமாக சாமானியராக சொல்லப்படக் கூடிய அரசியல் யாப்பிற்கும் இலங் கையின் *personal law* என அழைக்கப்படுகின்ற தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம், கண்டியச் சட்டத்திற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றுகின்ற போது அரசியல் யாப்பை விட *personal law* தான் மேலோங்கும். *(Prevail)* என அரசியல் யாப்பு குறிப்பிடப்படுகின்றது. இது ஒரு புறமிக்க உருவாக்கப்படப் போகின்ற அரசியலமைப்புக்குள்ளும் இதே சட்ட வலிதகவு உள்வாங்கப்படுமா என்ற கேள்வி முன் வைக்கப்படுகின்றது. அதிலும் குறிப்பாக தேசவழமைச் சட்டம் இலங்கைத் தீவின் வட புலத்தில் சாதிய ஆக்கிரமிப்பபையும் , பெண்ணடிமைத் தனத்தையும் தொடர்ந்தும் இருப்புச் செய்து தக்க வைப்பதற்கான விசேட பண்புகளைக் கொண் டிருப்பதனால் இவை நவீன காலனித்துவ அரசியல் சித்தாந்தங்கள் மிகவும் எழுச்சி

யாக பேசப்படும் இக் கால கட்டத்தி;ல் இவை தொடர்ந்தும் தேவை தானா என்ற கேள்வியை சாமானியர்கள் மத்தியில் அவிழ்த்துவிடுகின்றது. ஆக ஒட்டு மொத்தத்தில் மூன்று வினாக்களை அச்சாணியாகக் கொண்டு இக் கட்டுரை ஆரம்பமாகிறது.

வினா இலக்கம் *1* - தேச வழமைச் சட்டம் என்றால் என்ன?

வினா இலக்கம் *2* - தேச வழமைச் சட்டம் இலங்கைத் தீவின் வடபுலத்தில் தொடர்ந்தும் சாதி அடிப்படை முறையை உறுதி செய்கிறதா?

வினா இலக்கம் *3* - தேச வழமைச் சட்டத்தின் அசையாத ஆதன முறைமை பெண்களுக்கு பாகுபாட்டு அநீதி இழைக்கிறதா?

இறுதி இரண்டு அறச்சீற்ற வினாக்களுக்கான வேர் தேடும் விடையே இக் கட்டுரையின் சாராம்சமாகும்.

**சிறீஸ்கந்தராஜா சிவஸ்கந்தஸ்ரீ**
சட்டத்துறை மாணவன்



# அழகிய உறவு

இருளின் பிடியில் சிக்கிய உலகை மீட்க நிலவை வழியனுப்பிவிட்டு கதிரவன் தன் கரங்களை விரிக்கும் நேரம் இது. பட்சி இனங்களும் பண்ணிசை பாடி அவ் இன்னிசையால் வையகத்தை நனைக்கும் பொழுது இது. பனித்துளிகளும் தமக்கு அடைக்கலம் தந்த இலைகளை விட்டு மாயமாய் மறையும் பொழுது இது. மென்மையாய் சரீரம் தனை தழுவிச் செல்லும் தென்றலின் வருகை நிகழும் நேரம் இது. ஆறறிவு படைத்த மனித இனங்களின் ஆட்சி வலுப்பெறத் தொடங்கும் அழகிய காலைப் பொழுது இது.

நிலா.........நிலா.........நேரம் ஆகிட்டுது. எழும்பி முகத்தைக் கழுவு. அண்ணாவும் தூங்கிக் கொண்டு தானே இருக்கிறான். அவனை எப்பவுமே எழும்பச் சொல்லுறதில்லை. அவனுக்குத்தான் நீங்க செல்லம் குடுப்பீங்க என்ன......... என்றபடியே போர்வையால் முகத்தைப் போர்த்திக் கொண்டாள். நிலா.....நிலா........ உன் அண்ணா நேற்று படிச்சிட்டு தூங்க பிந்திப் போச்சுமா........அதாலதான் அம்மா உன் அண்ணாவ எழுப்பல...........சரி பிள்ளை நீ எழும்பு........... எப்ப பாத்தாலும் அண்ணாக்குத்தான் சப்போட் பண்ணுறீங்க அம்மா. சரி எழும்புறன்.........நல்ல பிள்ளை.........எல்லாம் உன்ர நன்மைக்காகத்தானே என்னெண்டாலும் அம்மா சொல்லுவன். முகம் கழுவி சாமி கும்பிட்டுட்டு வந்து ரீயைக் குடி............ ஸ்கூலுக்கு லேட் ஆகப் போகுது.........ம்ம் அம்மா......... பத்து நிமிசத்துல வந்துர்றன்.

பன்னிரண்டு வயதிற்கே உரித்தான குறும்புப் பெண் அமுதநிலா. அவளது பெயரைப் போலவே அவளும் அழகுதான். பொது நிறம்........வட்ட முகம். அவளது அழகுக்கு மேலும் அழகு சேர்ப்பதாற் போலமைந்த தெத்துப் பல். அவள் சிரிக்கும் பொழுது கன்னத்தில் விழும் குழி. கார்மேகம் போன்ற நீண்ட சுருண்ட கேசம். இத்தனை அழகையும் தவிடுபொடியாக்கிவிடுவது போன்ற அவளது கள்ளங்கபடமற்ற மனம். மொத்தத்தில் கூறின் ஆர்ப்பாட்டம் இல்லாத அழகி அவள்.

*"அம்மா.........அம்மா.........நான் வெளிக்கிட்டன். சரி நிலா........ஓடி வந்து சாப்பிடும்மா. ஸ்கூலுக்கு நேரம் ஆகுது. அண்ணாவும் வெளிக்கிட்டுட்டு உனக்காகப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சரி அம்மா போய் சாப்பிட்டு வந்துர்றன். (நிலா சாப்பிட்டு முடிந்து வந்த பின்) அம்மா நாங்கள் போயிற்று வாறோம். சரி நிலா......... சரி கதிர்...... தங்கைச்சியும் நீயும் கவனமாய் போயிற்று வாங்கோ. றோட்டில் வாகனங்களைப் பார்த்து கவனமாகப் போகணும்....அவசரப்படாம நிதானமா பாதையைக் கடக்கோணும். ம்ம்... போயிற்று வாங்கோ......சரி அம்மா போட்டு வாறம்.*

*கதிரோன்.........நிலாவின் அண்ணன்..........சாதாரண தரத்தில் படிக்கிறான்......... குடும்பத்தின் மூத்த பிள்ளை. படிப்பில் கெட்டிக்காரன். வயதிற்கே உரித்தான உயரம். பொது நிறம் .பொது நிறம் என்றாலும் நிலாவ விட நிறம் சற்று குறைவு தான். பார்த்தவுடனே வசீகரப்படுத்தும் முகம். சுறுசுறுப்பாகச் செயற்படும் விதம். இனிமையாகப் பழகும் தன்மை. இவையெல்லாம் சேர்ந்து உறவுகளுக்கு மத்தியில் கதிரோனுக்கென சிறப்பான இடம் காணப்படவே செய்தது.*

*2005-2007 கால கட்டத்தில் அவர்களின் ஊரைப் பொறுத்த மட்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் ஒரு சில பேரின் வீடுகளில் மட்டுமே காணப்பட்டது. அந்த ஒரு சில பேரில் கதிரன் நண்பன் வீடும் அடங்கும். கதிர் தாயிடம் கூறிவிட்டு தொலைக்காட்சி பார்க்க நண்பனின் வீட்டிற்குச் செல்லும் நேரமெல்லாம் தானும் வரப்போவதாக அடம்பிடிப்பாள் நிலா. தாயார் கண்டித்தால் அழுகை மழை பொழிவாள். "சின்னப்பிள்ளை தானே கூட்டிக் கொண்டு போ" என்று கதிரோடு அனுப்பி வைப்பார் தாயார். அந்த சந்தோசத்தின் பிரதிபலிப்பால் மேலும் பிரகா சமாகிவிடும் நிலாவின் வதனம்*

தமிழ்ப் பண்டிகைகளைக் கொண்டாடுவதென்றால் கதிருக்கும் நிலாவுக்கும் அலாதிப் பிரியம் என்றே கூற வேண்டும். அத்தகைய நாட்களில் இருவரும் சேர்ந்து தாய், தந்தைக்கு சிறிய உதவிகள் செய்து கொடுப்பதுண்டு. பல நேரத்தில் உதவிகள் உபத்திரவத்தில் முடிந்தது தான் உண்மை. புத்தாடைகள் அணிந்து கொள்வதில் அவ் வளவு ஆனந்தம்.

குறும்புகள் செய்வதில் இருவரும் ஒன்றாக நின்றாலும் அவர்கள் சண்டை பிடிக்கின்ற நேரமே அதிகம். அம்மாவிற்கு இவர்களின் பிணக்கு வெட்டுவது தான் பெரிய வேலை. அப்பா எப்போதும் தனக்கு சப்போட் என நிலாவும் அம்மா எப்போதும் தனக்கு சப்போட் என கதிரும் நினைத்துக் கொள்வார்கள். நிலாவிற்கு தான் பெண் பிள்ளை என்ற நினைப்பே இல்லை என்று தான் கூற வேண்டும். அதுக்கேற்றாற்போல் கதிரனின் செயற்பாடுகளை ஒத்தே நிலாவின் செயற்பா டுகளும் அமைந்திருந்தன. கதிரனின் நிழல் போலத் தொடர்வாள். கதிரன் எவ்வளவு கூறினாலும் கேட்க மாட்டாள். அவனும் கடைசியில் ஒன்றும் செய்ய முடியாமல் சேர்த்துக் கொள்வான். இதை நிலாவின் பிடிவாதம் என்று கூறாமல் அவளது பிடிவாதத்தை மீறிய அன்பு என்று கூறுவதே சரியாக இருக்கும்.

எவ்வளவு தான் நிலா கதிரோடு சண்டை பிடித்தாலும் தன் அண்ணனைப் பற்றி யாரும் வேடிக்கையாகவேனும் தவறாகப் பேசினால் கொதித்து எழுவாள். தனது வாதத்தை முன் வைப்பாள். நியாயத்தைக் கூறுவாள். இறுதியில் தவறாகப் பேசிய வர்கள் தவறு எனக் கூறும் வரை விடமாட்டள். உறவினர்களோ நிலாவைச் சீண்டிப் பார்க்க வேண்டும் என்பதற்காக கதிரைப் பற்றி அவளிடம் தவறாகக் கூறுவது போல் நடித்து அவளது முக மாற்றங்களை இரசிக்கத் தான் செய்வார்கள். கதிரும் அதேபோல் தான். நிலாவை விட மூத்த பையன் என்பதால் பக்குவமாகப் பார்த்துக் கொண்டான்.தனது தங்கை நிலாவை தனியே வெளியே எங்கேயாவது அனுப்புவது என்பது அவனுக்கு பிடிக்காத காரியம். அதனால் நிலாவைத் தூர இடங்களுக்குக் கூட்டிச் செல்லும் பொறுப்பை அவனே ஏற்பான். அவள் செய்யும் குறும்புகளை உள்ளூர இரசிப்பான். நிலா என்னதான் குறும்புத்தனமாக இருந்தாலும் படிப்பில் கெட்டிக்காரி தான்.

தனது தங்கையை நினைத்து மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொள்வான் கதிர். நிலாவிற்குத் தனது பாடத்தில் சந்தேகம் என்றால் அண்ணனைக் கூப்பிட்டுக் கேள்விக் கணைகள் தொடுப்பாள். சொல்லி முடிப்பதற்குள் கதிருக்குப் போதும்

போதும் என்று ஆகிவிடும். ஆனால் பொறுமையாய் இருந்து சொல்லிக் கொடுப் பான்.

நிலாவிற்கு விளையாடுவது என்றால் அவ்வளவு பிடிக்கும். ஆனால் கதிரோடு விளையாடுவது தான் அவளது விருப்பம். அதனால் கதிரும் அவனது நண்பர்களும் விளையாடும் போதெல்லாம் தானும் என்று வந்து நிற்பாள். கதிரின் நண்பர்கள் நிலாவின் நண்பர்கள் போலத்தான். அவ்வாறு தான் நிலாவும் நடந்து கொள்வாள். இதனால் தன்னோடு சேர்ந்து விளையாடுவதற்குக் கதிர் மறுத்தாலும் அவனது நண்பர்கள் அவளை விருப்புடன் சேர்த்துக் கொள்வார்கள். அவளும் கதிரின் நண்பர்களுடன் சகஜமாகக் கதைப்பாள். அவளின் கள்ளங்கபடமில்லாத செயற்பா டுகளோ என்னவோ அவர்களுக்கு நிலாவின் மீது தனிமரியாதையை ஏற்படுத்தவே செய்தது.

இவ்வாறு காலங்கள் உருண்டோடின. கதிர் படித்து முடித்து வேலை நிமித்தம் தூரப்பிரதேசத்தில் தங்கிப் பணியாற்ற வேண்டி நேர்ந்தது. நிலாவோ தன் உயர் கல்வியைத் தொடர்வதற்காக வெளிமாவட்டம் சென்று தங்கிப்படிக்க வேண்டி ஏற்பட்டது. பெற்றோரைப் பிரிந்து சகோதர உறவைப் பிரிந்து இருக்க வேண்டிய சூழலே இருவருக்கும் காணப்பட்டாலும் காலத்தின் கட்டாயம் என அதை அவர்கள் ஏற்றுக்கொண்டாகள். தாம் இயல்பாக இருப்பது போல் இருவரும் காட்டிக் கொண்டாலும் பிரிவு என்பது இருவருக்கும் சிறு கவலையைத் தோற்றுவிக்கவே செய்தது எனலாம்.

தனிமை சில நேரத்தில் இன்பத்தையும் சில பொழுதுகளில் துன்பத்தையும் தோற்றுவிக்க வல்லது. அதற்கேற்ப நிலா அங்கே தனியாக இருக்கும் பொழுது எல்லாம் சிறுவயதில் தான் அண்ணனோடு சேர்ந்து செய்த குறும்புகள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்துபோகும். தனது வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத ஞாபகங்கள் அவை என்று நினைக்கும் போதே அவளுக்கு மெய் சிலிர்க்கும். சிலமன வேதனைகளுக்கு அவை நல்ல மருந்தும் கூட. இவற்றை நினைத்து அவள் உள்ளம் களிப்படைந்தாலும் சில நேரம் தன்னையறியாது கண்ணீர்த் துளிகள் வருவதுமுண்டு. எனினும் மீண்டும் அந்த ஞாபகங்கள் மயிலிறகாய் மாறி புண்பட்ட இதயத்தை இன்பமடையச் செய்யத் தவறுவதில்லை. தினமும் பெற்றோருடனும் அண்ணனுடன் தொலைபேசியில் கதைத்தவுடன் மனக்கவலைகள் எல்லாம் "சூரியனைக் கண்ட பனித்துளி போல" மாயமாய் மறைந்து விடும்.

என்னதான் நவீன யுகம் என்று மார் தட்டிக் கொண்டு இயந்திரங்களுக்கு மனிதன் முக்கியத்துவம் கொடுத்தாலும் உறவுகளே மனிதநேயத்திற்கு வித்திட்டு உலகை உயிர்ப்பிக்கச் செய்கின்றது. எமது வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்ப்பித்து அதை முழுமையடையச் செய்வதில் உறவுகள் உன்னத இடம் வகிக்கின்றன. மனிதன் தனது மனிதத் தன்மையைத் தொலைத்து நெறி தவறுவதற்கு முக்கிய காரணமே உறவின் உன்னதத்தை உணராமையே. நாம் இவ்வுலகில் பிறந்து வாழ்வதற்காக இறைவனால் அளிக்கப்பட்ட புனிதமான வரமே "உறவுகள்" இதை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டால் சமூகத்தில் சீர்கேடுகள் என்பதே இல்லாது போயிருக்கும். வன்முறைகளும் அழிந்து போயிருக்கும்.

இவ்வாறெல்லாம் மனதிற்குள் நினைத்துக் கொள்வாள் நிலா. அவளுக்கு சமூக அக்கறை கூட சற்று அதிகமாக இருக்கவே செய்தது. தன்னாலான சிறு உதவிகள் செய்வதில் அவள் தயங்குவதில்லை. இவற்றையெல்லாம் ஏதேதோ நினைத்துக் கொள்வாள் இனி அண்ணனோடு சண்டை பிடிக்கக் கூடாது என நினைக்கவும் "என்ன தவம் செஞ்சுபுட்டேன்....." என தொலைபேசி ஒலிக்கவும் சரியாக இருந்தது. அழைப்பில் கதிர். அவளது முகம் மேலும் பிரகாசித்து அவளது அழகை மேலும் மெருகூட்டியது. அவ்வளவு ஆனந்தம். பட்டாம் பூச்சி போல மனம் சிறகடித்துப் பறந்தது....... "ஹலோ அண்ணா.. எப்பிடியிருகிறாய்....." என்ற கேள்வியோடு தொடங் குகிறது அவர்களின் உறவிற்கான புனிதம்.....

**தீபிகா தங்கவேல்**
கைத்தொழில் தகவல்த் தொழில்நுட்பம்
முதலாம் வருடம்



# இருள் சூழ்ந்த வாழ்வு

வெளியில் வந்தபோது இருட்டிவிட்டிருந்தது. பாடசாலையினுள் மின்சாரம் இருந்ததால் இருட்டியதும் தெரியவில்லை. வனிதாவிற்கு பக்கென்றாகிவிட்டது. "ஐயோ அம்மா பார்த்துக்கொண்டு நிப்பாவே" வனிதா பொன்னையாவிற்கும் பானுமதிக்கும் பிறந்த ஒரே மகள். நாளை *A/L* பரீட்சை.. மருத்துவராக வேண்டு மென்பது அவளது அப்பாவின் கனவு.

ஒரு மாதம் முதல் வரை அவள் வாழ்வு சந்தோசமாயத்;தான் போய்க்கொண் டிருந்தது. அப்பா விறகு வெட்டி விற்று வரும் காசு ஆடம்பரம் இல்லாத அவள் வாழ்விற்கு மிகவும் திருப்தியாக இருந்தது. யார் கண் பட்டதோ ஒரு மாதம் முன்பு விறகு வெட்டிவிட்டு வரும் வழியில் அப்பாவை கன்ரர் மோதிவிட்டது. மிஞ்சியது அப்பாவின் சைக்கிள் மட்டும் தான் வனிதா நிலைகுலைந்து போனாள். அம்மா முழுதாய் உடைந்து போனா கிட்டத்தட்ட நடைபிணமாகிவிட்டா. வனிதா மட்டும் தான் அவள் ஒரே சந்தோசம். மருத்துவராக வேண்டும் என்ற அப்பாவின் கனவை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற ஓர்மத்தில் பாடசாலை முடிய அங் கேயே நின்று படித்துவிட்டு தான் வீடு வருவாள்.

இன்று அவள் தன்னை மறந்து படித்துக்கொண்டு நின்றதில் நன்றாக இருட்டி விட்டிருந்தது. அவள் பாடசாலையில் நின்று படிப்பதற்கு வீட்டில் மின்சாரம் இல்லாததும் ஒரு காரணம் தான்.

"நடையில் வேகத்தைக் கூட்டினாள், எப்படியும் அம்மா ஒழுங்கை முகப்பிற்கு வந்திருப்பா" நினைத்தபடி போனவள்; ஒழுங்கை முகப்பில் அம்மா இல்லாததை கண்டு உற்சாகம் குன்றினாள். ஒரு நாளும் இப்படி செய்ததில்லையே என்னவாகிற்று அம்மாவிற்கு மனம் படபடக்கத் தொடங்கியது. வீட்டு கேற்றிலும் இல்லை, வீட்டினுள் ஓடினாள் அரிக்கன் லாம்பு அணைவதா விடுவதா என்று எரிந்து கொண்டிருந்தது. அப்போது தான் மண்ணெண்ணை வாங்க காசு இல்லை என்று அம்மா சொன்னது நினைவு வந்தது.

உள்ளே அம்மாவின் சிலமனை காணவில்லை. நெஞ்சு வேகமாய் அடித்துக் கொண்டது. எங்கே போயிருப்பா இந்த நேரம்?? கடவுளே என வேண்டிக் கொண்டாள்.

உள்ளே சென்றவள் அதிர்ந்து போனாள். அம்மாவின் முனகல் சத்தம் கேட்டு. அந்த லாம்பு வெளிச்சத்தில் ஒன்றுமே தெரியவில்லை. குசினிப் பக்கம் தான் சத்தம் வந்தது. தட்டுத் தடுமாறி உள்ளே போய் லாம்பை நீட்டினாள் ஆனால் பிரியோசனம் இருக்கவில்லை. கைகளால் துளாவினாள். "ஐயோ அம்மா நிலத்தில்" அள்ளி மடியில் போட்டுக் கொண்டாள். தலையில் பிசுபிசுத்தது. இரத்தமாக இருக்க வேண்டும். அம்மாவின் வாய் "வனிக்குட்டி" "வனிக்குட்டி" என முனகிக் கொண்டிருந்தது.

அருகில் உதவிக்கும் யாரும் இல்லை. ஒரு ஆச்சி தான் பக்கத்தில் என்ன செய்வது?? 4KM தூரம் போக வேண்டும் வைத்தியசாலைக்கு விரைந்து செயற்பட ஆரம்பித்தாள். அப்பாவின் ஜென்ஸ் சைக்கிளை எடுத்தாள். அதன் நடு பெரிய ஸ்ராண்டில் விட்டுவிட்டு அரிக்கன் லாம்பை காண்டிலில்கொழுவினாள். அம்மாவை கைத்தாங்கலாக தூக்கிபோய் சைக்கிள் ஸ்ராண்டை காலால் அமத்தி கொண்டு தூக்கி ஏத்தினாள்.

தன்னோடு அம்மாவை சாய்த்துக் கொண்டு சைக்கிளை மெதுவாய் உருட்ட அரம்பித்தாள். அம்மாவின் முனகல் குறைந்து கொண்டே போனது. எப்படியும் றோட்டிலை யாரும் வந்தா உதவி கேட்கலாம் தானே என கொண்டுதான் புறப்பட்டாள். அவளின் கஸ்ரகாலத்திற்கு யாரும் வரவில்லை. ஒருவாறு நடந்தே வைத்தியசாலை போய்ச் சேர்ந்தாள். விசேட சிகிச்சை பிரிவில் அம்மா அனுமதிக்கப்பட்டாள். முற்றாய் களைத்துப்போயிருந்தாள். அப்படியே அதில் இருந்த கதிரையில் உறங்கிப் போனாள்.

ஆட்கள் சத்தம் கேட்டு முழித்த போது மணி ஆறாகியிருந்தது. அவள் சட்டை எல்லாம் சிவப்பாகியிருந்தது. பரபரப்பால் அவசரசிகிச்சை பிரிவிற்கு ஓடினாள். அம்மாவை பார்க்க அனுமதியில்லை. கண்களில் கண்ணீர் அவளின் அனுமதியின்றி வழிந்து கொண்டிருந்தது. எட்டு மணிக்கு பரீட்சை என்ன செய்வது .........? அம் மாவை இப்படியே விட்டுவிட்டு எப்படி போவது பரீட்சைக்கு?? கண்முழித்தால் பறவாயில்லை சொல்லிற்று போகலாம். " கத்தி அழவேண்டும் போல் இருந்தது" அம்மா தான் முக்கியம் பேசாமல் நிப்பம் என்று எண்ணிக்கொண்டவளுக்கு அப்பா நினைவு வந்தது........

அன்று வழக்கத்தை விட வேளைக்கு தன் வேலை முடித்துவிட்டு அவளுக்கு பிடித்த பூந்திலட்டோடு வந்திருந்தார் அப்பா

"மோனை இஞ்சவா இந்தா உனக்கு பிடிச்சது கொண்டந்திருக்கன்"

என்ற அப்பாக்கு மேலால் அம்மா கத்தினாள்

"நீங்கள் தான் உவளை பழுதாக்குறது. டி

"ஓம் ஓம் எல்லாம் சொல்லுவியள்" என்றார் அப்பா நக்கலாக..........

"அம்மா இரணை ஏதோ நெடுகவே சாப்பிடுறன் என்றபடி இருந்த பூந்தி லட்டை மூவருக்குமாய் பங்கிட்டாள். பூந்தியை வாய்க்குள் வைக்க சென்ற அப்பாவை கத்தினாள் அம்மா" என்னப்பா நீங்கள் சொல்வழி கேளாயள் டயபிட்டிக் எண்டு நான் சீனியை போடாமல் எல்லாம் செய்யிறன் நீங்கள் என்னெண்டா உந்த இனிப்பைச் சாப்பிடுறியள்.

"எணை அம்மா ஒரு நாளுக்கு தானே" என்றாள் வனிதா.

அப்பா சிரித்துக் கொண்டே "என்ன கொம்மா நீர் இன்னும் கொஞ்ச காலத்திலை என்ரை பெட்டை டொக்டராகி விடுவாள்; அவள் எனக்கு வைத்தியம் பாப்பாள் தானே......"

அவர் பேச்சில் சற்று பெருமையும் இழையோடி இருந்தது.

"இஞ்சை அப்பா சும்மா கண்டபடி கனவு காணாதயுங்கோ பிறகு அப்புடி நடக் காட்டி உங்களுக்குதான் கவலை"

அம்மா கூறி முடிக்க முன்னம் அப்பாவின் முகம் கோபத்தில் மாறிப்போனது.

"இஞ்சை கொம்மா உங்களுக்கு நம்பிக்கை இல்லாட்டி வாயை மூடிக்கொண் டிருங்கோ எனக்கு என்ரை பிள்ளையில முழுநம்பிக்கை இருக்கு அவள் டொக்டர் ஆவாள் பாருங்கோ இருந்து..."

"இல்லையப்பா நான்" அம்மா கூறத் தொடங்க முதல் அப்பா எழும்பிப் போய் விட்டார். பூந்தியும் சாப்பிடவில்லை.

"வனிதாவால் அழுகையை அடக்க முடியவில்லை விக்கி விக்கி அழத்தொடங் கினாள்....."

வெகு நேரமாய் அவளை அவதானித்த தாதிப் பெண் அருகில் வந்து ஆறுதலாய் தலையைத் தடவினாள் அழுதபடி தன் கதையைக் கூறிமுடித்தாள்.

"நீ கவலைப்படாம போய் சோதினை செய் பிள்ளை நான் அம்மவைப் பார்த்துக் கொள்ளுறன்.........தயங்கிய அவளைப் பார்த்து " கவலைப்படாதையம்மா நான் அம்மாவைப் போல, பார்த்துக்கொள்ளுவன்.....

"கைகளைக் கூப்பியபடி குலுங்கினாள்"

"நேரம் ஏழாகுதம்மா நீ போபிள்ளை"

மனதைத் திடமாக்கிக் கொண்டாள் அவள் கால்கள் வேகமெடுத்தன............

**சிதம்பரபாரதி திருசெந்திநாதன்**

2ம் வருடம்

தேயிலைத்தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்



# என் பார்வையில் மலையகம்

முகில் தொடும் மலைகளும், கீதம் இசைக்கும் நதிகளும் , வாசம் வீசும் மலர் களும் , வளம் கொண்ட ஏற்றுமதிப் பயிர்களும் கொண்டது எம் மலையகம் என்று கற்றதில் நான் தெரிந்திருந்தேன் கண் முன்னே அக் காட்சிகளைக் கண்ட பொழுதில் வியந்து நின்றேன். வளைந்து செல்லும் வீதிகளும், வித்தியாசமாய் அமைக்கப்பட்ட கட்டடங்களும், ஆழமான பள்ளத்தாக்குகளும் அழகாக அமைக்கப்பட்ட வண்ணப் பூங்காக்களும், வித்தையாலும் வித்தையாய் அமைந்தது என் சிந்தைக்கு இலங் கையின் மொத்த அழகும் இங்கே காணப்படுகின்றது போலும் கண்ணைக் கவரு கின்ற மலையக வனப்பு தேடினாலும் கிடைப்பதில்லை வேறு எங்கும்.

கொள்ளை அழகு கொட்டிக் கிடக்கும் மலையகத்திலே கல்வி இன்றி கஷ்டப் படுவோரை நான் கண்டேன். நித்தம் உழைக்கும் தொழிலாள வர்க்கமும் தகுந்த வேதனத்தைத் தர மறுக்கும் நிர்வாகமும், ஒரு வேளை கஞ்சிக்கு வழியில்லாக் குடும்பங்களும், பாடசாலையைப் பார்த்திராத மாணவர் வர்க்கமும் இங்கு வசிப் பது ஆச்சரியமானதே.

ஊடகங்களில் வருகின்ற செய்திகளை காதுகளால் கேட்க எனக்கு, களப் பய ணங்கள் செல்லும் போது அவற்றைக் கண் முன்னே காண்கையிலே விழிகளில் நீர் கசிந்ததுண்டு. காலை முதல் மாலை வரை மழை, வெயில் எனப் பாராது கொழுந்து கொய்து , கைகள் இரண்டும் புண்ணாகி மாலை வீடு செல்லும் போது கைகளில் கிடைக்கின்ற பணமே அவர்களின் வாழ்க்கையின் சொத்து. அக் கூலியைக் கூட நியாயமாகத் தர மறுக்கின்றது தோட்ட நிர்வாகங்கள்.

மலையகம் என்றால் அழகு தான் என நினைத்திருந்த எனக்கு அதன் மறுபக்கத்தை உணர வைத்தது இம் மண்ணே! உழைப்பாளிகளின் உதிரமே இங்கு நதியாக ஊற்றெடுக்கின்றது. தொழிலாளர்களின் தன்னம்பிக்கையே இங்கு மலைகளாக உயர்ந்து நிற்கின்றது. சோகங்களை மனதில் மறைத்து இதழ்களில் உதிரும் புன்னகையே இங்கு பூக்களாக மலர்கிறது. வெளித்தோற்றம் பார்த்து மலைத்துப் போகும் நாம் அதன் உண்மை உணர மறுக்கின்றோம்.

ஏழைக்குடும்பங்கள் வசிக்கின்ற இம் மண்ணிலேயே ஆடிக்கார் வாங்கி உல்லாசமாய் ஆடித்திரியும் மனிதர்களும் வசிக்கின்றனர். அவர்களின் கடைக்கண் பார்வை ஒருமுறையாவது தொழிலாளர் பக்கம் திரும்பினால் தொழிலாளர்கள் வாழ்விலும் ஒளி வீசும் என்பது உண்மையே! இமயம் போல் வளர்ந்திருக்கும் பணக்காரர்களின் செருப்பாகத் தேய்பவர்கள் தொழிலாளர்கள் தேவை முடிந்தவுடன் தூக்கி எறியும் பணக்காரர்களுக்கு அவர்களது தேவைகள் தெரிவதில்லை.

தொழிற்சங்கப் போராட்டங்களும், பணி பகிஷ்கரிப்பும் நடந்து கொண்டே இருந்தாலும் தொழிலாளர்களின் வாழ்வில் இன்று வரை விடியல் இல்லை. தனது தேவையைக் கூறி ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தாலும் பாதிக்கப்படுவது முதலாளிகள் அல்ல! அதுவும் எம் தொழிலாளர்களே! தேர்தல்களின் போது வாக்குகளுக்காய் தேவை செய்யும் தலைவர்களும் தங்களது தேவை முடிந்தவுடன் அவர்களைக் கண்டு கொள்வதில்லை என்பதே உண்மை. இம் மக்களின் வாழ்வில் என்று வெளிச்சம் வரும் இறைவனுக்கே வெளிச்சம்.

இலங்கையின் அந்நிய செலவாணியை ஈட்டித் தருகின்ற வர்த்தக ஏற்றுமதிப் பயிர்கள் பல பயிரிடப்படுவது இம் மலையகத்திலேயே! உதாரணமாக இன்றைய முக்கிய ஏற்றுமதிப் பயிராகத் தேயிலை காணப்படுகின்றது. பல்வேறு வகையான தேயிலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அவற்றின் மூலம் பெறப்படுகின்ற இலாபத்தில் ஒரு சிறு தொகையை நேரம் காலம் பாராது உழைத்த எம் தொழிலாளர்களுக்கு வழங்கினால் அவர்களது அன்றாடத் தேவைகள் நிறைவேற்றப்படும் என்பது உண்மையே! என்றாவது ஒரு நாள் எம் தொழிலாளர்களின் வாழ்வும் வளம் பெறும் என்றே நம்புகின்றேன்.

**குபேந்தினி இராஜேந்திரன்**
2ம் வருடம்
தேயிலைத்தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்



# கலையாத விழிகளுடன்

உயர் படிப்பின் இறுதி ஆண்டின் ஆரம்பநாளை எண்ணியபடி தூக்கத்திற்குச் சென்றாள் யதுஷா. சிறு குடிசை வீட்டில் தானும் தன் தங்கை மைதிலியும் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். தாய் தேயிலை கொய்து கங்காணியிடம் கொடுத்துவிட்டு கிடைத்த காசில் இரவு உணவு செய்வதற்கேற்றவாறு பொருட் களை வாங்கியபடி வீட்டு வாசலில் வந்ததும், நாம் இருவரும் ஓடிச் சென்று "அம்மா பசிக்குது" என்று சொன்னதும் உடல், உள வலிகளை சுமந்தபடி புன் முறுவலுடன் இன்னும் சற்று நேரத்தில் உணவு தயார் செய்து தருகிறேன் எனக் கூறி விட்டு சமைக்க ஆரம்பித்துவிட்டார். சிறிது நேரத்தில் வாசலில் யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு நாம்; இருவரும் வெளியே சென்று பார்த்தோம். யாரோ ஒரு புதுமுகம் வாசலில் பார்ப்பதற்கு வெளிநாட்டவர் போல் தோற்றம், அம்மா அவரை வீட் டிற்குள் அழைத்து வந்தார். எனக்கும் தங்கைக்கும் அவர்கள் இருவரும் உரை யாடுவது எதுவென விளங்கிக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் என் அம் மாவின் கண்களில் புதுவித சந்தோசத்தை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. காலை பத்து மணி மறுபடி அதே நபர் வாசலில், அம்மா அவரை இன்முகத்துடன் அழைத்து கதிரையில் உட்காரச் செய்தார். அவர் என்னிடம் வந்து "நான் உன்னை என்னுடன் கூட்டிச் செல்லப் போகிறேன். எங்களுடன் வந்தால் உன்னை பட்டப் படிப்பு படிக்க வைத்து , டாக்டராக வரவைக்கிறேன்" என கூறினார். நான் உடனே,

எதையும் யோசிக்காது சரி உங்களுடன் வருகிறோம் எனக் கூறிவிட்டு, அம் மாவிடம் சென்று "நாங்கள் அவர்களுடன் சென்று, எமது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம்" எனக் கூறினேன். அதற்கு அம்மாவிடம் இருந்து பதில் வருவதற்கு முன் "நீ மட்டும் எங்களுடன் வாம்மா" என அவர் கூறினார். நான் உடனே திகைத்துப் போய் நின்றேன். சற்று நேரத்தில் அம்மா என்னை சமா தானப்படுத்தி அவர்களுடன் அனுப்பி வைத்தார். அம்மா, மைதிலி, பிறந்த யாவற் றையும் விட்டுப் பிரிய மனமில்லாது அவர்களுடன் வெளிநாட்டிற்கு வந்து விட்டேன்.

திடீரென யாரோ எனது பெயரைச் சொல்லி அழைப்பது போல் இருக்க என் கண்கள் விழித்தன. என் செவிலித்தாய் என் முன். என் கண்களில் இருந்து கண்ணீர் சிந்துகின்றன. தாய் பதறப்பட்டு "என்னம்மா நடந்தது, கெட்ட கனவு கண்டிருக் கிறாய், சரி என் மடி மீது தலை வைத்து தூங்கு எல்லாம் சரி ஆகிவிடும்" என கூற நானும் அம்மாவின் மடி மீது சிறிது நேரம் நான் கண்ட கனவை மறுபடி நினைவிற்கு கொண்டு வந்து, யாவும் கற்பனை அன்று நிஜமாக நடந்தவை என்பதை நினைவில் கொண்டு அம்மாவிடம் கதைக்க ஆரம்பித்தேன்.

அம்மா நான் உங்களுடன் வந்து படித்து, இன்று எனது பட்டப்படிப்பின் இறுதி ஆண்டிற்கு வந்துவிட்டேன். ஆனாலும், என் தங்கை மைதிலி, அம்மா எப்படி இருக் கிறார்கள் என்று எனக்கு எதுவுமே தெரியாது. மைதிலியும் என்னைப் போல் படித்து உயர்ந்திருப்பாளா? அம்மா நாங்கள் இருவரும் பிறந்ததிலிருந்து, அப்பாவை இழந்து எங்களுக்காக வேலைக்குப் போய் வந்தார். இப்போது வேலைக்குப் போகாமல் சந்தோஷமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பாரா? என பல கேள்விகளை என் வளர்ப்புத் தாய், தந்தையரிடம் கேட்டேன். அவர்கள் கண்களில் குளமாக கண்ணீர் வழிய, "ஏனம்மா! திடீரென இப்பிடி ஓர் கேள்வி உனது மனதில் தோன் றியது" என அப்பா கேட்டார். நான் "எனது அம்மா, தங்கையைப் பார்க்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது" எனக் கூறினேன். அவர்களும் எனது ஆசைக்கு தடை சொல்லாது உனது ஆசைப்படி அவர்களை சென்று பார்க்கலாம் எனக் கூறி விமானச் சீட்டுக்கு பதிந்து விட்டார்கள்.

நாங்கள் மூவரும் சேர்ந்து எனது தாய் மண்ணிற்கு வந்து எனது அம்மா, தங் கையை சந்திப்பதற்காக சந்தோசத்துடன் பிறந்த வீட்டின் வாசலை திறந்தேன். வீட்டு கதவை வேறு யாரோ ஒருவர் திறக்கவும் நான் அதை எதிர்பார்க்காது, என்

அம்மா எங்கே எனக் கேட்டேன். அவரிடமிருந்து "அம்மாவா! யார் உன் அம்மா? 10 வருடங்களுக்கு மேலாக இந்த வீட்டில் நாங்கள் தான் தொடர்ந்து வசிக்கிறோம்" எனப் பதில் வந்தது. அந்த பதிலை எதிர்பார்க்காமையால் எனது விழிகள் குளமாகின. "இந்த வீட்டில் உங்களிற்கு முதல் வசித்தவர்கள் எங்கே" என செவிலித்தாய் வினவவும், "அவர்கள் தம் குடும்ப கஷ்டத்தில் இந்த வீட்டை விற்றுவிட்டு, இப்போ கங்காணி அமைத்துக் கொடுத்த முகாமில் தான் தங்கியிருக்கிறார்கள்" என பதிலளித்து விட்டு கதவை பூட்டி விட்டனர்;.

தங்கையும் என்னைப் போல் பட்டப்படிப்பு முடித்து, அம்மாவும் சந்தோஷமாக தம்முடைய சொந்த வீட்டில் வாழ்வார்கள் என நினைத்து வந்த யதுஷாவிற்கு இடிமேல், இடிவிழுவதைப் போல ஒவ்வொரு சந்தர்ப்பங்கள் அமைவதை எண்ணி வளர்ப்புத்தாய், தந்தை கவலைப்பட யதுஷாவும் தன் குடும்பத்தில் தான் மட்டும் உயர்ந்தவளாய் இருக்க ஏனையோரின் நிலை பரிதாபமாக இருக்கிறதே என எண்ணி கண்கலங்கி சிறு நேரம் யோசித்து விட்டு, கங்காணி தன் தாய், தங்கையருக்கு அமைத்துக் கொடுத்த முகாமை நோக்கி மூவரின் கால்களும் பயணிக்கத் தொடங்கின.

தன் தாய், தங்கையர் இருக்குமிடத்தை அடைந்த யதுஷா தன் தாயைப் பார்த்ததும் தாயின் மார்பில் சாய்ந்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். "மைதிலி எங்கே அம்மா?" என கேட்டதற்கு அவள் தேயிலை பறிப்பதற்காக தோட்டத்திற்கு சென்று விட்டாள்" என தாய் பதிலளித்தார். காலையிலிருந்து தாயுடன் தனது பொழுதைக் கழித்த யதுஷா, தன் தங்கை வரவிற்காக எதிர்பார்த்திருந்தாள். மைதிலி வந்து அக்காவைப் பார்த்ததும் ஆனந்த கண்ணீர் சிந்தி, தானும் உங்களைப் போல் படிக்க ஆசைப்பட்டேன் இருந்தாலும் குடும்ப சூழல் காரணமாக என்னால் படிக்க முடியவில்லை அக்கா என கூறி விம்மி விம்மி அழுதாள். நம்மைப் போன்ற மலையகத் தோட்டத்தில் பிறந்த ஒவ்வொரு பிள்ளைகளின் நிலையும் கனவாக மட்டுமே மாறுகிறது என்பதை எண்ணி யதுஷாவும் தங்கையைப் பார்த்தபடியே அமர்ந்திருக்கிறாள் கலையாத விழிகளுடன்.....

**தனுசியா சந்திரதேவா**
2ம் வருடம்
கைதொழில் தகவல் தொழில்நுட்பம்



# மகிழ்ச்சியும் உடல்நலமும்

வாழ்க்கை மகிழ்ச்சியை குறிக்கோளாகக் கொண்டது. மக்கள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவுமில்லை அதற்குக் காரணம் உடல் மன உயிர்சக்தி பாதிப்பேயாகும். அன்று மக்கள் மருந்து மாத்திரையின்றி போட்டியின்றிக் கூட்டுக் குடும்பமாக ஒற்றுமையாக நீண்டநாட்கள் வாழ்ந்தனர். இன்று நாம் நாடு விட்டு நாடுகள் பறந்து குடும்பங்கள் பிரிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதனால் அன்பு, பாசம், ஒழுக்கம் போன்ற நெறிமுறைகள் குறைந்து பல பிரச்சினைகள் உருவாகின்றது. அதுமட்டுமன்றி பலதரப்பட்ட மக்களையும், சிக்கல்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. "இடுக்கண் வருங்கால் நகுக" இது வள்ளுவர் வாக்கு இதே போன்று "யாதும் ஊரே யாவரும் கேளிர்" இவ்வாறு அன்று எமது முன்னோடிகள் தாம் அறியாததை தமது ஞானத்தினால் எமக்கு சொல்லி வைத்தார்கள். எனவே எது வந்தாலும் நாம் சிரித்துக் கொண்டே எதிர்த்து நிற்கப் பழகிக் கொள்ள வேண்டும். "அரிது அரிது மானிடராதல் அரிது" அருமையான பிறவியை எடுத்திருக்கும் நாம் எம்மையும் எமது சமுதாயத்தையும் சிறப்பாக வைத்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். எமது வாழ்க்கை "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பார்கள் எனவே குழந்தையிலிருந்து நாம் நல்ல பண்புகளைச் சொல்லிக் கொடுப்பது மட்டுமன்றி நாமும் அவர்கள் எம்மைப் பார்த்து பின்பற்றக் கூடிய விதமாக நடந்து கொள்ள வேண்டும். குழந்தையிலிருந்தே நல்ல உணவுப் பழக்கவழக்கங்களைப் பழகிக் கொண்டால் குழந்தை ஒரு நல்ல மனிதனாக உருவாகும். நாளது ஒன்றுபோல காத்த உயிர் ஈனும் வாள் என்று உணர்ந்து கொள்ளப்பழக வேண்டும்.

ஒவ்வொரு நிமிடமும் எம்மை துரத்துகின்றது. அந்தப் பொன்னான நேரத்தை வீணாக்காது திட்டமிட்டுச் செயற்படப் பழக வேண்டும். தாய் தந்தையரையும் மூதாதையோரையும் மதிக்கப்பழக வேண்டும். ஒரு சிறந்த மனிதன் உருவாகினால் இலகுவில் ஒருசிறந்த சமுதாயம் மிளிரும்.

திருமூலர் பஞ்சசீலக் கொள்கையை நாம் பின்பற்றினால் என்றும் என்றும் இன்பமாக வாழலாம்.

1. இன்று எதற்காகவும் சினமடையக் கூடாது.
2. இன்று எதற்காகவும் கவலைப்படக் கூடாது.
3. இன்று நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும்.
4. இன்று கடினமாக உழைக்க வேண்டும்.
5. இன்று மற்றவர் மீது அன்பு செலுத்த வேண்டும்

மனித உடல் இரத்தம், தசை, எலும்பு, நரம்புகளால் மட்டும் ஆனதில்லை எமக்குத் தெரியாத மற்றோர் சூட்சும உடல் உள்ளது. அதுதான் எமது உடலை இயக்கும் மின்சார சக்தியும் இது மனக்கட்டுப்பாட்டில் உள்ளது. மனம் சோர்வு அடைந்தால் உடல் சோர்ந்து விடும். மனம் மகிழ்ச்சியுடனிருந்தால் உடலும் சுறு சுறுப்பாகின்றது. மனந்தான் எல்லாம். மனதில் குற்றமில்லாதிருப்பதே அறம்.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்- இந்நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"**

**(திருக்குறள்)**

பொறாமை, ஆசை, சினம், கடும்சொல் இந்த நான்கும் எம்மை அணுகாமல் பார்த்துக்கொண்டால் நாம் இன்பமாக நோயற்றும் வாழலாம். நாம் கண்ணாடியின் முன்நின்று நான் அழகாக இருக்கிறேன், நல்லதையே செய்கிறேன் என்று 3,4 தடவை உங்களுக்கு சொல்லிக் கொண்டு நாட்களைத் தொடங்குங்கள். அந்த நாள் இன்பமான நாளாக இருக்கும். ஆள்பாதி ஆடைபாதி என்பது போன்று எமது உடையும், நிறமும் எம்மை ஆளுகின்றன.

**அனித்தா செல்வரட்ணம்**
2ம் வருடம்
பனையினத்தாவரமும் இறப்பர் பால் தொழில்நுட்பமும்பெறுமதி சேர்ப்பும்



# நீருக்குள் நாம் - "மறை நீர்"

"நீர் இன்றி அமையாது உலகு" - உலக இயக்கத்தின் அச்சாணியாக நீரும் நீர்சார் பொருளாதாரமும் இணைந்துகொள்கின்றது. இயற்கையான எமக்கான நீர் வளங்களினை இழந்து நாகரிக மாற்றத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட குடி நீரினை உபயோக்கிக்கும் தலைமுறையாக நாம் மாற்றம்பெற்றுவருகின்றோம். மனிதனின் நாகரிகமும் விஞ்ஞான வளர்ச்சியும் அழிவுக்கான ஆரம்பப் புள்ளி யாகின்றது.

எமது பூமி நீரினால் சூழப்பட்டிருப்பினும் எம்மால் பயன்படுத்தக்கூடிய நீரின் அளவு 0.3 வீதமானது மாத்திரம்தான்.. அதனையும் மீழ் சுழற்சி முறையில் தான் பயன்படுத்திவருகின்றோம். காலப்போக்கில் இந்த அளவு குறையுமே அன்றி கூடுவதற்கான சாத்தியம் இல்லை... பண்டைய நாகரிகம் முதல் தற்கால பூகோள அரசியல் பொருளாதாரம் நீரின் அடிப்படையிலேயே பயணிக்கின்றது.. மூன்றாவது உலக மகா யுத்தம் நீருக்காகவும் இருக்கலாம் என்றும் ஆரூடம் கூறப்படுகின்றது.

போத்தலில் அடைக்கப்பட்ட ஒரு லீற்றர் நீரின் விலை ரூபா 45.00. ஆனால் ஒரு முட்டை உற்பத்திக்கு 162 லீற்றர் நீர், ஒரு றாத்தல் பாணில் 1608 லீற்றர் நீர்... எம்மால் கற்பனை செய்ய முடியாத உண்மைகள்.. "மறை நீர்" - Virtual Water ??

நாம் பயன்படுத்துகின்ற பொருட்கள் அனைத்திலும் மறைந்திருக்கும் நீர், மறை நீர் என அழைக்கப்படுகின்றது. ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியையும் பணத் தைக்கொண்டு மதிப்பிடுவதைப் போல நீர் வளத்தைக் கொண்டு மதிப்பிடும் பொருளாதாரம் தான் மறைநீர்! இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் ஜான் ஆண்டனி ஆலன் இதனைக் கண்டுபிடித்தார் இதற்காக 2008ஆம் ஆண்டு "ஷ்டாக்ஷோம் வாட்டர்" விருதும் பெற்றார்.

இதனை தெளிவாகப் பார்ப்போமாயானால்..

பொதுவாக நெல் விளைச்சலுக்கு நீர் பயன்படுத்தப்படுகின்றமை அனைவரும் அறிந்த விடயமே, ஆனால் நெல் மணிகள் அறுவடை செய்யப்பட்டு அரிசி பெறப்பட்டதும் அதை உருவாக்கப் பயன்பட்ட நீர் அதில் காணப்படுவதில்லை. ஆனால் அந்த நீர் நெல்மணிகளினுள் உட்பொதிந்துள்ளது. இதுவே மறை நீர். ஒரு பொருளில் மறைந்துள்ள நீர். இவ்வாறு நாம் பயன்படுத்தும் அனைத்துப் பொருட்க ளுடனும் நீர் உள்ளடக்கமாக மறை நீராக மறைந்துள்ளது.

எமது நாட்டினைப் பொறுத்தவரையில் ஒரு பொருளின் விலையில் அதற்காகச் செலவிடப்படும் நீரின் பொறுமதியினை கணக்கில் எடுப்பதில்லை. உதாரணமாக ஒரு உடையினைத் தயாரிக்க 2700 லீற்றர் நீர் உபயோக்கிக்கப்படுகின்றது. இங்கி ருந்து மேற்கத்தேய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யபப்டும் ஒரு உடையுடன் 2700 லீற்றர் நீரும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள் ளும்போது அந்நாடு 2700 லீற்றர் நீரையும் இறக்குமதி செய்துகொள்கிறது அல்லது 2700 லீற்றர் அளவுக்கு தனது நாட்டின் நீர்வளத்தை சேமித்துக் கொள்கிறது என்று பொருள்.

ஹோக்ஸ்த்ரா, சாப்பகைன் போன்ற அறிவியலாளர்கள்,ஒவ்வொரு பொருளுக்கு மான 'மறை நீர்' அளவைக் கணக்கிடத் தொடங்கினார்கள். இவ்வாறு ஏற்றுமதி செய் யப்படும் ஒவ்வொரு உற்பத்திகளினூடாகவும் பெறுமதி மிக்க நீர்வளம் எம்மை விட்டு செல்கின்றது.

மேற்கத்தேய நாடுகள் இவ் விடயத்தில் தெளிவாக செயற்படுகின்றது. சீனா, இஸ்ரேல் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் அப்படித்தான் செய்கின்றன. சீனாவின் பிரதான உணவு பன்றி இறைச்சி. ஒரு கிலோ பன்றி இறைச்சி உற்பத்திக்கான மறை

நீர் தேவை 5,988 லிற்றர். அதனால், சீனாவில் பன்றி உற்பத்திக்கு ஊக்குவிப்புகள் இல்லை ஆனால் இறக்குமதி செய்வதற்கான அரச சலுகைகள் உண்டு. ஒரு கிலோ ஆரஞ்சுக்கான மறை நீர்த் தேவை 560 லிற்றர். சொட்டு நீர் பாசனத்தில் கால்பதிக்கும் இஸ்ரேலில் ஆரஞ்சு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு கெடுபிடிகள் அதிகம். இவ்விரு நாடுகளும் ஒவ்வொரு பொருளுக்குமான மறை நீர் தேவையைத் துல்லியமாகக் கணக்கிட்டு அதன்படி ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளை வகுத்துள்ளன.

எமக்கான நீர் முகாமைத்துவக் கொள்கள் இன்மையும், மறை நீர் கோட்பாடு தொடர்பான சரியான புரிதல்கள் இன்மையும் மிகவும் கவலைக்குரிய விடயம்தான். எம்மால் இலகுவில் உணர்ந்துகொள்ளக்கூடிய மறை நீர் கோட்பாடு.. எம்மாலே ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக இருப்பதுதான் விந்தை. மறை நீர் தத்துவம் கடைப்பிடிக்காவிடின் நாமும் உலக வரை படத்தில் மறைந்துபோக வேண்டியவர்கள் தான்...

"நீர் இன்றி அமையாது உலகு"

**லாவண்யா துரைரட்ணம்**
10ம் தலைமுறை
கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில் நுட்பம்.



# தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியற் பண்புகள்

மனிதனுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்ற பெரும்பணியைச் செய்வன இலக்கியங்களே. இலக்கியம் என்பது வெறுமனே சொற்களாலும், எழுத்துக்களாலும் கட்டப்பட்ட காகிதக்கட்டிடமல்ல. அது மானுடநேயம் நோக்கிய பயணத்துக்கான நேர்மையான, உயிருள்ள வழிகாட்டியாகத் திகழ்கின்ற சொல்லோவியமாகும். இலக்கியம் என்பது ஒரு காலப்பகுதியில் நடைமுறையில் இருக்கின்ற அரசியல், பொருளாதார, சமுதாய, சமய, பண்பாட்டு நடவடிக்கைகளின் அடிப்படையில் உருத்திரண்ட சிந்தனைகளின் திரட்சி எனலாம். "நாகரிகம்" என்ற போர்வையிலே நன்னடத்தை தளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய மனித குலத்தைத் தம் தீர்க்கதரிசனத்தால் அன்றே உணர்ந்து கொண்ட கவியுள்ளம் கொண்டவர்களும் சிந்தனைச் சிற்பிகளும் "இலக்கியங்கள்" என்னும் அரிய பொக்கிஷங்களை அகிலத்துக்கு ஈந்து, அவற்றினூடாகப் பல்வேறு வாழ்வியற் பண்புகளைப் போதித்துச் சென்றுள்ளனர்.

தமிழ்மொழியின் இலக்கியப் பாரம்பரியம் ஏறத்தாழ இரண்டாயிரம் வருடங்கள் பழைமை வாய்ந்தது. காதல், வீரம், பக்தி, ஒழுக்கம், விழுமியம், வாழ்வியல், உலகியல் எனப் பல்வேறு பொருள் மரபுகளுடன் தமிழ் இலக்கிய மரபு பயணித்து வருகின்றது. இவ்வாறு பல்துறைப் பண்புகள் கிளைத்து வளர்ந்து நின்ற போதிலும்

இலக்கியங்களின் உள்ளீடு பொருளாக - சாரமாக மக்களின் வாழ்வியற் பண்புகளே மேலோங்கி நிற்பதைக் காணலாம். இலக்கியங்களின் சிறப்புப் பணிகளுள் ஒன்று தனிமனிதனுக்குரிய வாழ்வியற் பண்புகளையும் ஒட்டுமொத்தமான சமூகத்துக் குரிய வாழ்வியற் பண்புகளையும் உணர்த்தி நிற்பதாகும். இவ்வாறு வாழ்வியற் பண்புகளைச் சுட்டி நிற்கின்ற இலக்கியங்களாக திருக்குறள், புராணங்கள், இராமா யணம், மகாபாரதம், நாலடியார், ஆசாரக்கோவை, திரிகடுகம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, சிலப்பதிகாரம், மணிமேகலை, பாரதியார் பாடல்கள் என பவற்றைக் குறிப்பிடலாம்.

மனித வாழ்வியற் பண்புகளுள் முதன்மையானது வாய்மை ஆகும். மனி தரிடத்தில் வாய்மையை நிலைபெறச் செய்வதற்காகத் தமிழிலக்கியங்கள் உபதேச வடிவிலும் உதாரணக் கதை வடிவிலும் போதனை செய்கின்றன. உள்ளத்தால் கூட ஒருவன் பொய்மை நினைக்கக் கூடாது. அவ்வாறு வாழ்ந்து வருகின்ற ஒருவன் உலகத்தவரின் உள்ளங்களில் இருப்பான் என்பதை உலகப் பொதுமறையான திருக்குறள்

***“உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்***
***உள்ளத்துள் எல்லாம் உளன்”***

என்கிறது.

***“யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்***
***வாய்மையின் நல்ல பிற”***

என்று வாய்மையின் வல்லமையை வடிவமைத்துச் சொல்கின்ற வள்ளுவர்,

***“தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்***
***தன்நெஞ்சே தன்னைச் சுடும்”***

என்று பொய் பேசினால் அவனது மனமே அவனைத் தண்டிக்கும் என எச்சரிக்கை விடுக்கிறார்.

காப்பியங்களின் மகுடமாக விளங்குகின்ற கம்பராமாயணத்திலே இராமன், தச ரதன் வாயிலாக வாய்மையின் பெருமை பேசப்படுகின்றது. வசிட்டரிடம் இராமன்,

"வாய்மை என்னும் ஈதன்றி வையகம்
நன்மை என்னும் ஒன்று சொல்லுமோ?"

என்கின்றான். இங்கு இராமன், வாய்மையை விட நன்மை பயக்கத்தக்கது யாதொன்றுமில்லை என்று ஆணித்தரமாய் கூறுகின்றான்.

வாய்மையைப் பற்றி கதை வடிவில் உபதேசித்த "அரிச்சந்திர புராணம்" எந்தக் கஷ்டம் வந்த போதும் உண்மை பேசுவதிலிருந்து பிறழாத அரிச்சந்திரனின் வாழ்க்கை எல்லாக் காலத்துக்கும், எல்லாத் தேசத்திற்கும், எல்லாத் தலைமுறைக்கும் பொருத்தமான எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவ்விலக்கியங்கள் உண்மையே பேச வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி நிற்கின்றன.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருடார்த்தங்களில் உயிர்களின் தேவை, தாகம், முயற்சி, செயல், நோக்கம், இன்பம் என்பன பற்றி வேதங்கள் கூறிய கருத்துக்களையே புராணங்கள் விளக்கி நிற்கின்றன. உழவுத் தொழிலும், பண்பாடும், அரசியலும் வாழ்வியல் முறைகளும் இவற்றுக்கு உதவும் பல சாத்திரங்களும் புராணங்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன. புராணங்களை மேலெழுந்தவாரியாக நோக்கும் போது மாயாஜாலக்கதைகள் போலத் தோன்றினாலும் ஆழ்ந்து நோக்கும் போது தான் சிறந்த நீதிக் கதைகளாகவும் தத்துவக் கதைகளாகவும் புலப்படும். தர்மம் வெல்லும், அதர்மம் அழியும் போன்ற கருத்துக்களையும் நீதியையும், அநீதியையும் எப்படி எதிர் கொள்வது என்பது பற்றியும் செயல் முறையில் காட்டவே புராணங்கள் எழுந்தன எனலாம். நல்ல, கெட்ட வழிகள், குறுக்க நேரான வழிகள், உலக சுக வாழ்வு, வீடுபேறு போன்றவற்றையும் புராணங்கள் வேதத்தின் வழியில் நின்று விளக்குகின்றன. இவை எக்காலத்துக்கும் ஏற்றவையாக, பொருத்தமானவையாக இருப்பதால் தான் தொன்று தொட்டு இன்று வரை அழியாமல் நிலைபெற்று விளங்குகின்றன.

இராமாயணம் போதிக்கும் உண்மைகளை நோக்குகையில் இவ் இதிகாசம் கூடி வாழக் கற்பிக்கும் குடும்பச் செய்திகளால் நிரம்பியுள்ளது. இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒருவன் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது என்பதை இராமன் தனது அவதாரத்தின் மூலம் போதிக்கின்றான். உத்தமமான அரச குடும்பத்திலே பிறந்து, வளர்ந்து,வாழ்ந்து வருகின்ற நாளிலே எத்தகைய சிக்கல் வந்த போதும் மனம் தளராமல், தந்தை சொல்லைத் தாரக மந்திரமாக ஏற்று, கானகம் ஏகுகின்றான்.

யாரையும் தூற்றாமல் சமாதானமாகவே வனம் செல்கின்றான். யாரிடமும் தனக்காக நீதி கேட்கவில்லை. தனக்குச் சாதகமாக எழுந்தவர்களையும் அடக்கி, குழப்பத்தை ஏற்படுத்தாமல் குடும்ப மரியாதையைக் காப்பது மூத்த மகனின் கடமை என்பதை நிரூபிக்கின்றான். எதையும் தாங்கும் இதயத்துடன் எல்லாவற்றையும் துணிவோடு ஏற்றுக் கொண்டு துக்கப்படாமல் எந்த நேரமும் சாந்தமாகவும் , அமைதியாகவும் இருக்கின்றான். யாரையும் பழிவாங்கும் எண்ணம் இவனுக்கு எள்ளவும் இல்லை யென்றே கூறலாம்.

பரதனோ தனக்குக் கிடைத்த பதவியையும், படாடோபமான வாழ்க்கையையும் துறந்து இராமனின் பாதுகைகளை அரியாசனத்தில் ஏற்றி, தான் நாட்டிற்கு வெளியே இருந்து அரசாள்கிறான். இந்நிலையில் பழங்களைப் பறித்துண்டு பசியைப் போக்கி யும், புழுதியில் படுத்துமே அவனது வாழ்க்கை கழிகின்றது. கைகேயியும் இராம னின் அவதார இரகசியம் தெரிந்து தான், அவனைக் கானகம் அனுப்புகிறாள் தானே, பழியைச் சுமந்து கொண்டு. சீதையும், இலக்குவனும் இராமனைப் பின் தொடர் கிறார்கள். இவ்விடத்தில் இலக்குவன் மனைவியும் ஒரு வகைத் தியாகம் செய்கி றாள். இவ்வாறாக அக் குடும்பத்தில் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு மற்றவர்களுக்காகத் தியாகம் செய்கிறார்கள்.

கிஷ்கிந்தையில் சகோதரர்களான வாலிக்கும், சுக்ரீவனுக்கும் இடையிலான பகை யில் தன்னைப் போலவே நாட்டையும் மனைவியையும் இழந்த சுக்ரீவனுக்குக் கை கொடுக்கின்றான் இராமன். இக் காரியத்தின் மூலம் தர்மத்திற்கு துணை போகிறான்.

இலங்கையில் பெருமைகள் பல பெற்ற இராவணனும் பிறன்மனை கவர்ந்ததால் தண்டிக்கப்படுகின்றான். தர்மத்தைக் காக்கத் தமையனைப் பிரிகிறான் விபிஷணன். செஞ்சோற்றுக் கடனுக்காகத் தன் உயிரையே துறக்கின்றான் கும்பகர்ணன்.

இவ்வாறாக குடும்ப அங்கத்தவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் எத்தகைய சிக்கல்கள் தோன்றும், அவற்றுக்கு எவ்வாறு தீர்வு காணவேண்டும் என்பதை இராமாய ணம் அழகாக எடுத்துக்காட்டுகின்றது. தாய், தந்தையாரிடத்தில் மரியாதை, சகோதர வாஞ்சை, நண்பர்களுடனான உயிர் நட்பு, குருவிடம் பக்தி, பகைவர்களிடத்திலும் கருணை, தர்மத்தைக் காப்பதில் ஏற்படும் இடையூறுகளைத் தகர்த்தல் எனப் பல் வேறு வாழ்வியல் அம்சங்களை வகையாக எடுத்துக் காட்டுவதாக இராமாயணம் விளங்குகின்றது.

இதற்கு மாறாக மகாபாரதம் வெளிப்படுத்துவது யாதெனில், ஒரே குடும்பத்தில் அண்ணன் - தம்பிக்கிடையிலான சண்டை சொத்துப் பிரிவினை, சகோதரர்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து போர்புரிதல் என்பனவாகும்.

இங்கு நியாயம் என்பது இருவர் பக்கமும் உள்ள போதும் தம்பக்க நியாயத்தால் எதிரிகளை நியாயமற்ற முறைகளில் அழிக்க முயன்றதால் கௌரவர்கள் தீயவர் களாகக் கருதப்பட்டனர். பொறுமைக்குத் தருமன், வீரத்திற்கு வீமன், ஆண்மைக்கு அருச்சுனன், மூத்தோர் வழியில் முறை தொடர நகுலன், சகாதேவன், பஞ்ச பூதங் களையும் தன்னுள் அடக்கிக் கொண்ட சக்திக்கு பாஞ்சாலி, உள்ளதெல்லாம் கொடுத்து, கொடுப்பதற்கு எதுவுமில்லையே என்று வருந்தும் வள்ளலான கர்ணன், நேர்மையான இராஜதந்திரத்துக்கு கண்ணன், நெறி பிறழ்ந்த இராஜதந்திரத்துக்கு சகுனி, தீய குணங்களின் ஒட்டுமொத்த வடிவமாக கௌரவர்கள், தாய்மைக்கு குந்தி, நேர்மைக்கு விதுரன், கடமைக்கு பீஷ்மர், எடுத்த சபதத்தை முடித்து வைக்க பாஞ்சாலி, வீமன், அருச்சுனன்.........என்று கூறிக் கொண்டே போகலாம். இத்தகைய பாத்திரங்களினூடாக மகாபாரதம் வளர்த்துச் செல்லப்படுவதுடன், மனித வாழ் வின் இலட்சியங்கள், கொள்கைகள், அவற்றை நிறைவேற்றும் விதம் என்னும் வாழ்வியற் பண்புகள் எடுத்தோதப்படுகின்றன.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனுஞ் சொல், தற்காத்துக் கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண் என்னும் உண்மைகளை இராமாயணம் உரைக் கிறது. தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்னும் உண்மைக்கு உரமூட்டுவதாக மகாபாரதம் விளங்குகின்றது. இவ்வாறாக குடும்பப் பிணைப்பு, சகோதர வாஞ்சை, நம்பிக்கை, அவ நம்பிக்கை, பொறுமை, பொறாமை, ஆணவம், அன்பு, காதல், வெறுப்பு, நேர்மை, கடமை, நட்பு, பணிவு போன்ற பல்வேறு வாழ்க்கைக் கூறுகள் பற்றிய தெளிவான போதனைகளைப் புராணங்களும் இதிகாசங்களும் தந்து காலத்தை வென்று நிற்கின்றன.

"திருக்குறள்" முதலான இலக்கியங்கள் வலியுறுத்துகின்ற மற்றொரு மனித வாழ்வியற் பண்பு விருந்தோம்பல் ஆகும். வருபவரை இன்முகங்காட்டி வர வேற்பதும் உபசரிப்பதும் சீரிய மனிதப் பண்பாகும். வள்ளுவர் ஒருபடி மேலே சென்று விருந்தினரை உபசரித்து வழியனுப்பி விட்டு அடுத்து வரும் விருந்தினரை

எதிர் பார்த்து நிற்கின்ற உயர் வாழ்வியற் பண்பினை,

**"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு"**

என்று கூறுகிறார்.

பசித்த வயிற்றுக்கு அன்னமிடுவதும் இரந்து வருபவருக்குப் பொருள் கொடுப்பதும் மனித வாழ்வியற் பண்புகளுள் உன்னதமானவை. "பசிப்பிணி மருத்துவர்" என்று போற்றின சங்க இலக்கியங்கள். இரந்து வருவோர்க்கு இல்லை என்று சொல்லாத மனமே உயர்ந்த மனம் என்று புகழ்கின்றது புறநானூறு.

புரட்சிக் கவிஞர் பாரதி,

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று முழக்கமிட்டு விருந்தோம்பலின் பெறுமதியை உணரவைக்கிறார்.

முல்லைக்குத் தேரீந்தான் பாரி. மயிலுக்கு போர்வை கொடுத்தான் பேகன். பருந்தின் பசியைப் போக்குவதற்காகப் புறாவுக்குப் பதிலாகத் தன்னுடலின் தசையை அரிந்து கொடுத்தான் சிபிச்சக்கரவர்த்தி. தன்னுடைய மகனின் தேர்ச்சில்லில் அகப்பட்டுப் பசுக் கன்று இறந்ததால் ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்த தாய்ப்பசுவின் துயரத்தைத் தானும் அடைய வேண்டும் என்பதற்காகத் தனது ஒரேயொரு தவப்புதல்வன் மீது தேரை ஏற்றிக் கொன்றவன் மனுநீதிச் சோழன். இவ்வாறு உயர்திணைகளுக்கு மாத்திரமன்றி அஃறிணைகளுக்கும் , வாய் பேசாத ஜீவன்களுக்கும் நீதி வழங்கிய இவர்களின் பெருமையை எடுத்துச் சொல்ல வார்த்தையேது? இவை உன்னதமான , உயர்ந்த வாழ்வியற் பண்புகள் அல்லவா?

ஒருவர் செய்த உதவியை ஒருபோதும் மறக்கக் கூடாது என்பதையும் வேண்டிய உதவியை வேளையறிந்து செய்யும் போது அவ்வுதவியின் பரிமாணம் பூமியை விடப் பல மடங்கு பெரிதாகின்றது. என்னும் வாழ்வியற் பண்பை உணர்த்திய கர்ணனும், கும்பகர்ணனும் என்றும் எம் நெஞ்சை விட்டகலா கதாபாத்திரங்களே.

**"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தில் மாணப் பெரிது"**

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழி, வாழும் மொழி, வாழ வைக்கும் மொழி.

"அறிவினால் ஆவதுண்டோ பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றக்கடை" என்று வினா எழுப்புகின்றான் வள்ளுவன். ஒருவன் பிற உயிர்களின் துன்பத்தைத் தனக்கு நேர்ந்த துன்பம் போலக் கருதி அவ்வுயிர்களை அத்துன்பத்திலிருந்து காப்பாற்றாவிட்டால் அவன் பெற்ற அறிவினால் யாது பயன்? ஒன்றுமில்லையே. இதனையே,

**ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்**
**ஓங்கிடு மாறுவ ருந்துதல் - யாகம்**
**போருக்கு நின்றிடும் போதும் - உளம்**
**பொங்க லில்லாத அமைதிமெய்ஞ் - ஞானம்**

என்று புதியதோர் பாணியில் புகழுகின்றான் புதுமைக் கவிஞன் பாரதி.

இவ்வாறு தமிழிற் தோன்றிய இலக்கியங்கள் பலவும் மனித வாழ்வியற் பண்புகளைப் போதிப்பனவாகக் காணப்படுகின்றன. இவை தனிமனித வாழ்வைச் செப்பனிட்டு, இல்வாழ்வில் ஈடுபடுத்தி, சமூக வாழ்வில் செம்மைப்படுத்தி, தேசிய வாழ்வில் மலர்ச்சி பெறச் செய்து மரணத்தின் பின்னரும் சாகாவரமருளி நிலையாக வாழ வழி வகுக்கின்றன. ஆகவே தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியற் பண்புகளைக் கடைப்பிடித்து நாமும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

**வானதி செங்கதிர்ச்செல்வன்**
யாழ் இந்து மகளிர் கல்லூரி
தரம் - 11
"கலைத்திரள்" போட்டியில் முதல் பரிசு பெறுகின்ற கட்டுரை



# தமிழ் தாயே....!!

நா னுணர்ந்த தேவதையே – என்
நா தவழும் நாவரசியே!
நான் மொழிந்த முதல் வார்த்தை நீ – உன்
நலம் கலங்க கடியானேன் தாயே!
பிறர் வழியு மனுமதித்தாய் – உன்னை
புறம் பேச வமைதி கொண்டாய்
சொல் முத்தே பவளமே வைரமே – நீ
சொல்லாத வமைதி யது சிலைத்தங்கம்
மனம் மகிழும் கவியே – தமிழ்
மழலைக்கு தாய் மொழியே!
சினம் கொள்ளா சீதையே – என்
சிரம் கொண்ட சிந்தனையே
கலைக் கோலம் பலவாய் – என்
களம் கொண்ட புவிக்கோளம்
ஆழ் கருத்துச் சமுத்திரமே – நீ தான்
ஆதியில் அகத்தியம் தாயே!
வழி வழியாய் வந்த கலாசாரமே – உன்
வாழ்வுதனி லெனக் களித்தாய் வாழ்கையுமே!
மூதாட்டி யானாலும் நீ யழகு – உன்
முது குடைந்து போயிடினும் வாழ் வழகு!
நல் வார்தை பல கொண்ட வுன்னை
நான் வாழ்த்த சொல் தேடியலைகிறேன்
ஈசன் மகன் காக்க எண்ணு மிளவரசியே!
ஈன்றவளின் செல்லமே யென் தாயே!!

**ஜயசங்கர் தனுசன்**
3ம் வருடம்
தொழில்முயற்சியும் முகாமைதுவமும்

# ஆசை நாயகனின்வருடலிலே...



மெல்ல இமை திறந்து
வானரங்கள் மெய் சிலிர்க்க
கலவி மயக்கம் கலையாத
பூமியின் மேனி
புல்லரித்துப் போகிறது
ஆசை நாயகனின் வருடலிலே
நில மடந்தை
நாணிக் கிடக்கிறாள்;
"போதும் எழும்பு" என்று
கோவில் மணி தட்டிக்
கேலி செய்கிறது

மார்கழி மாத குளிர் மேகம் வந்து
மஞ்சள் பூசிக் குளிப்பாட்டி விட
நீர் சொட்டும் கூந்தலிலே
முற்றத்தில் பூத்த மல்லிகையை
அள்ளிச் செருகி
அழகாய் வருகிறாள்
கண்ணுள்ள எல்லோரும் பாருங்கள்
எம் தாய் மண்
எவ்வளவு அழகானவள்!

உடல் கீறி விதை போட்டால்
உரமின்றி மரமாகும்
கடல் மீது வலை போட்டால்
கரையெங்கும் மீனாகும்
இவளின் சேலையைப் பற்றி
இந்தா ஒருவன்

தெருவில் இழுக்கிறான்
பார்த்து விட்டுப்
படுத்துறங்குபவனே!
நன்றாய் உறங்கு

உனக்கும் நெருப்பூட்டி தணலாக்க
அவனுக்கு வசதியாய் போகும்
"ரோஷ" நரம்பை
யாருக்கு விற்றுவிட்டு
பேசாமற் கிடக்கிறாய்?

**த. திவியா**
**துரைசிங்கம்**
கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
3ம் வருடம்



# பல்கலைக்கழக வாழ்வு

பலதேச பிள்ளைகள் நாம்
கூடுகின்றோம் பல்கலையில்
அறிந்திரா புது இடம்
தெரியாத பல முகம்
புரியாத மொழியில் இங்கே
தொகையான விரிவுரைகள்
பள்ளிதனை நினைவூட்டும்
சலிப்பேற்றும் ஒப்படைகள்
அவியாத கறிகளுடன்
வெண் சாத சோறு இங்கே........
தெரியாத சமையலையும்
கற்றுவிட்டோம் அனைவருமே
அடுக்கடுக்காய் பண்டிகைகள்
அதில் தோன்றும் ஒற்றுமைகள்
பாடலும் ஆடலுமாய்
நடுநடுவே நாடகங்கள்
இடையிடையே மோதலுடன்
அலுக்காத அரட்டைகள்
மகிழ்வான சுற்றுலாக்கள்
தெவிட்டாத வாழ்வு என்றால்
உண்மையிலே பல்கலைதான்
நினைவுகளில் நிலைத்து நிற்கும்
நிலையில்லா இன்பம் இது......

**ஷயா கிருபானந்தம்**
கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
3ம் வருடம்



# பெண்விழியின் காத்திருப்பு

நம் இருசோடி விழிகளில் - இருவிழிகள்
இயற்கையில் சந்தித்திருக்கலாம்
கூறிய நிகழ்வது இறந்தகாலமதில்
நிகழாமல் இருக்கலாம்........

கண்ணாடியில் என்முகம் - என்
கண்கள் பார்த்ததுண்டு
உன் கண் எனும் ஆடியில்
புதிதாகவொன்றும் தோன்றப்போவதில்லை

உன் ரசனையின் விளிம்பை
நான் எட்டாமல் இருக்கலாம்
என் ரசனை ரசிக்கும் அளவிற்கு மனம்திற
நானும் உன் விழியில் அழகாவேன்

என் மனம் தூய வெள்ளை என்று
உன்னிடம் பொய் உரைக்கப் போவதில்லை
நானும் பெண் என்று உணர்த்தும் அளவில்
என்னுள்ளும் சலனங்கள் இருந்ததுண்டு

அவை உனக்கான தேடல்களின்
ஆரம்பமாக இருந்திருக்கலாம்
உன் மனதில் கொஞ்சம் இடம் கொடு
உன் மனம் நிறைவாக அர்ப்பணிப்பேன்

உன்முகம் உரிமையாய் என்விழி நோக்கும் நாள்வரை
என்னுள் புதைந்திருக்கும் உண்மைகள் இவை

ஏனெனில் இதுவரையில் உன்முகம் என்னுள்
விடை பெறாத கேள்விக்குறி தான்
ஆயிரம் பதில்கள் உண்டு என்னுள் உனக்காக
கேள்விகள் கேட்பதற்காய் நீ வரும் வரை சேமித்து

ஆயிரம் ஆண்டுகள் உன்னோடு வாழும்
பேராசை இல்லை என்னுள்
அர்த்தமான வாழ்க்கையொன்று
அளவான ஆண்டுகளிலேனும் வேண்டும்

காதல் செய்து கவிபாடி சேரவாய்ப்பில்லை
காலமொன்றில் விதியினால் இணைவோம்
அதுவரையில் அழகான நினைவுகளுடன் காத்திருப்பேன்
என்றும் உனக்காக நான்................

**சாயினி மகாதேவா**

2ம் வருடம்
கணனி விஞ்ஞானமும்
தொழில்நுட்பமும்

# ஊவாவும் நானும்

பல்கலை என்றால்
பலகலை என்பார்கள்
எனக்கும் வாய்ப்பு கிட்டியது
படங்கள் பார்த்து பார்த்து
என்னுள்ளும் படங்களாக பல கற்பனைகள்
முதல் மூன்று மாதங்கள்
நகர முரண்டு பிடித்தன
கண்களில் கண்ணீரும்
மனங்களில் வெறுப்புமாக
முகாமில் இருப்பது போலே ஒரு உணர்வு
திடீரென வசந்தமாய் தென்றல் ஒன்று
பகலில் சாமாஜவில் சங்கமித்து
இரவில் குத்தாட்டமாக ஒரு குதூகலம்
பல்கலை தெரிவை சபித்த மனங்கள்
ஊவா என் சொந்தம்
என உறவு கொண்டாடின
காலங்கள் கழிந்தன
செமஸ்டர் செமை என்று இல்லாவிடினும்
பல நினைவுகள் மட்டும்
நெஞ்சுக்குள் விதைத்து கழிந்தது
ரிசல்ட் கள் கேட்பதை விட
மச்சி செட் ஆகிவிட்டன்
என்பதில் பெருமை கொண்டோம்
செனஸ்ட்டாவும் மியோனுமாக
தேய்ந்த பணப்பையை
அடு எடுத்து நிவர்த்தி செய்து கொண்டோம்
போர்டிங்,
எம்மையும் மதிக்க சிலர்கள்
என கால ஓட்டம் ஓட ஓட
அதனுடன் நாமும் சுற்றி கொண்டோம்

வெள்ளை கோட் உடன்
திரிந்த ஆய்வறைகளும்
அதற்காக விழித்திருந்து
பிரதி செய்த அறிக்கைகளும்
எங்களையும் விஞ்ஞானி
என உலகை நம்பிவித்ததாக ஒரு ஆனந்தம்
ஆனால் லைப்ரரி பக்கம்தான்
பார்க்கவில்லையே என
நெஞ்சின் ஓரத்தில் ஒரு கவலை
சிரித்து பேசிய பச்சைகஹாவும்
எமக்கென்று வாய்த்த சில சகோதர நண்பர்களுமாய்
எம் கூட்டங்களை கூட்டி கொண்டோம்
நினைத்த நிகழ்ச்சிகளை விட
நிகழ்த்திய நிகழ்ச்சிகள் அதிகமாக
மூன்றாம் வருடமும் முடிந்தது
தாலாட்டிய அன்னையை
அடிக்கடி அரவணைத்து
ஆனந்தம் காணும் குழந்தையாக
கேலரியில் காற்று வாங்கி கொண்டு
ஞாபகங்களை மீட்டிக் கொண்டோம்
முகபுத்தக பதிவாக இடும்
பாடசாலை வாழ்க்கையை மிஸ் பண்ணும் போஸ்ட்
இனி பல்கலையை மிஸ் பண்ணும் போஸ்ட்
ஆக மாற காத்திருப்பதாக எண்ணி
என்னைப் பார்த்து
அடிக்கடி நையாண்டி சிரிப்பை உதிர்கின்றது
அட்மினில் ரிப்பீட் காக நிற்கும் போது கூட
காணாத சோகத்தை
வாய்த்த என் வேலை வாய்ப்பு
வழங்கியதாக ஓர் எண்ணம்

**பாலசுப்பிரமணியம் நிருஜன் (பித்தன்)**
கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்
2 ம் வருடம்



# தமிழினை மறந்தால் என்னையே கொல்வேன்

தமிழ்
அது என் நேத்திரம்
என் சுவாசம்
தமிழ் இல்லையேல் எங்ஙனம் வாழ்வேன்

மனித நாகரிக ஓட்டில் வீழ்ந்த
முதல் அமிர்தத் துளி தமிழ்
இலக்கியக் கடலில் கிடைக்கும்
அதிசய முத்து தமிழ்

வள்ளுவத்தின் தாடிக்குள் வளர்ந்த
செந்தமிழ்
கம்பனின் கைகளில் தவழ்ந்த பைந்தமிழ்
ஔவையின் நாவினில் நடந்த
மெய்த்தமிழ்
புவி உடைந்தாலும் அழியாதெம்
மூத்த முத்தமிழ்

திரைகடல் நீந்திடும் படகிலும் ஆடும் - மறவர்
வெஞ்சமர் ஆடிடும் வாளிலும் வாழும்
கலைகளின் கூடத்தில் பரதங்கள் ஆடும்
மாற்றானின் நாவிலும் இன்பக்கூத்தாடும்

தமிழின்றி எனக்கொன்றும் பெரிதிங்கு
இல்லை
தமிழ்பேசாத் தமிழர்கள் மனிதர்கள்

இல்லை
பிரபஞ்சத் தொலைதூரம் அதுவே தமிழ்
எல்லை
தமிழ் கற்றுக் கொடுத்துப்பார் கதைபேசும்
கிள்ளை

உறங்கிடும் போதினில் தாலாட்டுப் பாட்டு
உலகத்தை துறக்கையில் ஒப்பாரிப்பாட்டு
புறங்கூறும் மனிதர்க்கு அறம் சொல்லும் பாட்டு
பூமியில் தமிழ்போல் ஓர் மொழி உண்டா காட்டு

தமிழ் பற்றி பேச எத்தனிக்கையில்
சந்தங்கள் பிறக்கிறது
தமிழ் பற்றி பேசினால் சொந்தங்கள்
கிடைக்கிறது
தமிழுக்குள் மட்டும்தான் புதையல்கள்
கிடக்கிறது
தமிழ்நூல்கள் படித்துத்தான் உலகமே
நடக்கிறது

தமிழனாய் போராடி
உரிமையை வெல்வேன்
தரணியில் தமிழாலே
கவிதைகள் நெய்வேன்
மரணத்தின் வரையிலும்
தமிழ் புகழ் சொல்வேன்
அதை மறந்திடும் நிலை வந்தால்
என்னையே கொல்வேன்

**பவதுஜா விஜயபவன்**
3ம் வருடம்
கைத்தொழில் தகவல்தொழில்நுட்பம்



# மலைநாட்டு வனப்பு

இலங்கையின் கலையகமாய்
திகழ்வது மலையகமே,
விண்மீன்கள் தூவிய
ஆகாய ஆடையணிந்து,
வெண்ணிலாவை மேகமெத்தையில் தள்ளும்
கங்கை கொண்ட நங்கை இவள்,
விழுந்து தவழும் அருவிகளும்
எழுந்து பறக்கும் குருவிகளும்,
விண் பனி அள்ளிக்கொட்டும் காலையும்,
வெண் குருதி அள்ளி இறைக்கும் வேலையும்
அடுக்கடுக்காய் வைத்த தேயிலையும்
அன்றாடம் காணாத வெயிலையும்
உயர்ந்து வளர்ந்த மரங்களும்
மனம் கவர்ந்து பழகும் மனிதர்களும்
மாதாந்தம் கிடைப்பதில்லை ஊதியம்
ஒருவேளை கிடைத்ததில்லை பட்டினி
காணாத அதிசயங்கள் பல இங்கே
தேனாக பாய்ந்தோடும்,
பேனாவை கொண்டு இங்கு
அதை எழுத முடியாதே..

**குபேதினி இராஜேந்திரன்**
தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்
2ம் வருடம்.



# தாயே உன் பெயர் சொல்லும் போது ....

இன்னல்கள் பல வந்தபோதும்
எதிர்த்து நின்று போராடி
இயன்றளவு நல்வாழ்வை
இவ்வுலகில் எமக்களித்த
பெருமைக்குரிய நாயகியே
என்னைப் பெற்றெடுத்த உள்ளமே
பெயரோடும் புகழோடும்
நீ வாழவேண்டும் பல்லாண்டு காலம்

தஞ்சமென்று வந்தோரை
இன்முகத்தோடு வரவேற்று
பஞ்சமென்று கூறாது
கஞ்சியாவது கொடுத்து
நெஞ்சைக் குளிரவைத்த
எளிமைக் குணம் படைத்த
இரக்கமுள்ள என் தாயே
நீ வாழவேண்டும் பல்லாண்டு காலம்

நித்தமும் நீ விழித்தாய்
நிம்மதியாய் நாம் வாழ
இமைகள் தூங்கிய போதிலும்
இதயமது தூங்காது
இளமைக்காலங்களை
எமக்காக சமர்ப்பித்த
என் உயிரிலும் மேலான தாயே
நீ வாழவேண்டும் பல்லாண்டு காலம்

அன்னையின் புகழ்பாட
கவிஞர்கள் பல உண்டு
அவரவர் கவிதைகளில்
அர்த்தங்கள் தான் உண்டு
அத்தனை முத்தையும்
அன்னைக்காக கவிபாட
ஆசிகள் தந்து எனை
ஆளாக்கிய அன்புத்தாயே
நீ வாழவேண்டும் பல்லாண்டுகாலம்

அன்னையின் அன்பிற்கு
ஆறாத காயமும் மாறிவிடும்
ஆலயம் செல்லாத போதிலும்
தாயின் பாதத்தை எந்நாளும்
பக்தியோடு நாம் தொழுதால்
நம்பிக்கை உள்ளோர் வாழ்வில்
நன்மைகள் பல உண்டு
இவ்வுலகில் எந்நாளும்.....
நன்றி

**பிரேமிக்கா ஞானச்செல்வம்**
கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்
முதலாம் வருடம்



# விடியலுக்கோர் சிந்தனை

சித்திரவானில் சிறகடிக்கத்துடிக்கும்
சிகரம் தொட்ட சிந்தனைகள்
சிலைவடிவம் பெறுவதற்குச்
சிறிதளவும் தாகமில்லை - இச்
சிறைவடிவ வாழ்க்கையிலே
உலகியலின் போதனையோ
உளமதனில் வேதனையோ
உலவுகின்ற நடைமுறையில்
துமியளவும் ஈரமில்லை - என்
இளமனதின் பார்வையிலே.....

சீரோடு சிரம் நிமிர்த்தி
திறம் வாழ உருவகித்து
உலகிற்கு உனை உவந்த
உவமையிலா உறவுகளோ
நீரோடும் கண்ணோடு
நினைவுகளை மீட்டும்
நிறைவற்ற இல்லமே நிலையாக
கவி வடிவில் நயப்பதற்கே
கலங்குகிறது நெஞ்சம்
கலியுலகின் விந்தையிலே
கதறல் கூட ஒரு கலைதான்

காவியங்கள் கார்முகிலைக்
காணவந்த காலமதில்
காலைக்கதிரோனின் கச்சேரியோடு
காத்திருந்து கண்விழித்து

காற்றோடு கைவீசி
கடுகளவே வரவோடு
கனமறியாது கண்சிமிட்ட
காத்திருந்த சொந்தமெல்லாம்
கண்டகதை பேசி
கள்ளத்தன நிலவோடு
கவிபாடி உறவாடும்

இன்பமது என்றறியா
இரும்புருவம் தரித்து
இன்றைய நம் இயங்குதலோ
இயந்திரமாய்த் தொடர்கிறது
இனிவளரும் துளிர்களுக்கும்
கிளைவிலகும் சிதறலையே
இரக்கமின்றிப் பரிசளிக்கும்
நிறைவுறைந்த கலசம் இது

சொந்த நிலம் முகர்ந்து
செந்தமிழின் பெருமையுடன்
சிந்தை தனில் வெளிவந்த
சிறைவடிவை சிறைபிடிக்க
சிவந்தெரியும் செங்குழம்பின்
சுடராக சிலிர்த்தெழுந்து
உறைந்த கலசமதன்
உருகுநிலை காண
உணர்வுகளை உரப்படுத்தி
உறவுகளில் வெளிப்படுத்து

**சி.தர்சினி சிவராசா**
தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்
இரண்டாம் வருடம்



# கல்விப் பயணம்

அகவை ஆறினிலே பள்ளி
சென்ற ஞாபகங்கள்
பசுமையான என் மனதில்
அம்மாவும் வரவேண்டும்
இல்லையென்றால் போகமாட்டேன்
அடம் பிடித்த ஞாபகங்கள்

இரட்டை றூள் கொப்பியிலே
எழுத வேண்டும் என்று சொன்ன
ஆசான் கட்டளைகள்
என்னால் முடியவில்லை
என்றழுத ஞாபகங்கள்

ஓரிரு மாதங்களில்
எல்லாம் அத்துப்படி
அழகாக எழுதிவிட்டு
விரைவாக காட்ட
ஓடிய ஞாபகங்கள்

வருடம் ஒரு நாடக அரங்கினிலே
வகையான பாத்திரங்கள்
நரியாக சிங்கமாக
நயமாக ஆடி
மகிழ்ந்த ஞாபகங்கள்

விளையாட்டு போட்டியிலே
வீறாப்புடன் போட்டியிட்டு
வண்ணத்துப் பூச்சிகளாய்

அழகாக ஆடியதை
ரசித்த ஞாபகங்கள்

தரம் 5 வகுப்பாச்சு
*Scholarship* என்று சொல்லி
காலை மாலை வகுப்புக்கள்
கனக்கச் சோதனைகள்
எழுதி வென்ற ஞாபகங்கள்

பெரிய *School* போயாச்சு
கனக்கப் பாடங்கள்
போட்டி போட்டுப் படித்து
மேடையேறி றிப்போட்டை *(Report)*
வாங்கிய ஞாபகங்கள்

*O/L* பரீட்சையிலே
*9A* யார் எடுப்பார்?
என்ற வினாவுக்கு
சரியான பதில் கொடுத்து
குதூகலித்த ஞாபகங்கள்

உயர்தரம் என்றால் சும்மாவா?
பரந்த பாடப்பரப்பு
படித்துப் படித்துப்
பயிற்சிகள் பலசெய்து
வெற்றி கண்ட ஞாபகங்கள்

பல்கலைகழக அனுமதிக்காய்
காத்திருந்த வேளை

நல்ல செய்தி அறிந்து
நண்பர்களுடன் பகிர்ந்து
மகிழ்ந்த ஞாபகங்கள்

உயர் கல்வி பெற
பல்கலைகழகமெனும்
பசுமையான சோலையில்
காலடி எடுத்து வைத்து
புதிய சூழல் புதிய முகங்கள்
பரபரப்பாய் இருந்த ஞாபகங்கள்

வீட்டினைப் பிரிந்து
விடுதியிலே இருந்து
புது அனுபவமாய் நண்பர்களுடன்
பலவும் பேசி
மகிழ்ந்து கொண்ட ஞாபகங்கள்

நாம் கற்கும் நெறியை
கருத்தூன்றிக் கற்று
எல்லோரும் வெற்றி பெற்று
நாட்டின் நற்பிரஜையாய்
வாழப்போகும் ஞாபகங்கள்

வாழக் கல் வாழ்நாள் முழுக்கக் கல்
என்பதற்கு அமைவாய்
கசடறக் கற்று கற்றபடி ஒழுகி
வள்ளுவர் வாக்கைப் போற்றி
வாழ்வோம் வளமாக என்றென்றும்

**அர்ச்சனா குமாரசுவாமி**
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
முதலாம் வருடம்



# அவள்

வெற்றிலையோடு சுண்ணாம்பு தடவி
வாயிலே போட்டு அரைத்து
உதட்டுக்கு சாயம் பூசிக் கொள்கிறாள்
முதுகிலே வாழ்க்கை சுமக்கும்
இரண்டாவது கர்ப்பப்பை மாட்டிக் கொள்கிறாள்,
காலணி தவிர்த்துக் கொள்கிறாள்
பச்சை மேடுகளில் வாழ்க்கை சுமை
தாங்க வளைந்து கொள்கிறாள்

இவள் விழிப்பது சூரியனுக்கும்
தெரியாது!
நிர்வாண பாதங்களை முத்தமிட தடை
என்று முட்களும் உணராது
துளிர் பசி தீர்க்கும் முதுகு கூடையும்
இவள் பசி அறியாது
இன்றைய நாள் நிறுக்கும் தராசு
இவள் மனப்பாரம் பாராது.

இரத்தம் கேட்கும் அட்டை கடிக்கு
உதட்டுச் சாயம் மருந்தாகும்
காற்கொள்ளளவு வயிற்று பசிக்கு
அறுகம்புல்லு விருந்தாகும்
மலை வடுக்களில் ஊடுருவும் கன்னி
நதி வரண்ட தொண்டைக்கு
மழையாகும்
இலை விற்று பெற்ற பணம் நாளை

கைசெலவிற்கே கணக்காகும்.
காலம் காலமாய் கடந்து போகும்
கஷ்டங்களை.........
மாற்றங்களோடு கைகோர்க்கும்
காலங்களும் மாறவில்லை
நாடளாவிய பதாதை போராட்டங்களும்
மாறவில்லை
தேர்தல் காட்டில் வாக்கு
வேட்டையாடும் அரசியல்வாதியும்
மாற்றவில்லை
கல்வி ஒன்றே மாற்றும் பேராயுதம்!

**சசிதரன் செந்தூரன்**
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
நான்காம் வருடம்



# உனக்கான என் தேடல்

உனக்கான என்தேடல் என்றும்
எனக்குள் உனக்காய்
உயிருள்ளவரை அல்ல உலகம் உள்ளவரை
என்றும் உண்மையாய்

பேசும் அன்பை விட பேசாத
ஊமையன்பு - என்றும் எனக்குள்
உனக்காய் காலமுள்ளவரை
காவியமாய் என் நெஞ்சில்

காலம் மாறும்
வாழ்க்கைச் சக்கரங்கள் சுழலும்
உனக்கான என் தேடல்
என்றும் எனக்குள் உனக்காய்

விதியின் ஆட்டமது
முடியும் நேரம்
புரியாத அன்பும்
புரிந்தே போகும்

புரிந்தாலும் கரைசேரா அன்பு
கனவாகிப் போகும்
என்றும் நமக்குள்
நமக்காய்!!!

**துர்க்காயினி இராஜகுலேந்திரன்**
2ம் வருடம்
நீர்வாழ் வளங்களும் தொழில்நுட்பமும்



# குப்பைத் தொட்டிக் குழந்தை

கடந்து வந்த விழிமூடா இரவுகள்
தழுவிப் புதைந்த தோல்வித் தடயங்கள்
வரையறுக்கப்பட்ட விதி முறைகள்.
அத்தனை சுலபம் இல்லை என்று அறிந்தும்
உடைத்தெறிய முனைந்து தோற்றுப் போன நரக நிமிடங்கள்.
பசி என்ற விசம் அருந்தி
உயிர் வாழ எத்தனித்த அனல் பொழுதுகள்..
மரணம் கூட என்னை அரவணைக்க மறுத்த தணல் நிமிடங்கள்..
அத்தனை தடங்களையும் அழித்து என் அடையாளம் மாற்ற வேண்டிய
முனைப்பில் நகர்கிறேன்.
என்னைப் போன்றவர் நிமிரவும்
என்னை மறுத்தவரை அறியவும்
உள்ளூர உறுத்தும் தவிப்பை துடைத்தெறியவும் வேண்டிய
இறுக்க நிமிடங்களில் நான்.....
பசித்தவர் புசித்ததில்
எஞ்சிய நான் என்ன தவறிளைத்தேன் என இன்று வரை புரியவில்லை
புரியவே இல்லை!!
இருந்தும் உரிமையை மீட்க வேண்டிய கடமையில் நான்..
கடந்து வந்த காலம் கசப்பானது
வரப்போகும் நாட்கள் நெருடலானாலும் சரி அதைக் கடந்து
என் விதியை திருத்தி எழுதும் நம்பிக்கையில். ...
நான்..
இப்படிக்கு
குப்பை தொட்டி குழந்தை

**ப.துஷாந்தினி பவளகந்தராசா**
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
மூன்றாம் வருடம்



# விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட.....

புவிதன்னில் பிறந்துவிட்டேன்
நெடுகாலம் கடந்து விட்டேன் - இருந்தும் ஏனோ
விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட

மழலையர் தம் கொஞ்சும் பேச்சை கேட்கையிலே
குலுங்கல் சிரிப்பை பார்க்கையிலே
குறும்புத்தனம் கண்டு ரசிக்கையிலே
இன்றெனக்கு கிட்டா வரம் கண்டு சிலிர்க்கையிலே
விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட

நிதம் நிதம் உதித்திடும் ஆசை, அவா, மோகம்
அதன் பின்னே துரத்தி வரும் சோகம்
மனதில் கனக்கும் பெரும் பாரம்
முகங்காட்ட முடியா சங்கடமான நேரம்
விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட

ஈரைந்து மாதங்கள் இருளோடு இருந்தாலும்
தாயின் கருவறை போல் கண்டதில்லை ஒரு ஸ்வர்க்கம்
மீண்டும் அப் பொன்னான பெட்டியிலே
பொக்கிஷமாய் உறங்கிட
விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட

அன்னை மடியினில் அலையாய் தவழ்ந்திட
தந்தை தோள் ஏறி சவாரி செய்திட
அக்கா அண்ணாவின் அன்பில் கரைந்திட

இறைவனின் இனிய வரமாய் திகழ்ந்திட
விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட

கவலைகள் அன்று எனக்கில்லை
கடமைகள் ஒன்றும் இருக்கவில்லை
வருடங்கள் எண்ணி அஞ்சவில்லை - ஆனால்
அந்த நிலை இன்றில்லை - அதனாலோ என்னவோ
விரும்புகிறது மனம் மீண்டும் மழலையாய் மாறிவிட

விரும்புவதால் திரும்பாது என் மழலைப் பருவம்
அறிவுக்கெட்டிய இந்த உண்மை மனதுக்கு
மட்டும் புரியாதது ஏனோ?
என்னதான் சொன்னாலும் அடம் பிடிக்கும்
மனம் மட்டும் விரும்புகிறது
மீண்டும் மழலையாய் மாறிவிட......

**மதுமிதா சாமிவேல்**
கைத்தொழில் தகவல்தொழில்நுட்பம்
முதலாம் வருடம்



# நான் கண்ட மலையகம்

பல்கலை அனுமதி பெற்ற மகிழ்ச்சிதனை
இருமடங்காக்கியது நான் போகவிருந்த சூழல்
பெற்றார் உற்றார் விட்டு பிரிந்து
மனதினில் அச்சம் ஏந்திச் சென்றபோது
தாயென தாங்கியதுவோ இம்மலையகம்

கண்கள் எட்டிடும் தூரமெங்கும்
பச்சைத்துயில் அணிந்தாற்போல் மலைத்தொடர்கள்
அவற்றினை முத்தமிடப்போட்டியிடும் மேகங்கள்
மெய்தனில் பட்டும்படாமல் பொழிந்திடும் பனிச்சாரல்
என்னை தன் அடிமையாக்கியதன் மாயமென்னவோ?

தேயிலை தோட்டம்தனில் கொழுந்து கொய்திடும்
பெண்டுகளின் அழகினை கவிபாடாதோர் உண்டோ பாரினில்?
தொட்டிலினில் உறங்கிடும் சுகம்தனை தந்திடுமோ
மலையை ஊடறுத்து சென்றிடும் சிக்குபுக்கு ரயில் பயணம்

பெற்றவளின் வதனம் காண ஏங்குகையில்
சொக்க வைக்கும் தன் அழகினில் தாயன்பை காட்டிநின்று
மரஞ்செடிகளை ஆதரவாய் அசைவித்து
நிலாவொளியில் நனைய வைத்து
கவர்ந்திட்டதோ எனை தன்வசம்

மருதம் காட்டிநின்ற அழகினில் துகிலாகியது என் கர்வம்
தேடிநின்ற என் காதல்தனை கண்முன் காட்டிநின்றதுவோ இம்மலையகம்
இத்தனை வரங்களையும் கவிதனில் நான் கூறிட செய்த
நான் அனுபவித்த மலையகத்திற்கு என் நன்றிகள்...

**ஆன்.டிலக் ஷனா**
கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
மூன்றாம் வருடம்



# என் உயிர்த் தமிழே

தமிழ் என்ற சொல்லிற்கு தரணியில் நிகரில்லை
தாயின் வடிவத்தை தமிழே தந்திடும்
ஏராளமான மொழிகள் இங்கு இருப்பினும் - இம்
மொழி போல் எங்கும் காண்பதரிதே

எத்தனை மொழி நான் பார்த்த போதும்
இம்மொழி யாம் பெற்ற இன்பமொழியன்றோ
எழுதுகின்றேன் என் தமிழ்மொழிக்காய்
எல்லையற்ற என் தாய் மொழிக்காய் ஓர்கவி

வடமொழியடைந்த மாயவறைக் கதவினைத்
திடமுடன் திறந்த தேன்மொழி என்
செம்மை வாய்ந்த செம்மொழி
சத்தியம் செய்வேன் அதுவே என் தமிழ்மொழி
தில்லையிற் கண்ட திருமொழி என்றே

மண்ணிற் பிறந்த முதல்மொழியாம்
எழுச்சி இலக்கிய முதல் மொழியாம்
சோதி மிக்க நிறை மொழியாம்
நீண்ட வரலாற்றின் தனி மொழியாம்
எம் செம்மொழியாகிய தமிழ்மொழியே

விண்கொண்ட நிலவில் தண்வந்து சூழ்ந்து
தமிழ் நெஞ்சங்களில் தங்கக் கிரீடமானாய்
அழகான பண்பாடு தந்த ஆருயிர் மொழியே
உன் பண்பாடு மாறா! எங்கள் தமிழ்ப் பண்பாடு வீழா!

**சசிகலா அம்பலவாணர்**
1ஆம் வருடம்
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பமும்



# மலையக வாழ்வு

விழிக்குவிருந்தாய் தோன்றிவிடும்
வானுயர்ந்த குன்றுகளும் அவற்றைத் தொடரும்
விழிக்கு மருந்தாய் தோன்றும்
மண் கிழிக்கும் குழிகளும் சிறப்பாய் வியம்பிடுமே
மலையோடு மலையாகி பின்னே
மண்ணோடு மண்ணாகும் நம் மலையக வாழ்வை

நம் மனை உலவும் பஞ்சங்கள் மறந்து
தஞ்சமெனவரும் உறவுகளுக்காய்
மண் தோன்ற முன்னே தோன்றிய தமிழ் பண்பாட்டின் வழியே
விருந்தோம்பி நெஞ்சம் கவர்ந்திடுவோமே

விண் எட்டும் மலையெங்கும் வட்ட மேசை மாநாடு நடந்திடுமாம்
மண்தொட்டு வளரும் தேயிலைச் செடிகள்
வரிசையாய் கொழுந்துகள் தன்பாட்டிலிருந்திடவே
கரிசனையாய் வந்து குழப்பம் செய்திடுமாம் தென்றல்
இலையோடு இலை உரச புதிய கானமொன்று எழும்பிடுமே
கடும் மழையோடு குளிர் இணைய பனிமூடும் நம் மலைநாட்டிலே
கற்பாறை மனதிலும் சிறு ஈரம் தோன்றாமல் போய்விடுமா?

சிக்கனமாய் வாழ்ந்து செல்வமொன்றும் சேமிக்கவில்லை
பக்குவமாய் பழகி பல மனங்களைச் சேகரித்துள்ளோம்
முன் அறிவிப்பெதுவுமின்றி அத்துமீறி நுழையும் அரக்கனாம்
நம் மலைநாட்டின் துக்கம் மண்சரிவு
அப்போது உதவிகளில் உணர்ந்து கொள்வோம்.
நாம் சேமித்த ஈரமுள்ள மனங்களின் மகிமையை
எம் வாழ்வின் பயணங்கள் வெளியே கரடுமுரடாகத் தோன்ற
சேற்றுக்குள்ளும் சில செந்தாமரைகள் இருக்கத்தான் செய்கின்றன.

**சாயினி மகாதேவா**
2ம் வருடம்
கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# தாயே! என்ன பிழை செய்தோம்?


"வெள்ளி முகில்கள் வெறியோடு முத்தமிடும்.
அள்ளி வரும் மழைச் சாரல் கல்லுக்கும் உணர்வளிக்கும்
கதிரவன் இருள் குடிக்க
வெள்ளி நிலா விளக்கேற்றும்

நெடுநல்வாடை நீர் தழுவும்
பூவாடை காற்றில் எழும்
தேன் சுவையின் நீராறு
என்னோடு கூட வரும்
தேயிலைச் செடிகளிடை
பனித்துளிகள் படர்ந்திருக்கும்
மண்மேட்டின் மடிகளிடை - எம்
வதிவிடங்கள் தொடர்ந்திருக்கும்
சந்தங்கள் சங்கமிக்கும் கலையகம்
அதுவே நம் நாட்டின் மலையகம்"

அகதியாய் வந்த எமக்கு
அகமொன்று கொடுத்தாயே! - அவ்
உரிமைக் கடன் தீர்க்க
எம் உயிரை எடுத்தாயோ?
"தாயே! என்ன பிழை செய்தோம்?"

மண்படை உமக்கு ஏன்பிரிவு?
மாதம் ஏன் இந்த மண்சரிவு?

# பதிவுகள் - 2016








மலைத்தென்றல்





# பதிவுகள் - 2016







மலைத்தென்றல்







T.P : 021 222 6972
Fax: 021 222 8869
சாரங்கா
நகைமாடம்
& நாணயமாற்று சேவை
இல.157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


SOBA
Tex
T.P : 055 222 3409
NO.221, Lower Street, Badulla


Sun
Wedding Cards
No: 44A, 1St Floor,
Sri Kathiresan Street,
Colombo-13, Srilanka.
T.p: +94-11-2433641
+94-11-2334287
Mobile: +94-758000995


வெலிகம
ஸ்டோர்ஸ்
Weligama
Stores
Anchor
UHT Whipping Cream
NO-38,South Lane. Badulla
T.P-055-2223942


## Aathithya Printing & Signs

Print is our business


# DIGITAL PRINTING & OFFSET PRINTING

**PHONE** - 0552228676
**MOBILE** - 0777938936
**EMAIL** - aathithyaad@gmail.com
**ADDRESS** - AATHITHYA PRINTING & SIGNS,
#226/11, MODERN COMPLEX, BADULLA.


மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்
කඳුරට අධ්‍යාපන සංවර්ධන සංගමය
UPCOUNTRY EDUCATION DEVELOPMENT SOCIETY
UEDS
Reg. G.A. 2341
கல்விக் கண் திறப்போம்
கற்போருக்கு கரம் கொடுப்போம்
No. 189, Sea Street, Colombo 11. Tel : +94 11 2424886 / 2444339
E-mail : arivoliorg@gmail.com Web : www.arivoli.org
Find us on facebook




V Visvam
Traders
No. 29-31 Lower Street
Badulla
T.P : 055 2222674


E.V.KARTHIGESU
305,Main Street,
Passara
T.P.: 055 2288346





Genuine
Restaurant
No. 421, Passara Road,
Hindagoda, Badulla
T.P : 0777 12 99 03,
077 5180 608


No. 226/10,
Lower Street,
Modern Complex,
Badulla
T.P : 055 2230 587
Ajantha
Jewels


"மலைத்தென்றல் 2017"
சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்
Official Sponsor for
கண் வழியே
2017
Clickr
Beyond the limit..
I AM CLICKR
077 749 0063



Jeha
Electricals
No. 11 Thanankillappu Road
Chavakachcheri
T.P : 021 227 0910, 021 227 0160
Fax : 021 227 0819


22 CT Gold Jewelllery
T.P : 055 228 8385
071 429 1705
Colombo
Jewellery

# Subrams
## Electronic



Radios, Radio/Cassette Recorder,Tv
Sewing Mechines,
Electrical Sccessories,
Electronic Spare,Parts Sales & Service






No189,Lower Street.Badulla


055 2222651, 0776399200,


0777613413


Sujee Mobile
Technologies
All kind of Phone Selling
and Repairing
No. 226/6 Modern Complex, Badulla
055 22 25 410



T.P : 055 222 3595
072 955 1717
Ramya
Communication
No : 226, Lower Street,Badulla.


New
Royal
forage Stores
No. 235, Lower Street
Badulla
T.P : 055 222 2452



NAGARAJAH
CORPORATION
Transport
Agents &
Gas
Dealer
CALOR Gas
47 kg Propane
PATIO GAS
320,Main Street,
Passara
T.P.: 055 88113




Mayoora
Gift Center & Distributers
Geft Center:
No 14, New Market,
Power House Road, Jaffna
Distributers:
No 25 First Floor, New Market,Power House Road, Jaffna
Power House Road, Jaffna
T.p: 021 222 2084
Fax: 021 222 9151,
Mobile: 0777 747095


SRI LAKSHMI
BANKERS
276B,Main Street,
Passara
T.P.: 055 88221





Manila
Jewellery
Dealers in 22 Kt Gold Jewellery
No. 273, Main Street,
Bandarawela
T.P : 057 222 3562


New
KING JOY
Food Center
No. 40 Cocowaththa Road Badulla
077 199 4971


Sambusa
Hotel
No. 9 Mosque Road
Badulla
T.P : 055 222 8222, 0777615712


Mahindas
Book Center
Whole Sales & Retails of All Kind of
Educational Books, Office, School Stationary
& Eqpment, Ornament, Toys, Watchers
T.P : 055 223 0109
Fax : 055 223 0110
Mob: 077 632 0800
E mail: mahindarajm@gmail.com
No.50, Bazaar Street,
Badulla








நன்றி

விழாக்குழு

மலைத்தென்றல் 2017

ISBN 978-955-0481-16-3

9 789550 481163

தேவி Printers. Jaffna

021 300 3030